Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் – 28 | விலை – 30 ரூபா  செய்தி : 021 493 0000  விளம்பரம் : 021 493 1111

சுடர் :35  கதிர் :62  தை 13ஆம் நாள் திங்கட்கிழமை 27 ஜனவரி 2020  வள்ளுவர் ஆண்டு 2051



**முச்சந்தி முரளி**

உந்த முகக் கவசம் போட்டால் கொள்ளைக் காரன் ஆர், வருத்தக்காரன் ஆர் என்டு கண்டுபிடிக்கேலாமல் போகப்போது பாருங்கோ...!

# எப்போதும் சம்பந்தர்தான் கூட்டமைப்பின் தலைவர்!

## கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவிப்பு



கொழும்பு, ஜன. 27

இரா.சம்பந்தன், கட்சியை வழிநடத்தக்கூடிய ஆற்றல் இருக்கும் வரைக்கும் சுகதேகியாக இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக அவரே செயற்படுவார். அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்துக்களும் கிடையாது. அவருக்குரிய ஆற்றலும் அனுபவமும் இப்போது வேறு எவரிடமும் இல்லை' இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் தெரிவித்தார்.

23 ➤

## வடக்குப் பொலிஸாரின் பணியிடமாற்றம் ரத்து!




யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கு மாகாணத்தில் புதுவருடத்துடன் மேற்கொண்ட தமிழ்ப் பொலிசாரின் இடமாற்றம் தொடர்பில் மேன் முறையீடு செய்த அனைத்துப் பொலிசாரும் இன்று முதல் மீண்டும் பழைய பொலிஸ் நிலையங்களில் பணியாற்ற அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

23 ➤

## விசர் நாயால் வந்தது சாவு!

யாழ்ப்பாணம், ஜன. 27

கோப்பாய்ப் பகுதியில் விசர் நாய்க் கடிக்கு இலக்கான குடும்பப் பெண்ணொருவர் உயிரிழந்தார். அன்ரனி மாலதி என்னும் 40 வயதையுடையவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

யாழ்ப்பாணம் கோப்பாய் பகுதியில் கடந்தவாரம் விசர் நாய்க்கடிக்கு

23 ➤




## ஜனாதிபதிக்கு பொருத்தமான பிரதமர் சஜித் பிரேமதாஸவா?

### ஜே.வி.பி ஆவேசக் கருத்து

கொழும்பு, ஜன. 27

கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தால் நாடு சீரழியும், வெள்ளைவான் வரும் என்றெல்லாம் பரப்புரை செய்த சஜித் அணியினர், ஜனாதிபதிக்கு பொருத்தமான பிரதமர்

23 ➤

## பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர் மீது வாள்வெட்டு!

### கட்டைக்காட்டில் நேற்றிரவு இப்படியொரு சம்பவம்

வடமராட்சி, ஜன. 27

பருத்தித்துறை பிரதேச சபையின் ஈ.பி.டி.பி. உறுப்பினர் ஒருவர் மீது நேற்றிரவு 7 மணியளவில் வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு, முள்ளியான் பகுதியில் வைத்து வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த செபமாலை செபஸ்ரியன் என்ப

23 ➤

## ஐரோப்பிய கண்காணிப்பு தேர்தலிலும் மிகஅவசியம்

### கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் வலியுறுத்தல்

கொழும்பு, ஜன. 27

ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் ஐரோப்பிய ஒன்றியத்தின் கண்காணிப்பு மிகவும் அவசியம் என்று கூட்டமைப்பின் தலைவர்

23 ➤



## கணவன் இறந்த செய்திகேட்ட மறுகணம் மனைவி உயிரிழப்பு

### தெல்லிப்பழையில் துயரம்

யாழ்ப்பாணம், ஜன. 27

கணவன் உயிழந்தார் என்ற செய்தியைக் கேள்விப்பட்ட மறுகணமே மனைவியும் உயிரிழந்த துரயச் சம்பவம் தெல்லிப்பழையில் இடம்பெற்றுள்ளது.

23 ➤

## மதகுருக்கள் தலைமையில் புதிய அமைப்பு உதயம்

யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்லும் நோக்கத்துடன் 'தமிழ் மக்கள் அபிவிருத்தி மேம்பாட்டுக்கான மன்றம்' அங்குரார்பணம் செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், நல்லை

23 ➤



## கொழும்புக்கு முகக்கவசம்!

கொழும்பு, ஜன. 27

கொரோனா வைரஸ் காரணமாக கொழும்புக்கு வருபவர்கள் அனைவரும் முகக்கவசம் அணியவேண்டும் என்று

23 ➤

# வடக்கில் 2 லட்சம் குடும்பங்கள் கடல் அநாதைகளாக உள்ளன!

## எங்களை கொந்தளிக்க வைக்காதீர் என்று எச்சரிக்கிறது மீனவ சமூகம்

யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கு மாகாணத்தில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான கடற்றொழில் குடும்பங்கள் வாழ்கின்றன. இப்போது கடல் அனாதைகளாக நாம் ஆக்கப்பட்டுள்ளோம். இந்தச் சிறுபான்மை இனத்தின் பிரச்சினைகளைத் தீர்க்காது விட்டு, எம்மைக் கொந்தளிக்க வைத்துவிடாதீர்கள். சிறுகடல் கொந்தளித்து பெரும் சுனாமி ஆனதைப்போல் விளைவு அமைந்துவிடும் இவ்வாறு எச்சரித்தார் வடக்கு மாகாண கடற்றொழிலாளர் சங்க இணையத்தின் கிளிநொச்சி மாவட்ட பகுதித் தலைவர் யோசப் பிரான்ஸ்சிஸ்.

வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பாக கொள்கை வகுப்பாளர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரதிநிதிகள், பொறுப்புமிக்கவர்கள், மற்றும் மீன்பிடிச் சமூகங்களுக்கிடையிலான வட்டமேசைக் கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ்ப்பாணம் ரில்கோ விருந்தினர் விடுதியில் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்ட யோசப் பிரான்ஸ்சிஸ் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் எதிர்கொள்ளும், பிரச்சினைகள், மற்றும் எதிர்காலத்தில் செய்யப்படவேண்டிய திட்டங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு கூறினார்.

'கடற்றொழில் சமூகத்தைச் சேர்ந்த நாங்கள் இப்போது பெரும் துன்பங்களுக்கு ஆளாகியுள்ளோம். நாங்கள் கடல் அநாதைகளாக ஆக்கப்பட்டுள்ளோம். காலங்காலமாக நாங்கள் விட்ட கண்ணீர்தான் கடல் உவர் நீராக உள்ளதோ என்று எண்ணத்தோன்றுகின்றது. கடலில் எதுவும் இல்லை. சட்டவிரோதத் தொழில்களின் மூலம் அனைத்தையும் அள்ளிவிட்டார்கள். அந்தத் தொழிலைத் தடுப்பதற்கு யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை. தேர்தல் காலங்களில் மட்டும் மீனவ சமூகத்தைத் தேடிவரும் அரசியல்வாதிகள் தேர்தலின் பின்னர் எமது பிரச்சினைகளைக் கண்டுகொள்வதில்லை. கடலில் தண்ணீர் மட்டுமே மிஞ்சியுள்ளது. இனி அந்தத் தண்ணீரை எடுத்து நன்னீராக மாற்றிப் பருகிவிடுவார்கள். அத்துடன் எமது வாழ்க்கை முடிந்து விடப் போகின்றது. சிறு கடல் கொந்தளித்துதான் சுனாமி பேரலை உருவானது, சிறுபான்மை இனமாக உள்ள எங்களை கொந்தளிக்க வைத்துவிடாதீர்கள், நாங்கள் கொந்தளித்தால் தாங்கமுடியாது. எனது சமூகமும் அபிவிருத்திகளைக் காண வேண்டும். எமது பிள்ளைகளும் கற்கவேண்டும், நாங்கள் உங்கள் உடலுக்கு ஆரோக்கியமான கடலுணவுகளை வழங்குகின்றோம். நீங்கள் எங்கள் மக்களுடைய பிரச்சினை களையும் கேளுங்கள்' என்று அவர் தனது கருத்தை முன்வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இணையத்தின் பிரதிநிதிகளும் சட்டவிரோத தொழில் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையையே முன்வைத்தனர். தங்கூசி வலைகள், ரோலர் மீன்பிடித் தொழில், ஒளிபாய்ச்சி மீன்பிடித்தல், டைமெனேட் போன்ற தொழில் முறைகள் தடைசெய்யப்பட்ட தொழிலாக உள்ளபோதும் அவை தொடர்பில் எவரும் நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை. பிரதேசத்துக்கு பிரதேசம் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதை விடுத்து அந்தச் சட்டம் அனைவருக்கும் பொதுவானதாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கைவிடுத்தனர். (ம.ப)

# திருட்டுக் குற்றச்சாட்டில் மூன்று பெண்கள் கைது

வவுனியா, ஜன.27

வவுனியா, யாழ்ப்பாணம், மன்னார் போன்ற மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 3 பெண்கள் வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரால் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா சந்தைச் சுற்று வட்ட வீதியிலுள்ள சதோசா விற்பனை நிலையத்தில் நேற்றுமுன்தினம் மதியம் 12மணியளவில் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக சென்ற பெண்கள் தாம் அணிந்திருந்த ஆடைக்குள் இன்னுமொரு ஆடை அணிந்து பொருள்களை திருடிச் சென்றுள்ளனர்.

அந்தப் பெண்கள் மீது சந்தேகமடைந்த சதோச பணியாளர் பாதுகாப்புக் கமராப் பதிவுகளைப் பார்வையிட்ட போது அவர்கள் பொருள்களை திருடிச்செல்வது தெரியவந்தது.

இது தொடர்பாக வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டையடுத்து மூன்று பெண்களை குற்றத் தடுப்பு பொலிசார் கைதுசெய்துள்ளனர். கொழும்பு மற்றும் பாணந்துறையைச் சேர்ந்த 22, 45, 62 வயதுடைய பெண்களே கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் இன்று வவுனியா நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஏ-110)

# யாழ்ப்பாணப் பழங்கால ஒளிப் படங்களின் கண்காட்சி


யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ்ப்பாண பழங்கால ஒளிப் படங்களின் திருவிழா 2020 என்னும் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் மூன்று நாள்கள் நடைபெற்றன.

யாழ்ப்பாண மத்திய கல்லூரியின் தந்தை செல்வா கலையரங்கில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்றுவரை நடைபெற்றது.

கடந்த 1800 களின் இறுதியில் முதலாவது தலைமுறைக் கலைஞரான எஸ். கே. லோட்டன் கனகரட்ணம் பயன்படுத்திய ஒளிப்படக் கருவி உட்பட 50 இற்கு மேற்பட்ட பழைய ஒளிக்கருவிகளின் பாகங்கள், பழைய ஒளிப்படக் கலையகத்தின் உட்கட்டமைப்பு மற்றும் பழைய படங்கள் என்பன காட்சிப்படுத்தப்பட்டன.

இக் கண்காட்சியை பெருமளவானோர் கலந்துகொண்டு பார்வையிட்டனர். (ஐ-20)



# பொல்லால் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஜன. 27

இளம் பெண்ணை வழிமறித்து பொல்லால் தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படும் தனியார் பேருந்து நடத்துநர் பொலிஸாரால் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டார். இந்தச் சம்பவம் பலாலி வீதியில் சில நாள்களுக்கு முன்னர் இடம்பெற்றுள் ளது.

மோட்டார் சைக்கிளில் வீதியால் சென்று கொண்டிருந்த புன்னாலைக் கட்டுவனைச் சேர்ந்த பெண் மீது தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. அந்தப் பெண் திருமணம் செய்திருப்பது தாக்கினார் என்று குற்றஞ்சாட்டப்படும் பேருந்து நடத்துநரையே. அவர்கள் சில மாதங்களாக பிரிந்து வாழ்ந்து வருகின்றனர். இந்த நிலையில், அந்தப் பெண் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போதே கணவர் தாக்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி பெண் காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார். விசாரணை நடத்திய பொலிஸார், சந்தேகநபரைஅழைத்து எச்சரித்து விடுவித்துள்ளனர். (த-115)

# அலங்கார திருவிழா!

மூளாய், ஜன. 27

மூளாய் கிழக்கு பொற்புலம்பதி அருள்மிகு மகா காளியம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறவுள்ளன.

தினமும் முற்பகல் 10 மணி தொடக்கம் அபிசேகம், பூசை வழிபாடுகள் நடைபெறும். தொடர்ந்து மாலை 7 மணிக்கு சிறப்புப் பூசை, வசந்த மண்டபப் பூசை நடைபெற்று அம்பாள் வீதியுலா வரும் காட்சி இடம்பெறும். 10 ஆம் நாளாகிய எதிர்வரும் 5 ஆம் திகதி சங்காபிசேகம் நடைபெற்று திருவிழா நிறைவுபெறும் என்று ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ஐ)


# இயற்கை எய்தினார் முதுபெரும் கலைஞர்

முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவு மாவட்டத்தில் 'முல்லை பேரொளி 'விருது பெற்ற முதுபெரும் கலைஞர் இராமநாதன் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு முள்ளியவளைப் பிரதேசத்தில் வசித்துவந்த இவர், சுகவீனம் காரணமாக கடந்த வெள்ளிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைக்காக சேவை செய்த முதுபெரும் கலைஞராக, எழுத்தாளனாக, சமூக



தொண்டனாக பணியாற்றியவர் இவர்.

பண்டாரவன்னியன் வரலாற்று நாடகம் உள்ளிட்ட வரலாற்று நடகங்களில் நடித்த பெருமைக்காகவும் கரைதுறைப்பற்று பிரதேசத்தில் கலைத்துறை வளர்ச்சிக்காக அளப்பெரிய பங்களிப்பை வழங்கியதற்காகவும் அவருக்கு 'முல்லைப்பேரொளி' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தார். (த-19)



## நெல் காயவைக்கும் தளம் திறந்துவைப்பு

வவுனியா, ஜன. 27

வவுனியா நொச்சிக்குளத்தில் 10 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட நெல் காயவைக்கும் தளம் நேற்றுமுன்தினம் திறந்துவைக்கப்பட்டது.

நொச்சிக்குளம் கமக்கார அமைப்பின் தலைவர் கு.இராசேந்திரகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வவுனியா பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சகிலா பானு முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டு தளத்தைத் திறந்து வைத்தார். மாகாண குறித்தொதுக்கப்பட்ட நிதியில் குறித்த நெல் தளம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மாளிகை, நொச்சிக்குளம், அலைகல்லுபோட்டகுளம் பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடையவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (து-110)

## செயற்பட்டு மகிழ்வோம்

கொடிகாமம்,ஜன.27

வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்வி அலுவலக உதவிக் கல்விப் பணிப்பாளர் க.பத்மகாந்தன், சிறப்பு விருந்தினராக வரணி பொதுச் சுகாதார பரிசோதகர் இ.நிஜன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-159)

★★★★★

மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயத்தின் செயல்பட்டுமகிழ்வோம் நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் கா.கந்தசாமி தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் மருத்துவக் கலாநிதி மருத்துவர் தி.குமணன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்விவலய ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி சிற்றி மெடிக்கல்ஸ் க.குருபரன் ஆகியோர் கலந்துகொள்வர். (க-159)

# புலம்பெயர்ந்தோர் வளங்களை வடக்கில் பயன்படுத்தவேண்டும்

### வடக்கு ஆளுநர் கூறுகின்றார்

**யாழ்ப்பாணம் , ஜன 27**

**புலம்பெயர்ந்துள்ளவர்களின் மனித வளங்கள், பொருளாதார வளங்கள் வடக்கு மாகாணத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். அப்போதுதான் போரால் துவண்டு போயுள்ள வடக்கு மாகாணத்தை துரித கதியில் மீளக் கட்டியெழுப்ப உதவியாக இருக்கும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ்.

யாழ்ப்பாண வர்த்தகத்துறைக் கண்காட்சியின் ஆரம்ப நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் மேலும் தெரிவித்ததாவது:

கப்பலோட்டிய தமிழர்கள் என்று பெருமையாக கூறப்பட்ட தமிழர்கள் இன்று படகுகளில் ஏதிலிகளாக புலம்பெயர் நாடுகளுக்குச் செல்கின்ற அவலம் ஏற்பட்டுள்ளது.

போரால் துவண்டு போயுள்ள வடக்கின் பொருளாதாரத்தை துரிதகதியில் வளர்ச்சி அடைய வைக்க வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது.

இலங்கையில் போர் நடந்தபோது வடக்கு மாகாணம் அரசினாலும் வெளிநாடுகளினாலும் உதவிகள் துண்டிக்கப்பட்டிருந்தது.

வடக்கு மாகாணத்தில் வாழ்ந்த ஏராளமான தமிழர்கள் தற்போது புலம்பெயர் நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். குறிப்பாக கனடா ஐரோப்பிய நாடுகள் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்து வருகின்றனர். அந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் எமது புலம்பெயர் மக்களின் பங்களிப்பு அளப்பெரியதாகக் காணப்படுகின்றது - என்றார். (து-105)

## சாந்தையில் சிறப்புற நடந்த 'கைக்கொடி மாட்டுச் சவாரி'

யாழ்ப்பாணம், ஜன. 27

வலிகாமம் பண்டத்தரிப்பு சாந்தை சவாரித்திடலில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 'கைக்கொடி மாட்டுச் சவாரி'ப் போட்டி நடைபெற்றது. அ, ஆ, இ ஆகிய மூன்று பிரிவுகளில் இது நடத்தப்பட்டது.

பண்டத்தரிப்பு சாந்தை ஸ்ரீ சிவசுப்பிரமணிய கோவில் வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு வெண்கரம் அமைப்பின் அனுசரணையுடன் சாந்தை ஸ்ரீ சிவசுப்பிரமணியம் ஆலய தர்மகர்த்தா செ.தனுசன் தலைமையில் இது நடைபெற்றது.

போட்டியில் சிறப்பு பங்கேற்பாளர்களாக வெண்கரம் அமைப்பின் செயற்பாட்டாளர்களான மு.கோமகன், பி.பொன்ராசா, இரா.மயூதரன், மற்றும் வெண்கரம் அமைப்பின் சாந்தைசில்லாலை படிப்பகத்தின் தலைமைச் செயற்பாட்டாளர் ஏ.எஸ்.சந்திரன், வலி.தென்மேற்கு பிரதேச சபை உறுப்பினர் த.தர்மகுலசிங்கம் ஆகியோர் பங்கேற்று சிறப்பித்திருந்தனர்.

அவர்களே போட்டிகளை நெறியாழ்கையும் செய்திருந்தனர். ஊர்மக்கள் பலரும் வயது வேறுபாடின்றி ஆர்வமுடன் கைக்கொடி மாட்டுச் சவாரிப் போட்டியில் கலந்துகொண்டிருந்தனர்.

'அ' பிரிவு வில் முதலாமிடம் சிந்துஜன், இரண்டாமிடம் சுவிஸ்திகா, மூன்றாமிடம் வசந்தன் ஆகியோரும், 'ஆ' பிரிவில் முதலாமிடம் சுவிந், இரண்டாமிடம் சிந்துஜன், மூன்றாமிடம் வசந்தன் ஆகியோரும், 'இ' பிரிவில் முதலாமிடம் தினிஸ்ரன், இரண்டாமிடம் வசந்தன், மூன்றாமிடம் கனிஸ்ரன், நான்காமிடம் அனிதராஜ் ஆகியோரும் பெற்றிருந்தனர். இவர்களுக்கான பரிசில்கள் ஆலய திருவிழாவின் இறுதி நாள் நிகழ்வில் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (து)



## சிக்காகோ சொற்பொழிவின் 125ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம்,ஜன.27

சுவாமி விவேகானந்தரின் சிக்காகோ சொற்பொழிவின் 125 ஆவது ஆண்டு விழா எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணி தொடக்கம் 8 மணி வரை நல்லூர் சிறி துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி கலாநிதி சுகந்தினி சிறிமுரளிதரன் கலந்துகொள்ளவுள்ளார்.


இந்தியா நாட்டின் விழுப்புரம் ராமகிருஷ்ண மிஷன் தலைவர் சிறிமத் சுவாமி பரமசுகானந்த மகராஜ் "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ஐ)

## அரசியல்வாதிகளின் விளம்பரப் பலகைகள் அகற்றப்படவில்லை

யாழ்ப்பாணம், ஜன. 27

உயிரோடு உள்ள அரசியல்வாதிகளின் வீதியோர விளம்பரப் பலகைகளை அகற்றுமாறு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்தபோதும், இதுவரை விளம்பரப் பலகைகள் அகற்றப்படவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ இது பற்றி வடக்கு மாகாண ஆளுநர் சத்தியசீலனும் பிரதேச செயலக பிரிவில் வீதியோரங்களில் உயிரோடுள்ள, செயற்பாட்டில் உள்ள சகல அரசியல்வாதிகளின் விளம்பர பதாதைகளையும் அகற்றுமாறு கோரினர். எனினும், மாவட்ட மட்டத்தில் அகற்றப்படவில்லையென்று தெரிய வருகிறது. (த-50)



# மத்தியும் மாகாணங்களும் பிரிந்தால் அபிவிருத்தியில்லை

## பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**கொழும்பு, ஜன. 27**

**மத்திய அரசாங்கமும் மற்றும் மாகாண சபைகளும் பிரிந்து செயற்பட்டால் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. நாட்டை அபிவிருத்தி செய்யவும் சுற்றுலாத்துறையை வளர்ச்சியடைய செய்யவும் மத்திய மாகாண அரசுகள் கைக்கோர்த்துச் செயற்பட வேண்டுமென கைத்தொழில் ஏற்றுமதி, முதலீட்டு ஊக்குவிப்பு, சுற்றுலா மற்றும் விமான போக்குவரத்து அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.**

'ஒரு நாடு ஒரு வேலைத்திட்டம்' என்ற கருத்திட்டத்தில் செயற்பட்டால்தான் நாட்டை அபிவிருத்தி பாதைக்கு கொண்டுசெல்ல முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு தேசிய செயற்றிட்ட மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இம்மாநாட்டில் மாகாண ஆளுநர்களர், சுற்றுலாத்துறை சார்ந்தவர்கள், ஹோட்டல் தொழில்துறையினர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய மத்திய அரசும் மாகாண சபையும் ஒரே வேலைத்திட்டத்தை மேற்கொள்ள வேண்டும். சுற்றுலாத்துறை தொடர்பிலான விடயங்கள் மத்திய அரசை போன்று மாகாண சபைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத்துறையை போன்று ஏனைய விடயங்களிலும் மத்திய மற்றும் மாகாண அரசுகளுக்கு இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மத்திய அரசுக்கும் மாகாண சபைகளுக்கும் இடையிலான காணப்படும் சிறிய சிறிய மோதல்களை நான் நன்கு அறிவேன். நாம் அனைவரும் நாட்டின் நன்மைக்காகவே செயற்படுகின்றோம். முந்தைய அரசாங்கத்தை போன்று நாடு அழிக்கப்படுவதை விலகியிருந்து பார்க்கும் பழக்கம் எமக்கு இல்லை.

உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல்களுடன் இந்த நாட்டில் சுற்றுலாத்துறை பாரியளவில் சரிந்தது. சுற்றுலாத்துறை மட்டுமல்ல, ஏனைய கட்டமைப்புகளும் விஷயங்கள் செயலிழந்துள்ளன. உயிர்த்த ஞாயிறுதின தாக்குதல் மற்றும் முந்தைய அரசாங்கத்தின் குறுகிய பார்வைகளால் சேதமடைந்த நமது சுற்றுலாத் துறையை மீட்டெடுப்பதே எமது முயற்சியாகும்.

ஜனாதிபதி எமக்கு ஒரு இலக்கை நிர்ணயித்துள்ளார்.; சுற்றுலா வருவாயை 2025ஆம் ஆண்டாகும் போது 10 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்த்த வேண்டும். இந்த தேசிய மாநாடு அந்த இலக்கை அடையும் முதல் படியாகும்.

தயாரிக்கப்பட்டுள்ள 'தேசிய சுற்றுலா அபிவிருத்தி வேலைத்திட்டம்' எமது சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கான வழிகாட்டியாக இருக்கும். உலக சுற்றுலாத் துறையின் சமீபத்திய போக்கையும் நாம் அடையாளம் காண வேண்டும். இந்த புதிய போக்குகள் நமது கலாச்சாரம் மற்றும் நெறிமுறைகளுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட வேண்டும். அதனால்தான் நாங்கள் தேசிய மாநாட்டை நடாத்துகின்றோம். இந்த மாநாட்டின் மூலம் அடையாளம் காணப்பட்ட சுற்றுலா திட்டத்தை செயல்படுத்த அரசு தேவையான நிதிகளை வழங்கும்.

சில நேரங்களில் சுற்றுலாப் பயணிகள் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறார்கள் என்ற தகவல் நமக்குக் கிடைக்கிறது. நாடு முழுவதும் சுற்றுலாத்துறையை மையப்படுத்தி பல்வேறு மாபியாக்கள் செயல்பட்டு வருவதாகவும் எமக்கு தகவல் கிடைத்துள்ளது. நாங்கள் ஒன்றிணைந்து செயல்பட்டால், இந்த மாபியாக்களை தோற்கடிக்க முடியும். சுற்றுலாத் துறையை வளர்ப்பதற்கான திறனும் வளமும் நமக்கு பெரும்பாலும் உண்டு. வெறுமனே பேசுவதன் மூலம் ஒரு நாட்டை வளர்ச்சிப்பாதைக்கு கொண்டுசெல்ல முடியாது. எனவே, ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும்.

அதன்படி, பொருத்தமான திட்டங்கள் அடையாளம் காணப்பட்டு அவற்றை செயல்படுத்த ஒரு பொறிமுறையும் இருக்க வேண்டும். அந்த நோக்கத்துடனேயே இந்த மாநாட்டை நடத்தினோம். கோத்தாபய ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டணி அரசு பேசும் 'அரசு அல்ல. உழைக்கும் அரசாகும். அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் - என்றார்.

(ம)

# கட்டாக்காலி நாய்களை திறந்து விட்ட விசமிகள்

யாழ்ப்பாணம்,ஜன.27

தெல்லிப்பழை மருத்துவமனை வளாகத்தில் நடமாடும் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அடைத்து வைத்திருந்த போது, விசமிகள் அவற்றைத் திறந்து விட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவமனை வளாகத்தில் அதிக நாய்கள் நடமாடுவதால், அவற்றை அகற்றுமாறு மருத்துவமனை நிர்வாகம் விடுத்த கோரிக்கையின் பெயரில், நேற்று முன்தினம் மட்டும் ஒரே நாளில் 13 நாய்கள் பிடிக்கப்பட்டன. மீனில் மயக்க மருந்து வைத்து பெரும் சிரமத்தின் மத்தியில் அந்த நாய்கள் பிடிக்கப்பட்டு கூட்டில் அடைக்கப்பட்டன.

13 நாய்கள் பிடிக்கப்பட்ட போதும், பல நாய்களின் நடமாட்டம் நேற்றும் காணப்பட்டுள்ளது. அதனால் எஞ்சிய நாய்கள் நேற்றுப் பிடிக்கப்பட்டன. அவற்றைக் காப்பகம் கொண்டு செல்வதற்காக அடைக்கப்பட்டிருந்த இடத்துக்குச் சென்று பார்த்த போது, அங்கு நாய்க்கள் இருக்கவில்லை. அவற்றை விசமிகள் திறந்து விட்டுள்ளனர்.

அதன் பின்னர் மூன்று நாய்கள் மட்டுமே அகப்பட்டன. அவை காப்பகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-105)

# கொரோனாவை கண்டறிவதற்கு தனியானதொரு குழு நியமனம்

கொழும்பு, ஜன. 27

கொரோனா வைரஸ் தொற்றினைக் கண்டறிய தேசிய செயற்பாட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், நாடு தழுவிய ரீதியில் இக்குழுவின் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுக்கப்படும் என சுகாதார அமைச்சு நேற்று அறிவித்துள்ளது.



கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்த தேசிய செயற்பாட்டுக் குழுவை நியமிக்குமாறு சுகாதார, மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சிக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கமைய கொரோனா வைரஸ் தொற்று இலங்கைக்குள் பரவாமல் இருப்பதற்கும், அடுத்தக்கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் பொறுப்பு வாய்ந்த குழுவினர் சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்கள். (ம)

# கழித்து விடப்பட்ட தரப்பே கூட்டமைப்பு

## சாடுகின்றார் கஜேந்திரகுமார்

யாழ்ப்பாணம், ஜன. 27

"முழுமையாகக் கழித்துவிடப்பட்ட தரப்பினராகவே கூட்டமைப்பை நாங்கள் பார்க்கிறோம். தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சீர்குலைத்தவர்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தான்" என்று குற்றஞ்சாட்டியுள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பொ.கஜேந்திரகுமார், "ஒற்றுமைக்காக வருமாறு தமிழ்க் கட்சிகளுக்கு கூட்டமைப்பு அழைப்பு விடுப்பது வேடிக்கையானது. அதை நாங்கள் கவனத்தில் எடுக்கப் போவதில்லை." என்றும் சாடியுள்ளார்.

ஒற்றுமைக்காக ஒன்றிணையுமாறு தமிழ்க் கட்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அழைப்பு விடுத்துள்ளது. இது பற்றிக் கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டமைப்பின் அந்த அழைப்பு வேடிக்கைக்குரிய கோரிக்கை. இன்றைக்கு அந்தத் தரப்பிற்குள் இருக்கக் கூடிய பங்காளிகளே மிக வெளிப்படையாக தங்களுக்கு இந்த தேர்தலில் மிகப் பின்னடைவு வருவதற்கான வாய்ப்புக்கள் இருப்பதாகக் கூறியுள்ளனர்.

ஆனால் அவர்கள் திரும்பவும் தேர்தலுக்குப் போவதற்கு ஏதோ பலம் இருக்கிறதாகச் சொல்லிக் கொண்டு தான் போக வேண்டும்.


முழுமையாகக் கழித்துவிடப்பட்ட தரப்பினராகவே கூட்டமைப்பை நாங்கள் பார்க்கிறோம். அவர்களுடைய அழைப்புக் கருத்தை நாங்கள் கவனத்திலெடுக்கத் தேவையில்லை. என்னென்ன செய்யலாமோ அந்தளவுக்குசெய்து அவர்களோடு இருந்த அத்தனை தரப்புக்களும் வெளியே போகிற நிலைமையை அவர்கள் தான் உருவாக்குகிறார்கள்.

நாங்கள் கொள்கை ரீதியாக வெளியில் வந்தனாங்கள். ஏனைய தரப்புக்கள் கொள்கை ரீதியாக முரண்படவில்லை. அவர்கள் முழுப் பேரும் பதவியும் செல்வாக்கும் தனிப்பட்ட கட்சி நலன்கள் என்ற கோணத்தில்தான் வெளியேறி வந்திருக்கின்றனர். ஆக ஏதோவொரு காரணத்துக்காக அந்த ஒற்றுமையை முற்று முழுதாக நாசமாக்கிய தரப்பு திரும்பவும் ஒற்றுமை பற்றிக் கதைப்பது வேடிக்கையான விடயம். அப்படிப்பட்ட ஒரு விடயத்தைக் கருத்திலெடுக்கவும் தேவையில்லை. பதில் கூறவும் தேவையில்லை - என்றார்.

(கு-20)

# கோலா கரடி குட்டிகளுக்கு பாலூட்டும் நரி

ஆஸ்திரேலியா காட்டில் நரி ஒன்று கோலா கரடிக் குட்டிகளுக்குப் பாலூட்டும் வீடியோ வைரலாகப் பரவி வருகின்றது.
ஆஸ்திரேலியாவில் உள்ள வனப்பகுதிகள் சமீபத்தில் தீக்கிரையாகின. இது தொடர்பான பல புகைப்படங்கள் சமூக வலைத்தளங்களில் பரவியது. இந்த நிலையில், ஆஸ்திரேலிய வனப்பகுதி ஒன்றில் நரி ஒன்று குட்டிகளுக்குப் பாலுட்டும் வீடியோ ஒன்று வெளியானது. அதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? அதுதான் ஆச்சரியம்.
தாயை இழந்து தவித்து வரும் கோலா கரடிக் குட்டிக்களுக்கு இந்த நரி பாலூட்டிப் பாதுகாத்து வருகிறது. ஆகவே அந்த வீடியோ நாட்டு எல்லைகளை மீறி மனிதநேயம் மிக்க பலரையும் ஈர்க்கத் தொடங்கி இருக்கிறது.



## மூளையை இளமையாக்க
# சுடோக்கு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 8 | | | | | 9 | |
| 4 | 2 | | 3 | | | 5 | | |
| | 5 | 3 | | | 9 | 1 | 7 | |
| | 9 | | | 2 | | | | |
| | | 5 | 1 | | 6 | 9 | | |
| | | | | 7 | | | 8 | |
| | 3 | 4 | 7 | | | | | |
| | | 7 | | | 5 | | 4 | 2 |
| | 6 | 2 | 4 | | | 7 | | |

(விடை: நாளை)

சுடோக்கு என்பது 9x9 என அமைந்த 81 சிறுகட்டங்கள் அடங்கிய ஒரு பெரிய கட்டத்தில் குறிப்பிட்ட விதிகளுடன், ஒரு குறிப்பிட்ட பண்பு பொருந்துமாறு எண்களைக் கொண்டு விளையாடும் ஒரு புதிர் விளையாட்டு. தற்போது உலகெங்கும் மிகவும் விரும்பி விளையாடும் ஓர் எண் விளையாட்டாக உள்ளது.

விதி1: ஒன்பது சிறு கட்டங்கள் அடங்கிய ஒவ்வொரு சதுர அறையிலும் 1 முதல் 9 வரையுள்ள எல்லா எண்களும் ஒரே ஒரு முறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இப்படியாக இதே விதி அமையுமாறு சட்டகத்திலே உள்ள எல்லா அறைகளும் (9 அறைகள்) அமைய வேண்டும்.

விதி2: சட்டகம் முழுவதிலும் ஒவ்வொரு வரிசையிலும் (கிடையிலும்) எண்கள் 1 முதல் 9 வரையில் உள்ள எண்கள் ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும். இதேபோல ஒவ்வொரு நெடையிலும் எண்கள் 1 முதல் 9 வரை ஒரே ஒருமுறை மட்டுமே வருமாறு அமைக்க வேண்டும்.



# கழுத தேயலாம்...., சிறுத்தை?

சாப்பிடும்போது, தூங்கும்போது, ஏன் பாத்ரூம் போறப்பகூட 'செல்'லோடையே அலையுறார்கள். இவர்கள் மனைவி பிள்ளைகளோடு இருந்ததைவிட செல்போனோட இருந்ததுதான் அதிகம்.
முன்பெல்லாம் மலேரியாவால் பாதிக்கப்படுவோம். இப்ப நாட்டில் பல பேர், அழைப்பு வராட்டியும் அடிக்கடி எடுத்துப் பார்க்கும் 'செலேரியா' என்னும் நோயால் பாதிக்கப்பட்டு இருக்கார்கள்.

வரும் ஆண்டுகளில் கிட்னி, லிவர், நுரையீரல் போல செல்போனும் மனிதர்களின் உடல் உறுப்புகளில் ஒன்றாக மாறிவிடும் என ஒரு 'கடுப்புக் கணிப்பு' சொல்கிறது.
செல்போன் என்பது வேகமாகத் தகவல் பரிமாறவும், தூரங்களைக் கடந்து விரைந்து பேசுவதற்காகவும் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவி. இன்றைக்கு அதை வைச்சு பேசுவதைத் தவிர வேறு எதை எதையோ செய்து கொண்டே இருக்கிறோம். ஒருவர் கையில் செல்போன் இருக்கும் வரைக்கும் யாரும் அநாதை இல்லைதான். ஆனால், அதுவே செல்போனை மட்டுமே நோண்டிக் கொண்டு இருந்தால், ஆட்கள் இருந்தும் ஆதரவற்றோர் ஆகிடுவோம்.
"கழுத தேய்ஞ்சு கட்டெறும்பாகலாம், ஆனா சிறுத்தை தேய்ஞ்சு சித்தெறும்பா ஆகக் கூடாது".
எமக்குதான் 'டெக்னாலஜி' அடிமையாக இருக்கணுமே தவிர, நாம் டெக்னாலஜிக்கு அடிமையாக இருக்கக்கூடாது. மொபைல் ஆப்களில் வாழ்வதை விட்டால் மட்டும்தான், வாழ்க்கையில் ஹேப்பியாக வாழ முடியும்.

மனிதனாகப் பிறக்க பாக்கியம் செய்திருக்கிறோம். வாழும் காலத்திற்குள், சாதிக்கும் விதத்தில் நல்ல அறிகுறியை விட்டுச் செல்வோம்....

**விவேகானந்தர்**

அறிவியலுக்கு கற்பனை வளத்தையும், கற்பனை உலகிற்கு அறிவியலையும் கொண்டு வருவதே இன்றைய கலைஞனின் கடமை.

**சிரில் கானலி**

twitter

முகமூடி™ @mugamoodi11
வாழ்க்கை ஒரு போர்க்களம் போன்றது..!!
இதில் பலமானவனோ, வேகமானவனோ வெற்றி பெற போவதில்லை..!!

## கண்டதையும் உண்பதால் ஏற்பட்ட விளைவு
# கொரோனா வைரஸ்
### காய்கறிக்குத் திரும்பும் சீனர்கள்



மனிதனைத் தவிர அனைத்து உயிர்களையும் கொன்று தின்றதால், உயிரைக் குடிக்கும் கொரோனா வைரஸ் பாதிப்புக்குச் சீனர்கள் ஆளாகியுள்ளனர். இதனால், காய்கறிகள் உண்ண முடிவு செய்துள்ளனர்.
மனிதர்கள் இதுவரை கண்டிராத, 'கொரோனா' வைரஸால் பாதிக்கப்பட்டு, சீனாவில் இதுவரை, 25 பேர் உயிரிழந்துள்ளனர். சுமார், 850க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர். சீனாவின் வுஹான் நகரில் இந்த கொரோனா வைரஸ் பாதிப்பு முதலில் கண்டறியப்பட்டது. பின், பீஜிங், ஷாங்காய் போன்ற சீனாவின் மற்ற நகரங்களில் வசிப்பவர்களும் இதனால் பாதிக்கப்பட்டனர். சீனா வந்து சென்றவர்களால், அமெரிக்கா, தென்கொரியா, இந்தோனேசியா உள்ளிட்ட நாடுகளுக்கும் இந்த வைரஸ் பரவியது.
'இந்த நிலையில், 'கொரோனா வைரஸ்' உருவான, சீனாவின் வுஹான் நகரின், 'ஹூனான் கடல் உணவு சந்தை'யில் அதிகாரிகளும் மருத்துவர்களும் ஆய்வு செய்தனர். சந்தையில் அறுக்கப்பட்ட, ஏதோ ஒரு வன விலங்கிடமிருந்தே, உலகையே அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது, கொரோனா வைரஸ் பரவியுள்ளதை அதிகாரிகள் கண்டறிந்தனர். இதையடுத்து, அந்தச் சந்தைக்கு அதிகாரிகள் 'சீல்' வைத்துள்ளனர்.
அந்தச் சந்தையில் விதிமீறி உயிருடன் விற்கப்பட்ட வனவிலங்குகளின் பட்டியலை அதிகாரிகள் வெளியிட்டுள்ளனர். அதில், 'நரி, ஓநாய், பாம்பு, முதலை, காட்டெலி, மயில், எறும்புத்தின்னி, ஒட்டகம், மான், முள்ளம்பன்றி, காட்டுப்பன்றி, முயல், காட்டுப் பூனை, கரடி, வெளவால், உடும்பு' உள்ளிட்ட, 121 வன உயிரினங்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.
மேலும், 'ஆடு, மாடு, கோழி, பன்றி, முயல்' உள்ளிட்ட வளர்ப்பு விலங்குகளும் 'கரப்பான், பல்லி, புழுக்கள்' உள்ளிட்ட, புழு, பூச்சி வகைகளும் அந்த சந்தையில் விற்கப்பட்டன. சந்தைக்கு, உயிருடன் கொண்டு வரப்படும் வன விலங்குகள், பல நாட்கள் அடைத்து வைத்து விற்கப்பட்டுள்ளன. அந்த விலங்குகளில் ஏதோ ஒன்றிலிருந்தே இந்த வைரஸ் பரவி இருப்பதாக தெரிகிறது.
ஏற்கனவே, கோழிகளிடம் இருந்து, 'எச்.என். ஏவியன் இன்புளுயன்சா' என்ற நோய்தொற்றும், எலிகளிடம் இருந்து, 'லெப்டோஸ் பைரோசிஸ்' என்னும் காய்ச்சலும், வெறிநாய்களிடமிருந்து 'ரேபிஸ்' என்னும் நோயும் தொற்றுகின்றன.
எப்போதும், பல வகை உயிரினங்களின் மாமிசங்களை உண்பதில் அலாதி பிரியம் கொண்டுள்ள சீனர்களுக்கு, மாமிசம் என்றாலே தற்போது பயம் ஏற்பட்டுள்ளது.
இதனால், அவர்கள் மாமிசத்தை உண்பதை நிறுத்திக் கொண்டு, மனித உடலுக்கு எந்தப் பாதிப்பையும் தராத காய்கறி மற்றும் கீரைகளை உண்ண முடிவு செய்துள்ளனர்.



இருளை கொண்டு இருளை அகற்ற முடியாது. ஒளியால் மட்டுமே அதைச் செய்ய முடியும். அதே போன்று வெறுப்பைக் கொண்டு வெறுப்பை அகற்ற முடியாது. பேரன்பு மட்டுமே அதைச் செய்ய முடியும்"

மார்ட்டின் லூதர் கிங்.

உங்களுடைய இலக்கை குறைத்து மதிப்பிடுபவர்களிடம் இருந்து விலகி இருங்கள். சின்ன மனம் படைத்தவர்கள் எப்போதுமே அதைத் தான் செய்வார்கள். ஆனால், உண்மையான உயர்ந்த மனிதர்கள் நீங்களும் ஒரு நாள் உயர முடியும் என்பதை நீங்களும் உணர உதவுவார்கள்"

மார்க் ட்வெயின்,
அமெரிக்க எழுத்தாளர்




நல்ல நண்பர்கள், நல்ல புத்தங்கள், அமைதியான மனம் இவைதான் உன்னதமான வாழ்க்கை" என்று வாழ்க்கையின் தத்துவத்தை சாறுபிழிந்து தருகிறார் மகத்தான எழுத்தாளர் மார்க் ட்வெயின்.

நல்ல நண்பர்களைப் போலவே, இடர்மிகுந்த தருணங்களில் நமக்குத் தோள்கொடுத்து நிற்பவை நல்ல புத்தகங்கள்.

புத்தகங்கள் அறிவுப் புதையல்கள், புத்தகங்கள் நம்பிக்கை மாளிகையின் கதவுகள். புத்தகங்கள் நம்மை சாதிக்கத் தூண்டும் கிரியா ஊக்கிகள்.

புத்தகங்கள் இல்லாத வாழ்க்கையை என்னால் வாழவே இயலாது என்று கூறி, புத்தகவாசிப்பை வாழ்க்கைமுறையாகவே பிரகடனப்படுத்தியுள்ளான் பேரறிஞன் தாமஸ் ஜெஃபர்சன்.

நல்ல நண்பர்களைத் தேர்வு செய்வதில் கவனமாக இருப்பதுபோலவே, நல்ல புத்தகங்களைத் தேர்வு செய்வதிலும் நாம் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும்.

உங்கள் வாழ்க்கையைப் பயனுள்ளதாக்க எந்த நூல்கள் உதவும்? உங்களுக்குப் பிடித்த துறையில் சிகரங்களைத் தொட எந்த நூல்கள் உதவும்? உங்கள் குழந்தைகளின் சிந்தனையைச் செதுக்க எந்த நூல்கள் உதவும் என்பது போன்ற கேள்விகளுடன் தேடினால் மிகச்சிறந்த அறிவுப் புதையல்கள் உங்கள் கையில் கிடைக்கும்.




# சிங்கமும் சிறு எலியும்

ஒருநாள் மதிய வேளையில் சிங்கம் ஒன்று காட்டில் தூங்கிக் கொண்டு இருந்தது அங்கு வந்த எலி சிங்கத்தின் மீது குதித்து விளையாடியது. இதனால் சிங்கம் விழித்தெழுந்தது. கோபம் கொண்ட சிங்கம் எலியைப் பிடித்து " நீ எனக்கு இன்று நல்ல மதிய உணவாக போகிறாய்" என்று கர்ஜித்தது.

ஆனால் எலியோ சிங்கத்திடம் "என்னை மன்னித்து விடுங்கள் நான் தெரியாமல் உங்கள் மீது ஏறிவிட்டேன். என்னைச் சாப்பிடாதீர்கள்" எனக் கெஞ்சிக் கேட்டது.

சிங்கத்திடம் "இன்று நீங்கள் என்னைக் கொள்ளாமல் விட்டால் என்றாவது ஒருநாள் உங்களுக்கு நன்றியைத் திருப்பிச் செலுத்துவேன்" என்றது. சிங்கமோ




"இவ்வளவு சிறிய உடம்பை வைத்துக் கொண்டு எனக்கு நீ உதவப்போகிறாயா?" என்று எலியை ஏளனம் செய்தது. இருந்தாலும் எலியைக் கொல்லாமல் போகவிட்டது.

சில நாள்களின் பின் சிறிய இறைச்சித் துண்டுக்கு ஆசைப்பட்ட அந்தச் சிங்கம் வேடர்கள் வைத்திருந்த வலையில் சிக்கிக் கொண்டது.

வலையில் அகப்பட்ட சிங்கம் பலமாகக் கர்ஜித்து அழுதது. அந்தச் சிறிய எலி சிங்கத்தின் சத்தத்தைக் கேட்டு அந்த இடத்துக்கு வந்து வலையைத் தன் பல்லால் வெட்டி சிங்கத்தைத் தப்பிப் போக உதவியது.

சிங்கம் இந்தச் சின்ன எலி என்னைக் காப்பாற்றிவிட்டதே என்று வெட்கப்பட்டு எலிக்கு தன்னைக் காப்பாற்றியதற்கு நன்றி சொல்லிச் சென்றது.

**நீதி: உருவத்தை யாரும் பார்த்து**
**ஏளனம் செய்யக் கூடாது.**




## விடுகதைகளுக்கு விடை என்ன?

1. ஓடுவான், வருவான்; ஒற்றைக் காலில் நிற்பான். அவன் யார்?
2. பச்சைப் பெட்டிக்குள் வெள்ளை முத்து. அது என்ன?
3. கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள்ளே வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகையின் நடுவே ஒரு குளம். அது என்ன?
4. எதைக் கொடுத்தாலும் சாப்பிடுவேன். தண்ணீர் குடித்தால் இறந்துவிடுவேன். நான் யார்?
5. ஊர் முழுவதும் சுற்றுவேன். வீட்டுக்குள் நுழைய மாட்டேன். நான் யார்?
6. மஞ்சள் குருவி ஊஞ்சலாடுது. அது என்ன?

விடை:
1. கதவு, 2. வெண்டைக்காய், 3. தேங்காய், 4. நெருப்பு, 5. செருப்பு, 6. எலுமிச்சை






## எறும்புக் கூட்டம்

சிற்றெறும்பு ஒன்று வீட்டைச்
சுற்றி வந்தது
சிதறிக் கிடந்த ரொட்டித் துண்டைக்
கண்டு கொண்டது

பற்றியதை இழுத்துச் செல்ல
முயற்சி செய்தது
பலிக்கவில்லை, வந்த வழி
பயணம் செய்தது

சற்று நேரம் கழித்து மீண்டும்
திரும்பி வந்தது
சங்கிலி போல் எறும்புக் கூட்டம்
தொடர்ந்து வந்தது

ஒற்றுமையாய் இரையைக் கவ்வி
இழுத்துச் சென்றது
ஒன்று பட்டால் உண்டு வலிமை
உணர்த்திச் சொன்னது!
-

## தன்னம்பிக்கை வளர்ப்போம்

வாழ்நாள் என்பது உயிர்வாழ இயற்கையால் அனுமதிக்கப்பட்ட நாள். அந்த நாட்களுக்குள் உண்டோம், உறங்கினோம், களித்தோம், காண்போம் என்று மட்டும் வாழ்வது முழுமைபெற்ற வாழ்க்கை ஆகாது. சோதனைகளை எதிர்த்து நின்று, வேதனைகளை விரட்டியடித்துச் சாதனை படைப்பதே நிறைவான வாழ்க்கை.

இலக்கை அடைய:

இலட்சியமும், கனவும் தான் இலட்சியக்கனவு. நாம் ஒரு இலட்சியக்கனவை உருவாக்கி நடைமுறைப்படுத்த முயற்சி செய்ய வேண்டும். அதனை அடைய தடைகளைத் தகர்த்தெறிந்து எந்த சூழ்நிலையிலும் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும். கனவு என்பது தூக்கத்தில் வருவதில்லை. உன்னை எது தூங்கவிடாமல் செய்கிறதோ அது தான் கனவு. கண்கள் உறங்கலாம்; கனவுகள் உறங்கக் கூடாது. அப்போதுதான் நம் இலக்கை நாம் அடைய முடியும். படிக்காத மேதை ஒருவர் தன் அறிவாற்றலால் இந்த தமிழகத்தையே ஆண்டாரே காமராசர் அவரிடம் இருந்தது வெறும் தன்னம்பிக்கை மட்டும் அல்ல, துணிவும் தான். அவர் மட்டுமல்ல பல உயர்ந்த நிலையில் இருக்கும் ஒவ்வொருவரும் தன்னம்பிக்கையால் உலகை வென்றவர்கள் ஆவர்.

வெற்றியின் களிப்பு விடியும் வரை தோல்வியின் மதிப்போ வீழும் வரை
தோல்வியில் ஊரை நீ அறிந்திடு நம்பிக்கை விதையை நடு.
தன்னலக் களையை நீக்கு சிறகை விரி பறக்கப் பழகு

# அடக்குமுறைகளை எதிர்த்து போரிடும் ஊடகவியலாளர்கள்

## சுகிர்தராஜனின் நினைவேந்தல் நிகழ்வில் கூட்டமைப்பு எம்.பி. ஸ்ரீநேசன் தெரிவிப்பு

திருகோணமலை, ஜன.27

ஒடுக்குமுறைகள், அடக்குமுறைகள், சர்வாதிகாரம் மற்றும் மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றுக்குஎதிராகத்தங்களதுஉயிரையும்பொருட்படுத்தாதுதுணிவுடன் செயற்படுகின்றவர்கள்தான்ஊடகவியலாளர்கள். ஊடகவியலாளர்களின்ஒற்றுமையானகுரல்களுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எப்போதும் பக்கபலமாக இருக்கும்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்நாடாளுமன்றஉறுப்பினர்ஞா.ஸ்ரீநேசன்தெரிவித்தார்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட கொல்லப்பட்ட ஊடகவியலாளர் எஸ்.சுகிர்தராஜனின் 14ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு கிழக்குமாகாணஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில்நேற்று முன்தினம் மட்டக்களப்பில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது ஊடகவியலாளர்கள் எதற்கும் விலைபோகாமல்மனிதர்களைப் பாதுகாக்கவேண்டும். மனிதஉரிமைகளைப் பாதுகாக்க வேண்டும். ஜனநாயகத்தைப்பாதுகாக்க வேண்டும். உண்மையானஊடகவியலாளர்களைநாங்கள்எப்போதும் மதிக்க வேண்டும். அவர்களது மரியாதையை எந்த இடத்திலும் குறைத்துவிடக் கூடாது.

அமரர்சுகிர்தராஜனின்நினைவை நாங்கள் மனதில் சுமந்து கொள்கின்றோம். இவ்வாறானஊடகவியலாளர்களின் செயற்பாடுகள் காரணமாகத்தான் தமிழர்களுக்கு எதிரான அநீதிகள் வெளியுலகத்துக்குப் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன. அதனால்பல அநீதிகள் தடுக்கப்படுகின்றன. அவ்வாறான உன்னதமான சேவைசெய்பவர்களைநாங்கள் எப்போதும் மறக்கக்கூடாது.

ஊடகவியலாளர்கள் ஒற்றுமையாகக் குரல் கொடுக்க வேண்டும். ஊடகவியலாளர்களின் ஒற்றுமையான குரல்களுக்கு நாங்களும் பக்கபலமாக இருப்போம். மாறாக அதிகார சக்திகளுக்கும், சர்வாதிகாரிகளுக்கும் ஊதுகுழல்களாகஊடகவியலாளர்கள் இருந்துவிடக் கூடாது.

இன்னும்இன்னும்இவ்வாறான உன்னத உயிர்கள் பறிக்கப்படுகின்றசூழல் இந்தநாட்டில்ஏற்பட்டுவிடக்கூடாது. அவ்வாறுஏற்பட்டால் நாட்டின் ஜனநாயகம் பொய்த்துப் போய்விடும் என்றார்.

(எ-22)

# புதிய கூட்டணி உறுதி வெற்றியும் நிச்சயமே

## சொல்கிறார் சஜித்

கொழும்பு, ஜன. 27

புதிய கூட்டணி அமைத்துக்கொண்டு நாடாளுமன்றத் தேர்தலை வெற்றிபெறுவோம் எனத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, அதற்கு தலைமைத்துவம் வழங்கத் தான் தயாராகவுள்ளதாகவும் கூறினார்.

உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடனான சந்திப்பு நேற்று கொழும்பு கண்காட்சி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.



அவர் மேலும் கூறுகை யில்,

'முற்போக்கு சக்திகளையும் கூட்டிணைத்துக் கொண்டு புதிய கூட்டணி அமைத்துக்கொண்டு தேர்தலை வெற்றிபெறுவோம். அதற்காக கிராம மட்டத்தில் இருக்கும் நீங்கள் சக்தி பெறவேண்டும். பொதுத் தேர்தலுக்கு புதிய மாற்றுத்திட்டத்தை ஏற்படுத்த நாங்கள் தயார்.

அதற்காக யாரையும் ஒதுக்கமாட்டோம். அனைவரையும் இணைத்துக்கொண்டே செல்லவேண்டும். புதிய கூட்டணி க்குத் தலைமை தாங்க நான் தயார். ஒற்றுமையே எமக்குப் பலம். அந்த ஒற்றுமை பெயரளவில் இருக்கமுடியாது.

அதேபோன்று எமது எதிர்த்தரப்புடன் 'டீல்' போட்டுக் கொண்டு செயற்படுபவர்களுடன் இந்தப் பயணத்தை மேற்கொள்ள முடியாது. 'டீல்' அரசியல் கட்சிக்கும் நல்லதில்லை. நாட்டுக்கும் நல்லதில்லை' - என்றார்.

(ம-22)


## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அங்கத்தவரும் கலைப் பீடத்தின் இராமநாதன் நுண்கலைக் கழக இசைத்துறைத் தலைவருமான

**திருமதி கிருபாசக்தி கருணா**

அவர்களின் அன்புத்தந்தையாரான

**சரவணமுத்து நாகரத்தினம்**

அவர்கள் கடந்த 25.01.2020 அன்று இறைபதம் எய்தினார். அவர்களது பிரிவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா எல்லாம் வல்ல இறைவனின் திருப் பாதங்களில் அமைதிபெறப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம்**

## மரண அறிவித்தல்கள்



### சின்னத்தம்பி பாலச்சந்திரன்

வியாபாரிமூலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பாலச்சந்திரன் நேற்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி லக்ஷ்மிஅம்மா தம்பதிகளின் இளைய மகனும் காலஞ்சென்றவர்களான அருணாசலம் மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சாந்தியின் அன்புக் கணவரும் றட்ணம் (குடத்தனை), ஜேகாம்பிகை, காலஞ்சென்ற சரோஜா மற்றும் திருச்செல்வம், பேபிகமலா, திசைநாயகம், பேபிஜெயா, கமலாம்பிகை, பவளறஞ்சினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாரதி (யாழ் பல்கலைக்கழகம் - விஞ்ஞான பீடம் 1ஆம் வருடம்), சங்கவி (யா/மெ.பெ.உ.பா) ஆகியோரின் தந்தையாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2020) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுப்பர்மடம் இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வியாபாரிமூலை, பருத்தித்துறை.**

**தகவல் குடும்பத்தினர்.**

**தொடர்பு:- 077 076 1533**



### செல்வி சசிகலா சின்னத்தம்பி

மூத்தநயினார் கோவிலடி ஆனைக்கோட்டையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சசிகலா சின்னத்தம்பி நேற்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி மற்றும் யோகம்மா தம்பதிகளின் புதல்வியும் பார்த்தீபன், திலீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பவளரஞ்சினி, அருள்ஜோதி ஆகியோரின் மைத்துனியும் பகீரதன், கஜீபன் லக்ஸன், சபீனா, டர்வினா ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (27.01.2020) திங்கட்கிழமை பகல் 12.30 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எருக்கலம்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மூத்தநயினார் கோவிலடி, ஆனைக்கோட்டை.**

**தகவல்: குடும்பத்தினர்**

## வாடகைக்கு

சாவகச்சேரி நகரின் மத்தியில் கண்டி (A9) வீதியில் கடை வாடகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு:- 077 5361370

## உழவு இயந்திரம் விற்பனைக்கு

RF - தொடர் இலக்கம் உடைய TAFE 450 விற்பனைக்குண்டு

077 833 2054, 076 381 9080

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குலத்தை சேர்ந்த 1989ஆம் ஆண்டு கார்த்திகை நட்சத்திரத்தில் பிறந்த சூரியன் செவ்வாய் உடைய கனடா P.R உள்ள விவாகரத்து பெற்ற மணமகளுக்கு பொருத்தமான **மணமகன் தேவை.**

தொடர்பு: 077 163 9003

## வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



அமரர்
வல்லிபுரம்
கயிலேஸ்வரன்

( ஓய்வுநிலை அதிபர் – சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை )

அன்னை மடியில்
21.02. 1947

ஆண்டவன் பிடியில்
29.12.2019

கடந்த 29.12.2019 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு நாளை (28.01.2020) செவ்வாய்க்கிழமை முற்பகல். 11.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து எமது அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து எமக்கு பல்வேறு வழிகளில் உதவிகள் புரிந்தோருக்கும் இறுதிச்சடங்கில் கலந்து. அனுதாபத்தை தெரிவித்த அனைவருக்கும் பதாகைகள் துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டும் மலர்வளையங்கள் சாத்தியும் தமது அனுதாபங்களைத் செலுத்திய நல் உள்ளங்களுக்கும் உள்நாடு வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் துயர்பகிர்ந்தவர்களுக்கும் எமக்கு பலவழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார் உறவினர் நண்பர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

**இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு உங்களை அன்பாக கேட்டுக் கொள்கின்றோம்.**

நுணாவில் கிழக்கு.
சாவகச்சேரி.

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### திருமதி தனலட்சுமி சிவநாயகமூர்த்தி
(கனடா)



நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனலட்சுமி சிவநாயகமூர்த்தி கடந்த (24.01.2020) வெள்ளிக் கிழமை கனடாவில் இறைபதமடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பண்டிதர் சுப்பிரமணியம் (முன்னாள் அதிபர்) தங்கம்மா தம்பதிகளின் பாசமிகு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (முன்னாள் தொலைத்தொடர்பு திணைக்களம்) சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் கலாநிதி சிவநாயகமூர்த்தியின் (முன்னாள் பிரதிக்கல்விப் பணிப்பாளர், கனடா) பிரியமான மனைவியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.02.2020) திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சு. நடராசலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)
12, கில்னர் லேன் யாழ்ப்பாணம்.
021-222-2018, 001-416 2676712 (கனடா)

தகவல்:
சகோதர, சகோதரிகள்

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

## மரண அறிவித்தல்

பிறப்பு
01
-
02
-
1948



இறப்பு
26
-
01
-
2020

### பாலசுப்பிரமணியம் இராசமலர்

சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பாலசுப்பிரமணியத்தின் மனைவி இராசமலர் நேற்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை சிவபாக்கியம் தம்பதிகளின் புதல்வியும் நாகரத்தினம், இராசரத்தினம், சின்னம்மா, இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் பிரபாகரன், கௌரி, கஸ்தூரி ஆகியோரின் தாயாரும் மகேந்திரராஜா, சரவணபவானந்தன், ஹேமா ஆகியோரின் மாமியாரும் அக்ஷரா, அம்சிதா, மகதீஸ், மஞ்ஜரி, கேதுஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கரச்சி இந்துமயானத்தில் தகனக்கிரியை செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நாகலிங்க சுவாமி வீதி,
சங்கானை.

தகவல்
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும்

கடந்த 30.12.2019 திங்கட்கிழமை
சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் திருமதி சிவசூரியகுமாரன் சரஸ்வதி



அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதியபோசன நிகழ்வும் நாளை (28.01.2020) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**குடும்பத்தினர்.**
இலகடி வீதி,
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

## மரண அறிவித்தல்கள்

### அமிர்தாம்பாள் நடராஜக்குருக்கள்



பிறப்பு 30.11.1932
இறப்பு 26.01.2020

இந்தியாவைப் பிறப்பிடமாகவும் சரசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அமிர்தாம்பாள் நடராஜக்குருக்கள் நேற்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைபத மடைந்தார்.

அன்னார் சரசாலை நுணுவில் சிதம்பர விநாயகர் ஆலய ஆதீன குரு காலஞ்சென்ற சு.நடராஜக்குருக்கள் அவர்களின் அன்பு மனைவியும், மனோன்மணி அம்மா, காலஞ்சென்ற ஜெகதாம்பிகை மற்றும் இராஜேஸ்வரக்குருக்கள், லோகேஸ்வரக்குருக்கள், மகேஸ்வரக்குருக்கள் மகேஸ்வரி அம்மா, சந்தானலட்சுமி ஆகியோரின் அன்பு தாயும், ஸ்ரீகாந்தகுருக்கள், சண்முகானந்தக்குருக்கள், சித்ரா, மங்களேஸ்வரி, காலஞ்சென்ற புஸ்கலாம்பாள் மற்றும் ரவீந்திரசர்மா, சபாநாதக்குருக்கள் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2020) திங்கட்கிழமை காலை அவரது இல்லத்தில் நடைபெற்று, காலை 8.00 மணியளவில் பூதவுடல் சரசாலை ஆலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். **தகவல்**

**சரசாலை வடக்கு, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

**077 968 3044**

### திருமதி மங்களம்மா சிவப்பிரகாசம்



பிறப்பு 10.06.1928
இறப்பு 26.01.2020

காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் நல்லூர் அரசவீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மங்களம்மா சிவப்பிரகாசம் நேற்று (26.01.2020) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந் தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதர் கந்தையா மீனாட்சி தம்பதிகளின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சீதாதேவி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவப்பிரகாசத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ், கிருஸ்ணதாஸ், நாகம்மா, நடராஜா, பரமேஸ்வரி மற்றும் ராஜேஸ்வரி, சிவதாஸ் ஞானாம்பிகை ஆகியோரின் அன்புச்சகோதரியும் காலஞ்சென்ற தியாகலிங்கம் மற்றும் லோகேஸ்வரி, கணேசபிள்ளை காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் சோமதாஸ் (சுந்தரம் அன்கோ) ஆகியோரின் அன்புத்தாயாரும் சந்திரசேகரம், தவமணி, பாசமலர், வனிதா ஆகியோரின் அன்பு மாமியாரும் சசிகரன், கலாயினி, கஜேந்தினி, சிவகரன், வைஷ்ணவி, பாலசபரீசன் ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.01.2020) திங்கட்கிழமை நல்லூர் அரச வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் நீலகிரி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
சோமதாஸ் (சுந்தரம்)
சுந்தரம் அன்கோ & சுந்தரம் எசன்ஸ்

076 616 3932

# இனி ஒன்லைன்

கொழும்பு, ஜன. 27

சாரதி அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள தேவைப்படும் மருத்துவ சான்றிதழைப் பெற்றுக்கொள்வதற்கான தினம் மற்றும் நேரத்தை ஒதுக்கீடு செய்வது இன்றுமுதல் ஒன்லைன் முறைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து மற்றும் மின்சக்தி வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இந்த ஒன்லைனில் மருத்துவச் சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கான தினத்தையும் நேரத்தையும் முன்னதாகவே ஒதுக்கிக்கொண்டு செய்துக்கொள்ள முடியும்.

கடந்த காலத்தில் தூர பிரதேசத்தில் உள்ளவர்கள் நுகோகொடையில் உள்ள தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவனத்துக்கு வருகைத்தந்துதான் தினத்தை ஒதுக்கீடு செய்துக்கொள்ள முடியும்.

என்றாலும் அரச நிறுவனங்களில் மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் வினைத்திறன் வாய்ந்ததாக மாற்றியமைக்கப்படவேண்டுமென்ற ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய மருத்துவச் சான்றிதழ்களை பெற்றுக்கொள்வது ஒன்லைன் முறைமைக்கு மாற்றப்பட்டுள்ளது.

(ம-24)


# வடக்கின் கல்வி வளர்ச்சி அபிவிருத்தியை ஏற்படுத்துகின்றதா?

பழனித்துறை தர்மகுமாரன்
ஆசிரியர்
உடுவில் மகளிர் கல்லூரி.



வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் கல்வி வளர்ச்சி என்பது மித வேகமாகச் சென்றாலும் வீழ்ச்சி என்று கூறுவதற்கு இல்லை.
இருந்த போதும் பரீட்சை புள்ளிகளின் அடிப்படையில் தேசிய ரீதியில் முதல் மூன்று இடங்களுக்குள் இல்லை என்பது கவலைக்குரிய விடயம்.
இருந்த போதும் எழுத்தறிவு, வாசிப்பு என்பதை அடிப்படையாகக் கொண்டால் வடக்கு மாகாணம் கல்வி அறிவில் முன்னோக்கியே உள்ளது. அதிலும் இடைவிலகல் என்பது வெகுவாகக் குறைவடைந்துவிட்டது என்றே கூற வேண்டும். இதற்கு கல்வித் திணைக்களத்தின் காத்திரமான நடவடிக்கை என்பதைக் குறிப்பிட்டுக் கொள்ள வேண்டும்.
ஓர் இனத்தின் வளர்ச்சி இருப்பு, நாகரிகம், அபிவிருத்தி என்பது கல்வி அறிவிலேயே தங்கியுள்ளது. ஆனால் நாம் மாறாக கல்வி அறிவு என்பது பரீட்சைப் புள்ளிகளைக் கேள்வி வினாவாகக் கற்று அதி உச்ச பெறுபேற்றைப் பெற்றுக் கொள்வதாகக் கருதிக் கொள்கிறோம். இதனையே அநேகமான பெற்றோர்களும் விரும்புகின்றனர். இது ஒரு இனத்தின் வளர்ச்சி நோக்கிய பயணத்துக்கு உகந்தது அல்ல. வட மாகாணத்தைப் பொறுத்தவரையில் கல்வி என்பது கட்டாயமானது. எல்லோரும் சமமாகப் பெற்றுக் கொள்ள வேண்டியது. அத்துடன் பரீட்சை என்ற இலக்கு நோக்கிய பயணத்துடன் நின்றுவிடாது பரந்து விரிந்ததாக பல் தேர்ச்சிமிக்க மாணவர்களை உருவாக்க கூடியதாக இருக்க வேண்டும்.

**கல்வி வளர்ச்சி என்பது தனித்து உயர் பெறுபேறுகளை வெளிப்படுத்தவது மட்டுமல்ல அதிலிருந்து வெளிவந்தவர்களின் அறிவைக் கொண்டும் மாகாணத்தின் வளங்களைக் கொண்டும் அபிவிருத்தியை ஏற்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டி வறுமையை ஒழித்து நம்மை நம்பி நாம் வாழ்வதேயாகும். இதுவே ஓர் இனத்தின் தனித்துவமும் கூட.**



இன்றைய நிலையில் ஒப்புநோக்குவோமானால் கல்வி கற்ற சமூக அமைப்பு அதிகம் காணப்படுகின்றபோதும் அவர்களால் வடக்கு மாகாணத்தில் அபிவிருத்தி புரட்சியை ஏற்படுத்த முடியவில்லை. மாறாக அரசிடம் கையேந்தி நிற்கும் நிலையையே உருவாக்கியுள்ளது. இதனால் அரச சுற்றறிக்கைகளுக்கு வேலை செய்தால் போதும் என்ற நிலை உருவாகியுள்ளது. இது எமது அபிவிருத்தி நோக்கிய பயணத்துக்குத் தடையாக உள்ளது.தமிழினம் சுபீட்சமாகவும் சுயநிர்ணய உரிமையுடனும் வாழ வேண்டுமாக இருந்தால் அறிவுடன் தன்னம்பிக்கை, தன்மானம், சுயஉற்பத்திப் பொருளாதாரம், புத்தாக்கச் செயற்பாடுகள் என்பன உருவாக்கப்பட்டு வளர்ச்சிகாண வேண்டும். அதனுடன் நாகரிகம், ஒழுக்கம், கலைகள், கலாசாரப் பண்பாடுகள் சிதையாமல் பாதுகாக்க வேண்டும்.
இவற்றைப் பாதுகாப்பதற்கும், உயர்த்துவதற்கும் அடுத்த சந்ததியினருக்குக் கொண்டு செல்வதற்கும் கல்வி அறிவு என்பது மிகவும் முக்கியமானதும், காத்திரமானதுமாகும். எமது மாகாணத்தைப் பொறுத்தவரையில் இவை நலிந்தும் மெலிந்தும் சிதைந்தும் சின்னாபின்னமாக்கப்பட்டும் காணப்படுகின்றது.
இதனைச் சீர்செய்வதற்கு கல்விப்புலம் சார்ந்தவர்கள் தீர்க்கதரிசனமாகவும் தீர்க்கமாகவும் முன்மாதிரியான செயற்பாடுகளைச் செய்வதற்கும் திட்டங்களை முன்வைத்து முன்நகர்த்த வேண்டும். ஏனெனில் வடமாகாணத்தில் ஆரம்பங்களில் இருந்த தொழில்சாலைகள் மூடப்பட் டுள்ளன. இதற்கு மாற்றீடாகவோ அல்லது புதிதாகவோ தொழிற்சாலைகள் திறக்கப்படவில்லை. வடக்கு மாகாண பூமிதாய் தன்னை அர்ப்பணித்து தமிழர்கள் வாழ்வதற்கு இரக்கம் காட்டுகின்ற போதும் எம்மவர்கள் அதற்குத் தயாராக இல்லை. ஏனெனில் அரச வருமானம், வெளிநாட்டுப்பணம் என்பன தமிழனை அறிவு இருந்து சோம்பேறியாகக் கட்டிப் போட்டுள்ளது. தன்னிலை இழந்துதன்மானத்தை மறந்து தம்பட்டம் அடிக்கும் சமூக அமைப்பு ஒன்று உருவாகி வருகின்றது.
இந்த நிலை தொடருமானால் தமிழன் மீளமுடியாத அடிமையாகவே காணப்படுவான். இதனை உணர்ந்து எமது இளைய தலைமுறையினர் வடக்கு மாகாணத்தை அபிவிருத்தியடைய செய்யத் தற்துணிவுடன் எழுச்சியுற வேண்டும்.
எமது மாகாணத்தில் கல்வியின் ஊடாகப் பொறியியலாளர்களை, மருத்துவர்களை, முகாமையாளர்களை, கலைத்துறையினரை உருவாக்கி வருகின்ற போதும் அவர்களால் மாகாணத்தின் அபிவிருத்தி எழுச்சி கண்டுள்ளதா என்பதை ஆய்வு செய்தால் பெரியளவு மாற்றங்களை ஏற்படுத்தவில்லை.
பொறியியலாளர் பட்டம் பெற்றவர்கள் பலரும் எமது மாகாணத்தையும் நாட்டையும் விட்டு வெளியேறிவிட்டார்கள். அதற்கான காரணமாக கூறுவது வசதி வாய்ப்புக்கள் இல்லை. முதலீடுகளைச் செய்ய முடியாது. அரசியல் தலையீடு, இலாபம் கிடைக்குமா என்ற சந்தேகம். இவ்வாறான நிலைப்பாட்டில் தமிழர் பலர் வெளிநாடுகளின் அபிவிருத்தியில் தங்களை அர்ப்பணித்துள்ளனர். இதனால் அவர்களுக்கு வருமானம் கிடைக்கின்றது. ஆனால் வடக்கு மாகாணத்துக்கு எந்தவித நன்மையும் இல்லை. அதுமட்டுமன்றி கல்வித் தரப்படுத்தலில் வடக்கு மாகாணத்துக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களைப் பரீட்சையின் புள்ளிகளைப் பெற்று தம்மை இலவசக் கல்வியின் ஊடாக வளர்த்தவர்கள் தமது நாட்டையும் மாகாணத்தையும் விட்டு அந்நிய நாடுகளின் வளர்ச்சியில் பங்காளிகளாக இருப்பது விரும்பத்தக்கதல்ல.
இதற்குக் கட்டாய சட்டம் உருவாக்கப்பட வேண்டும். பொறியியலாளர் பட்டம் பெற்றவர்கள் கட்டாயமாக தமது மாகாணங்களில் குறைந்தது ஐந்து வருடமாவது வேலை செய்து முன்னேற்றகரமான வளர்ச்சிப் போக்கினை அபிவிருத்திக்கு வித்திட வேண்டும். வடக்கு மாகாணம் தன்னைத்தான் ஆள வேண்டுமென்றால் பொருளாதாரம், கல்வி, சுகாதரம் உயர்ந்த நிலைக்குக் கொண்டு செல்ல வேண்டும். தொழிற்சாலைகள், உற்பத்தி நிலையங்கள், சிறுகைத்தொழில்கள், விவசாயம், கடற்றொழில் என்பன வளர்ச்சியடைய வேண்டும். இல்லையேல் கல்வித்துறையில் ஏற்பட்ட வளர்ச்சியில் எந்தப் பிரயோசனமும் இல்லை.
எமது மருத்துவத்துறை மருந்து கொடுக்கும் வேலையை மட்டும் நன்றாக செய்து வருகின்றதே தவிர மாகாணத்தின் சுகாதார வளர்ச்சி, மருத்துவ வளர்ச்சி, போசாக்குள்ள உணவு உற்பத்தி வளர்ச்சி என்பன மந்தகதியிலே இருக்கின்றன.
வடக்கு மாகாணத்தின் கலைத்துறை காத்திரமற்ற, கறைபடிந்த நிலையில் உள்ளது. நாடகம், கூத்து என்பன அழிந்துவிடுமோ என்ற அச்சம் காணப்படுகின்றது. இசைக்கலை இம்மியளவும் வளர்ச்சி காணாது இறைவனை மட்டும் துதிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது.
அதேபோல நடனம், கீழைத்தேய வாத்தியங்கள் என்பன அத்திப்பூ பூத்தது போல காணப்படுகின்றன. ஆனால் கலைத்துறையின் மூலம் இந்தியாவின் தமிழ்நாடு அதிக வருமானத்தைப் பெற்று வருகின்றது. எமது மாகாணத்தில் கலைத்துறைப் பட்டதாரிகளை அதிகளவு பாடசாலைகளில் நியமிக்கப்பட்டும் மாணவர்களின் செயல்வடிவம் வெளிவரவில்லை. பொருளாதாரத்தையும் ஈட்டக் கூடியதாகவில்லை.
எனவே கல்வி வளர்ச்சி என்பது தனித்து உயர் பெறுபேறுகளை வெளிப்படுத்தவது மட்டுமல்ல அதிலிருந்து வெளிவந்தவர்களின் அறிவை கொண்டும் மாகாணத்தின் வளங்களைக் கொண்டும் அபிவிருத்தியை ஏற்படுத்தி பொருளாதாரத்தை ஈட்டி வறுமையை ஒழித்து நம்மைநம்பி நாம் வாழ்வதேயாகும். இதுவே ஓர் இனத்தின் தனித்துவமும் கூட.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொரோனாவை விட ஆபத்தானது எது?

ஒரு இடத்துக்கு உண்மை கால்நடையாகப் போய்ச் சேருமெனில், பொய் விமானத்தில் முன்னதாகவே போய்விடும். இப்போது கொரோனா வைரஸ் தொற்று விவகாரத்திலும் அப்படித்தான். வதந்திகள் இறக்கை முளைத்துப் பறந்து இலங்கையில் இதுவரையும் இல்லாத கொரோனாவையும் வலிந்து கொண்டுவந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு நிற்கின்றன.

சீனாவில் உருவானதாகச் சொல்லப்படும், கொரோனா வைரஸ் நினைத்துப் பார்க்கவே முடியாத அளவுக்கு அச்சுறுத்தலாக மாறியுள்ளது. பாம்பில் இருந்தே இந்த வைரஸ் தொற்று தோன்றினாலும், பின்னர் தொற்றுக்குள்ளானோர் மூலம் இன்னும் பரம்பலடையத் தொடங்கியுள்ளது. பிரமிட் வடிவில் இந்தப் பரவுகை நிகழ்கின்றது. அதாவது , ஒருவருக்கு இந்தக் கொரோனா தொற்றினால், அவர் தன்னைச் சூழ உள்ள 14 பேருக்கு அதைப் பரப்புபவராக மாறுகிறார். சீனாவில் கொரோனா வைரஸ் முதலில் பரவத் தொடங்கியது ஊஹான் என்னும் நகரத்தில் தான். சீனாவில் இதுவரை மருத்துவர்கள் இருவர் உட்பட 56 பேரை கொரோனா பலிவாங்கியிருக்கிறது. சுமார் 2000 க்கும் அதிகமானோர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். சீனாவின் ஊஹான், ஹுவாங்காங், இசோ உட்பட 13 நகரங்களில் பொது போக்குவரத்துக்குத் -தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நகரங்களை விட்டு மக்கள் வெளியேறவும் தடை விதித்துள்ளது. இதானால் 3.5 கோடி மக்கள் 'கொரோனாவின்' முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர்.

இப்படி என்னதான் பொத்திப் பொத்தி வைத்தாலும், நண்டு கொழுத்தால் வளையில் தங்குமா? அதேபோல, கொரோனாவும் எவ்வளவுகாலம் தான் சீனாவுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருவது. அதனால் அவுஸ்திரேலியா, அமெரிக்கா, சிங்கப்பூர், ஜேர்மனி, பிரான்ஸ், சவூதி அரேபியா என்று எல்லா நாடுகளுக்கும் கொரோனா ஒரு 'விசிட் ' அடிக்கலாம் என்று கிளம்பி விட்டது. இதனாலேயே கொரோனா விடயத்தில் இலங்கையர்கள், அதுவும் குறிப்பாக யாழ்ப்பாணத்தவர்கள் , அவதானமாக இருக்க வேண்டும் என மருத்துவர் யமுனானந்தா எச்சரிக்கை விடுத்திருந்தார். ஆனால் அதற்கிடையில் கொழும்பில் சீனப் பெண் உட்பட இருவர், காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்கள். காய்ச்சல், சீனப் பெண் என்ற இரண்டு புள்ளிகளையும் வைத்து, ' இருவருக்கு கொரோனா' என்று எல்லோரும் கூவத் தொடங்கி விட்டார்கள். ( ஆனால் உண்மையில் அவர்கள் இருவரும் சாதாரண காய்ச்சலாலேயே பாதிக்கப்பட்டுள்ளார்கள் என மருத்துவ அறிக்கைகள் இப்போது உறுதி செய்துள்ளன)

அதைவிட இன்னும் இருவரும் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருப்பதாக தங்கள் பங்குக்கு இன்னும் கொஞ்சம் மெருகூட்டினார்கள். இந்த வதந்திகளால் இப்போது மருத்துவமனைகளில் சாதாரண காய்ச்சல் என்று சேர்க்கப்பட்டவர்கள் கூட, தங்களுக்கு கொரோனா தான் வந்துவிட்டதோ என்று பீதியடையக் கூடும். ஒரு நோய் குணமடைவதற்கு மருந்து ஐம்பது சதவீதமே காரணம். மிகுதி ஐம்பது சதவீதம் மனோபலமே. கொரோனா பற்றிய வதந்திகளால் ஏற்கனவே நோயால் துவண்டிருக்கும் போது மனோபலம் சுக்குநூறாகி விடும். பிறகெப்படி நோய் சுகப்படும்? கொரோனாவை விடவும் வதந்திகள் ஆபத்தானவை. கொஞ்சம் அவதானத்தோடு, சமூக அக்கறையும் உள்ளவர்களாக இருப்போம்.

# விசாரணைகளில் அழுத்தம் இல்லை

## பந்துல தெரிவிப்பு



**கொழும்பு, ஜன.27**

**நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல்பதிவுகள் குறித்து விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப் புலனாய்வு பிரிவுக்கு அரசு எவ்வித ஆலோசனைகளையும் வழங்கவில்லை.**

இவ்வாறு தகவல் மற்றும் தொடர்பாடல், உயர்கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நீதித்துறையின் மீது நாட்டு மக்கள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் தவறுகள் திருத்திக் கொள்ளப்பட வேண்டும்.

மத்தியவங்கியின்பிணை முறி கொடுக்கல் வாங்கல் விநியோகத்தில முறைக்கேடு கள் இடம் பெற்றுள்ளன என்பதை பொதுஜன பெரமுனவினரே ஆரம்பத்தில் பகிரங்கப்படுத்தினோம்.

தற்போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக்காலத்திலும் முறிகள் கொடுக்கல் வாங்கலில் மோசடிகள் இடம் பெற்றுள்ளன என்று குறிப்பிடப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரன் உரிய தெளிவுப்படுத்தலை விரைவில் ஊடங்கள் ஊடாக முன்னெடுப்பார்.

சமூக வலைத்தளங்களில் கடந்த வாரங்களில் பதிவேற்றம் செய்யப்பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் சர்ச்சைக்குரிய குரல் பதிவுகள் தற்போது முழு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன.

இந்த குரல் பதிவுகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகுவது நிறுத்தப்பட்டுள்ளது. இதன் பின்னணியில் அரசு செயற்படுவதாக குறிப்பிடப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது- என்றார். (எ)

# மூன்று பஸ்களில் கஞ்சா பொதிகள்

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று முன்தினம் கொழும்பு நோக்கிப் பயணித்த பஸ்கள். புளியங்குளம் பகுதியில் மறிக்கப்பட்டு சோதனை மேற்கொண்ட போது 3 பஸ்களில் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. யாழ்ப்பாணத்திலிருந்து வென்னப்புவ நோக்கிப் பயணித்த இ.போ.சபைக்குச் சொந்தமான பஸ்ஸிலும், கொழும்பு நோக்கிப் பயணித்த இரண்டு தனியார் பஸ்களிலும் கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன. கஞ்சாப் பொதிகள் பயணிகளின் உடமையில் இருந்து மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்ட பஸ்கள் புளியங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப்படும் என்று பொலிஸார் தெரிவித்தனர். (க-105)

# கற்றல் கருவிகள் கையளிப்பு

வவுனியா.ஜன.27

வவுனியா செட்டிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த வறிய மாணவர்கள் 21 பேருக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வெளிச்சம் அறக்கட்டளை ஊடாக புலம்பெயர் தேசத்தில் இருந்து வருகை தந்த நடராஜா தம்பதிகளின் நிதி பங்களிப்பில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஜ-222)

# பிரதேச செயலகங்கள் மூலம் வீடுகள் வழங்க நடவடிக்கை

## விவரங்களும் கோரப்பட்டுள்ளன

சாவகச்சேரி, ஜன. 27

ஆறு இலட்சம் ரூபா பெறுமதியான தலா இரு வீடுகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு குடும்பத்துக்கும், வசதியான வீடு என்னும் தொனிப் பொருளில் இந்தவீடுகள்வழங்கப்படவுள்ள என்று தெரிவிக்கப்பட்டது.


தேசிய வீடமைப்பு அதிகார சபையின் 2020 ஆம் ஆண்டுக்கான கிராமத்துக்கு வீடு நாட்டுக்கு எதிர்காலம் ( கமட்ட ஹெயக் ரட்டட்ட ஹெட்டக் ) எனும்வேலைத் திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக இந் வீடுகள் வழங்கப்படவுள்ளன.

தலா 6 லட்சம் ரூபா பெறுமதியான இரு புதிய வீடுகள் வழங்கப்படவுள்ளதோடு, பழுதடைந்த தலா இரண்டு வீடுகளைச் சீரமைப்பதற்கு 3 லட்சம் ரூபாவும் வழங்கப்படவுள்ளன. அதற்கான பயனாளிகள் விவரங்களை அனுப்பி. வைக்குமாறு பிரதேச செயலர்களிடம் கோரப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசத்தில் நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டுள்ள போதிலும் நிரந்தர வீடு இல்லாத சொந்தக் காணியை வைத்துள்ள குறைந்த வருமானம் உள்ள குடும்பங்கள், பெண்களை தலைமையாகக் கொண்ட அல்லது மாற்றுத் திறனாளி, நீண்டகாலம் நோயினால் பாதிக்கப்பட்ட ஆள்களைக் கொண்டவர்கள், தங்கி வாழ்வோர் எண்ணிக்கை கூடுதலாக உள்ள குடும்பங்கள், பாடசாலைகளுக்குச் செல்லும் வயதில் சிறுவர்களை கூடுதலாகக் கொண்ட குடும்பங்கள் இந்தத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்படல் வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. வீடுகள் 550 சதுர அடி பரப்பளவைக் கொண்டதாகவும் புதிய வீட்டுடன் மலசலக்கூடமும் அமைக்கப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது (ஜ-9)

# இனவாதம் ஒழியாதவரை நாட்டுக்கு மீட்சியில்லை

**இந்துமதி**




இனவாதத்துக்கும் அதை விதைத்து வருபவர்களுக்கும் முற்றுப்புள்ளி இடாதவரையில் இந்த நாட்டில் அபிவிருத்தியை எதிர்பார்க்க முடியாது. கோத்தபாய ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்ததன் பின்னர் இனவாதத்துடன் தொடர்புடைய சில வேண்டத்தகாத சம்பவங்கள் இடம்பெற்று விட்டன. முதலில் நாட்டின் சுதந்திர தின நிகழ்வின் போது சிங்கள மொழியில் மட்டுமே தேசிய கீதத்தை இசைக்க வேண்டும் என்றனர். பின்னர் மன்னாரில் அரசுடன் இணைந்த நிறுவனமொன்றின் பெயர்ப் பலகையில் தமிழுக்கு முதலிடம் வழங்கப்பட்டதைப் பொறுக்க முடியாத அமைச்சர் விமல் வீரவன்ச தமிழ் மொழியில் எழுதப்பட்டதை அழித்து அந்த இடத்தில் சிங்கள மொழியைப் புகுத்தியுள்ளார். இத்துடன் அவர் நின்று விடவில்லை. தமது இயல்புக்கு ஏற்ற வகையில் இனவாதக் கருத்துக்களையும் உதிர்க்கின்றார்.

### தமிழர்களுக்கு எதுவுமே இல்லை

இந்த நாடு முழுவதும் சிங்கள, பௌத்தர்களுக்கே உரியது. தமிழர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் மட்டுமே, பாரம்பரிய பிரதேசங்களெனத் தமிழர்களுக்கு எதுவுமே இல்லை. எந்த நிலையிலும் தமிழ் மொழிக்கு முதலிடத்தை வழங்க முடியாது. அவ்வாறு செய்வதற்கு சிங்களவர்கள் முட்டாள்களல்ல என்றெல்லாம் அவர் இனவாதக் கருத்துக்களைக் கக்கியிருக்கிறார். அவரின் கருத்துக்கள் தொடர்பாக அரசின் சார்பாக எந்தக் கருத்தும் வெளியிடப்படவில்லை. ஆனால் தமிழ் அரசியல்வாதிகளில் சிலர் விமலின் இனவாதச் செயலைக் கோபத்துடன் கண்டித்துள்ளனர். இதைவிட அவர்களால் வேறெதைச் செய்துவிட முடியும். சகல இன மக்களும் தாம் அனைவருமே இலங்கையர்கள் என்ற ஒரே எண்ணத்துடன் வாழும் போது தான் இந்த நாட்டில் இனவுணர்வைக் கட்டியெழுப்ப முடியும். இன ஐக்கியமும், சகோதரத்துவமும் மேம்படும். நாட்டில் ஒரு பிரச்சினை தோன்றும் போது அனைத்து மக்களும அதற்குரிய தீர்வு தொடர்பாக ஒற்றுமையுடன் செயற்பட முடியும். ஆனால் இன்று அந்த நிலை காணப்படுகின்றதா? இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும் நாட்டு மக்கள் பிரிந்து காணப்படுகின்றனர். இவர்கள் தமது இனத்துக்கும், மொழிக்கும், மதத்துக்கும் முக்கியத்துவம் அளிப்பதிலேயே காலத்தைக் கடத்தி வருகின்றனர். இவர்களிடம் ஐக்கியத்தை ஏற்படுத்துவது தான் இன்றைய காலத்தின் கடமையாகும்.

### இனவாத அரசியல்வாதிகள்

இனவாத அரசியல்வாதிகள் தம்மைத் திருத்திக் கொண்டால் மக்கள் தாமாகவே தம்மைத் திருத்திக் கொள்வார்கள். ஆனால் அது இடம்பெறுவதாகவே தெரியவில்லை. தென் பகுதி அரசியல்வாதிகளில் சிலர் இனவாதத்தின் மூலமாகவே தமது அரசியல் இருப்பைத் தக்க வைப்பதற்கு முயற்சி செய்கின்றனர். இதுவொரு ஆபத்தான விளையாட்டு என்பதைக் குறித்த தரப்பினர் இன்னமும் உணரவில்லை ஆனால் முழு நாட்டுக்கும் இதனால் பாதிப்பு ஏற்படுவதை இவர்கள் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். பன்னாட்டு அளவில் நாம் பார்க்கும் போது நிறவெறி மற்றும் இனவெறி ஆகியன செயலிழந்து செல்வதைக் காண முடிகின்றது. ஒரு காலத்தில் அமெரிக்கா இந்த இரண்டு விடயங்களிலும் மோசமான அடைவு மட்டத்தை எட்டி நின்றது. கறுப்பின மக்கள் அமெரிக்காவில் அனுபவித்த அவலங்கள் மிகக் கொடியன. விலங்குகளை விட மோசமாக அவர்கள் அங்கு நடத்தப்பட்டனர். உலகின் புகழ் பூத்த தலைவரான ஆபிரகாம் லிங்கன் இதற்கு ஒரு முடிவைக் காட்டினார். தென்னாபிரிக்காவில் குடியேறிய சிறுபான்மையின வெள்ளையர்கள் அந்த நாட்டின் குடிமக்களான பெரும்பான்மையினக் கறுப்பு இன மக்களை நீண்ட ஆண்டுகளாக அடிமைகளாக அடக்கி ஆண்டனர். அங்கு இனவெறி.கொடிகட்டிப் பறந்தது. ஆளும் உரிமையைச் சிறுபான்மை வெள்ளையர்கள் தமதாக்கிக் கொண்டனர். உலக நாடுகளின் நெருக்கடிகளும் பொருளாதாரத் தடைகளும் வெள்ளையர் அரசை நெருக்கிப் பிடித்ததைத் தொடர்ந்து வெள்ளையர்கள் வேறுவழியின்றி கறுப்பினத்தலைவர்களிடம் ஆட்சியை ஒப்படைத்தனர். இந்த வகையில் கறுப்பின மக்களின் தலைவரான நெல்சன் மண்டேலா தென்னாபிரிக்காவின் கறுப்பினத் தலைவரானார். இதே போன்ற தொரு ஆட்சிமாற்றம் முன்னர் ரொடீசியா என அழைக்கப்பட்ட சிம்பாப்பே நாட்டிலும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

### மொழியும் மதமும்

இலங்கையைப் பொறுத்தவரையில் நிறவெறிக்கு இடமில்லை ஏனென்றால் இங்கு வாழ்கின்ற அனைத்து இன மக்களும் நிறத்தைப் பொறுத்த வரையில் வேறுபாடு இல்லாதவர்களாகவே காணப்படுகின்றனர். ஆனால் நிறத்துக்கு மாற்றீடாக மொழியும். மதமும் பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன.

பெரும்பான்மையினரான சிங்க பௌத்தர்கள் இந்த நாடு தமக்கு மட்டுமே சொந்தமானதென உரிமை கோருகின்றனர். ஏனைய இனத்தவர்களை அவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகளாகவே மதிக்கின்றனர். இதனால் எதற்கெடுத்தாலும் சிங்களம், பௌத்தம் ஆகியவற்றின் முக்கியத்துவம் தொடர்பாகக் குரல் கொடுக்கின்றனர்.

சிங்கள பௌத்த மக்கள் தவிர்ந்த ஏனைய இனத்தவர்கள் விரும்பினால் இந்த நாட்டில் வாழலாம், விருப்பமில்லையென்றால் வேறு இடங்களைப் பார்த்துக் கொள்ளலாம் என்பதே இவர்களது பிரதான கோசமாகக் காணப்படுகின்றது. இதில் முழுக்க முழுக்க இனவாதமே புதைந்து காணப்படுகின்றது.

இதே நிலை தொடருமேயானால் உலகைப் படைத்த ஆண்டவனால் கூட இந்த நாட்டை அழிவிலிருந்து காப்பாற்ற முடியாது. இனங்களுக்கிடையில் பிரச்சினைகளும், புரிந்துணர்வின்மையும் சந்தேகங்களும் தொடரும்போது நாட்டில் அபிவிருத்தியை எவ்வாறு எதிர்பார்க் கமுடியும்? ஆட்சியாளர்கள் தீர்க்கபட வேண்டிய பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணாது நாடு அபிவிருத்தி அடையுமென எதிர்பார்த்துக் கொண்டிருப்பதை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது, நாட்டைப் பற்றிச் சிந்திப்பதற்கு முதல் நாட்டு மக்கள் அனைவர்கள் தொடர்பாகவும் பாராபட்சமின்றிச் சிந்திக்க வேண்டும். நாட்டு மக்கள் போதங்களின்றி மகிழ்ச்சியுடன் வாழ்ந்தால் நாடு தானாகவே மகிழ்ச்சியில் மிதக்கும்.

---

**ஆசிரியருக்கான கடிதம்**

## சில்லறைக்குத் தட்டுப்பாடு

சில்லறைக் காசுகளுக்கான தட்டுப்பாடு என்பது நாடளாவிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இதற்குப் பல காரணங்கள் உள்ளன. நாகரிக வளர்ச்சியும், நாணயங்களின் பெறுமதியின் வீழ்ச்சியும் அவற்றில் முக்கியமானவையாகும். வர்த்தக நிலையமொன்றில் கொள்வனவு செய்யும் போது அல்லது பஸ்ஸில் பயணிக்கும் போது தாள் காசைக் கொடுப்பது தான் இன்றைய நாகரிகம். ஒரு ரூபா, இரண்டு ரூபா போன்ற மிகுதி பணத்தைப் பெறாமலே செல்லும் இளையவர்களையும், அதே நேரம் ஒரு ரூபா மிகுதி என்றால் கூட அதற்காக முரண்படும் சிலரையும் எங்கள் அன்றாட வாழ்க்கையில் சந்திக்கும் வாய்ப்பும் உள்ளது. சாதாரணமாக 5 ரூபா நாணயங்களை அரசு பழக்கத்துக்கு விட்ட போதிலும் அந்த நாணயத்தில் கழுத்துச் சங்கிலிகள் தாயாரிக்கப்பட்டதால், சந்தையில் இருந்த 5 ரூபா நாணயங்கள் மறையத் தொடங்கின. 10 ரூபா தாள்களை நீக்கிவிட்டு 10 ரூபா நாணயக்குற்றிகளை நாட்டில் உள்ள 9 மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அச்சிட்டனர். ஆயினும் பலர் இந்த 9 மாகாணங்களில் நாணயங்களையும் சேகரிக்கத் தொடங்கியதால் அந்த நடவடிக்கையும் 10 ரூபா நாணயங்களை முடக்கிவிட்டது. அது மட்டுமல்லாது உலகிலேயே பெரிய செல்வந்தராக விளங்குபவராகக் கூறப்படும் குபேரனும் இந்தச் சில்லறைத் தட்டுப்பாட்டுக்களுக்கு ஒரு காரணகர்த்தாவாக திகழ்கிறார். இவ்வாறு பல காரணங்களால் சில்லறைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

**- ஆனந், யாழ்ப்பாணம்.**

---

**வாசகர்களே!**

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்து சேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர். முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு. அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.

# சிறப்பு உரிமையை ரஞ்சன் பயன்படுத்தும் விதம் தவறு

## 'சிங்கலே' அமைப்புக் குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன.27

ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையைத் தவறான விதத்தில் பயன்படுத்துகிறார். அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் அவசியம்.

இவ்வாறு சிங்களே அமைப்பின் பொதுச் செயலாளர் மெடில்லே பஞ்ஞாலோக்க தேரர் குற்றஞ் சுமத்தியுள்ளார்.

மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஓய்வு பெற்ற மேஜர் அஜித் பிரசன்னவை நேரில் சென்று பார்வையிட்ட பின்னர், ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஓய்வு பெற்ற முன்னாள் இராணுவ மேஜர் அஜித் பிரசன்ன அனைவரின் அபிமானத்தை வென்றுள்ளார். அவர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அச்சமின்றி உண்மை நிலையை வெளிப்படுத்தக்கூடியவர்.

அதனால்தான் அவர் மீது பல்வேறான முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

அதேவேளை நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க நாடாளுமன்ற சிறப்புரிமையை தவறான விதத்தில் பயன்படுத்தி ஊடக பிரதானிகளுக்கும், ஊடக நிறுவனங்களுக்கு எதிராகவும் போலிப் பரப்புரைகளை முன்னெடுத்து வருகின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க தொடர்பாக உரிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். என்றார். (எ)

# தலைமையில் மாற்றம் என்பது மக்கள் விருப்பு

## பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு, ஜன.27

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமை மாற வேண்டுமென்றே மக்கள் தற்போது எதிர்பார்க்கின்றனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். களனியில் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசிய கட்சியின் முக்கிய பிரச்சினையே தலைமைத்துவ பதவியாகும். கட்சியிலுள்ள பெரும்பான்மையினர் தலைமைத்துவத்தில் மாற்றம் வேண்டுமென்ற கருத்தையே முன்வைத்து வருகின்றனர்.

அத்தகைய எண்ணத்தில்தான் நாமும் இருக்கின்றோம். அதாவது கடந்த ஜனாதிபதி தேர்தல் மக்களின் எதிர்பார்ப்பு ஆகியவற்றை அடிப்படையாக வைத்து அவதானிக்கும்போது கட்டாயம் கட்சி தலைமையில் மாற்றம் அவசியம் என்பது உறுதியாகின்றது.

சஜித்துக்கு குறித்த தலைமை பதவியை வழங்குவது தொடர்பான யோசனையும் முன்வைக்கப்பட்டு இருக்கின்றது-என்றார். (எ)

# மருத்துவர் பற்றாக்குறை: முல்லையில் கவனவீர்ப்பு



முல்லைத்தீவு, ஜன. 27

முல்லைத்தீவுப் பிரதேச மருத்துவமனையில் மருத்துவர்களை நியமிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 9 மணிக்கு முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை வாயிலை மறித்து கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

முல்லைத்தீவு நகர அபிவிருத்தி ஒன்றியம், வர்த்தக சங்கத்தினர், பேருந்து சங்கத்தினர், பொது அமைப்புக்கள், பொதுச்சந்தை சங்கத்தினர், கிராம அமைப்புக்கள் ஒன்றிணைந்து இந்த அறிவிப்பை விடுத்துள்ளன.

இது தொடர்பிலான ஊடக சந்திப்பு முல்லைத்தீவு நகர வர்த்தக சங்க கட்டடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. அதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (து-19)

# கைதாவோரைச் சமமாக நடத்துமாறு மீளப் பணிப்பு

கொழும்பு, ஜன. 27

கைது செய்யப்படும் அனைவரையும் சமமாக நடத்துமாறும் எந்தவித அழுத்தங்களுக்கும் கீழ்படியாது செயற்படுமாறும் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ பதிற்கடமை பொலிஸ் மாஅதிபருக்குப் பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

எந்தவொரு வெளி நோக்கங்களுக்காகவும் எவரும் கைது செய்யப்படக்கூடாதென்றும் அவர் கூறியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கைது நடவடிக்கைகள் தண்டனையின் ஒரு பகுதியல்ல. அது கைதுசெய்யப்படும் நபரின் நற்பெயருக்கும் சமூக அந்தஸ்துக்கும் பெரிதும் பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடு.

இதனால் பொலிஸார் மிகுந்த கவனத்தோடும் சட்டதிட்டங்களை முழுமையாக பேணியும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மருத்துவர்கள் போன்ற தொழில்வல்லுநர்களைக் கைதுசெய்யும்போது பொலிஸ் அதிகாரிகள் கைது செய்யப்படும் நபருக்கு உரிய மரியாதையை வழங்குதல் வேண்டும்.

தூரநோக்குடன் உரிய முறையில் கடமையை நிறைவேற்றுமாறும் தேவையானபோது சட்ட மாஅதிபரின் ஆலோசனையின் பேரில் செயற்படுமாறும் ஜனாதிபதியின் செயலாளரால் பதில் பொலிஸ் மாஅதிபர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். (த)

# வீட்டினுள் நுழைந்த கும்பல் குடும்பத்தினர் மீது தாக்குல்

சாவகச்சேரி,ஜன. 27

நள்ளிரவு வேளையில் வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத கும்பல் ஆழ்ந்த உறக்கத்திலிருந்த குடும்பத்தின் மீது தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்சென்றுள்ளது.

தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் காயமடைந்தனர்.

அயலவர்கள் பொலிஸாருக்கு அறிவிக்கவே அங்கு சென்ற பொலிஸார் காயமடைந்த நால்வரையும் மீட்டு சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் நள்ளிரவில் தென்மராட்சி தெற்கு மறவன்புலவு மத்தியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த நவநீதன் அருட்சோதி (வயது 40) இவரது பிள்ளைகளான நவநீதன் கஜானன் (வயது 16) நவநீதன் நவீனா (வயது 9) மற்றும் உரும்பிராய் கிழக்கைச் சேர்ந்த வாசுதேவன் கஜீபன் (வயது 25) ஆகியோரே காயமடைந்து சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

# மறைமாவட்ட 39ஆவது ஆண்டு



மன்னார், ஜன. 27

மன்னார் மறை மாவட்டம் உதயமாகி 39 ஆவது ஆண்டுப் பூர்த்தி நிறைவு விழா மன்னார் தோட்டவெளி மறைசாட்சியர் ஆலயத்தில் நேற்றுமுன்தினம் திருவிழா திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் காலை 7.30 மணியளவில் திருவிழா திருப்பலி கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்பட்டது.

மன்னார் மறைசாட்சியரின் மண் தோட்டவெளி பகுதியில் உள்ள தோட்டவெளி மறைசாட்சியர் ஆலயத்தில் நடைபெற்ற திருவிழா திருப்பலியின் போது வன்னி மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை அன்ரனி விக்டர் சோசை அடிகளார், அருட்தந்தையர்கள், அருட் சகோதரிகள், மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்றாஸ், வன்னித் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மன்னார் மறைமாவட்ட மக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர். (து-56)

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.27

யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவட்டச்செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

மாவட்ட இணைத்தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் கூட்டம் நடைபெறும் என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவித்துள்ளார். (க9)

# மெய்வன்மைப் போட்டி



கொடிகாமம்,ஜன.27

வரணி இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் சி.உதயசங்கர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பழைய மாணவனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரை யாளருமான சி.உதயகுமார், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய தமிழ்ப்பாட உதவிக்கல்விப் பணிப்பாளர் து.ஜெயதேவன், கௌரவ விருந்தினர்களாக சேவலப்பிட்டி கந்தசுவாமி ஆலய பூசகர் பிரம்மஸ்ரீ கு.கஜேந்திரக்குருக்கள், சேவலப்பிட்டி கந்தசுவாமி ஆலய பரம்பரை பூசகர் பிரம்மஸ்ரீ இ.குகதாசசர்மா உட்பட பலர் கலந்துகொண்டனர். விளையாட்டுப் போட்டியில் பாரதி இல்லம் முதலாம் இடத்தையும், நாவலர் இல்லம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. (ஐ-159)

# அபிவிருத்திச் சிக்கல்கள் ஜனாதிபதியுடன் ஆராய்வு

## அவற்றை உடன் அறிக்கையிடுமாறு திணைக்களங்களிடம் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

*யாழ்ப்பாண மாவட்டத்தில் அபிவிருத்திச் செயற்பாடுகளில் திணைக்களங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், சவால்கள் தொடர்பில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்‌ஷவுடன் ஆராயப்படவுள்ளன.*

இத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்கும் உள்ளூராட்சி சபைகள், பிரதேச செயலகங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் இடர்பாடுகள் தொடர்பில் ஆங்கில மொழியில் தயாரித்து உடன் அனுப்பி வைக்கவும்.

இவ்வாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் சகல திணைக்களத் தலைவர்களுக்கும் கடிதம் மூலமாகப் பணித்துள்ளார்.

குடாநாட்டில் உள்ள மலக்கழிவு, கழிவு நீர் என்பன சுத்திகரிப்புப் பொறிமுறையற்று கல்லுண்டாயில் கொட்டப்படுகின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் வீடற்றவர், காணியற்றவர்கள் தொகை அதிகரித்த வண்ணம் உள்ளன.

பிரதேச செயலாளர் பிரிவில் நூற்றுக்கணக்கானோர் தேசிய வீடமைப்பு அதிகார சபை ஊடாக வீட்டை ஆரம்பித்து வீடுகளைக் கட்டி முடிப்பதில் முழுமையான நிதி மற்றும் மணல் மண் கிடைப்பதில் இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

உள்ளூராட்சி சபைகளில் வீதி தொழிலாளி, சுகாதாரத் தொழிலாளி, சுகாதார மேற்பார்வையாளர், சாரதி, காவலாளி, பொதுச்சுகாதார பரிசோதகர், வேலைவெளிக்கள தொழிலாளி போன்ற பதவிகள் ஆளணி உருவாக்கம் இன்றி மிக கஷ்டமான நிலையில் காண்படுகின்றன.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தை இரண்டாகப் பிரித்தலில் உள்ள இடர்பாடுகளை நீக்குதல் வேண்டும் என்பன உள்ளிட்ட ஏராளமான விடயங்கள் யாழ்ப்பாணத்தில் சிக்கலில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-50)

# தமிழரின் இருப்பை அழிக்க அரசமைப்பில் மாற்றங்கள்

## முன்னணி கூறுகின்றது

யாழ்ப்பாணம், ஜன. 27

தமிழ் மக்களின் இருப்பை அழிக்க சிங்கள பேரினவாதிகள் திட்டமிட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதை உறுதிப்படுத்தும் வகையில்தான், கோத்தாபய ராஜபக்‌ஷ அரசு புதிய அரசமைப்பை எம்மவர்களின் துணையுடன் கொண்டு வந்து நிறைவேற்றும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன்.

மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண நிலையான மீன்பிடிக் கைத்தொழில் தொடர்பான வட்டமேசைக் கலந்துரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் விடுதி ஒன்றில் கடந்தவாரம் நடைபெற்றது. அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

குடாநாட்டில் பல்லாயிரம் பேர் சொந்தக் காணிகள் இன்றியுள்ளனர்.

13, 13 பிளஸ் மற்றும் 13 மைனஸ் பற்றியெல்லாம் பேசப்படுகிறது. ஆனால் சத்தமில்லாமல் தமிழர்களின் அனைத்து உரிமைகளையும் பறித்தெடுக்கக்கூடிய செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

நாட்டை பௌத்த நாடாக ஏற்றுக் கொள்கிற அரசமைப்பொன்று நாடாளுமன்றில் 2016 ஆம் ஆண்டு தொடக்கம் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது.

தேர்தலுக்குப் பின்னர் கோத்தாபய ராஜபக்‌ஷ தமிழ்ப் பிரதிநிதிகளின் ஆதரவோடு அது நிறைவேற்றப்பட இருக்கிறது. தமிழ் மக்களுக்கு பெரும் ஆபத்தாக அமையும்.

இது, மீன்பிடியைவிட்டு வேறு தொழிலுக்குப் போகவே செய்யும். கடல் ஆதிக்கம் முற்று முழுதாக தமிழ் மக்களிடமிருந்து பறிக்கப்படுகின்றது. இதன் ஆபத்தை அனைவரும் விளங்கிக் கொள்ளவேண்டும். இங்கு ஒரு தரப்பு பௌத்த பேரினவாதத்துடன் இணைந்து செயற்படுகிறது. மறு தரப்பு இந்திய மேற்கு நாடுகளின் எடுபிடிகளாகச் செயற்படுகின்றது. இத்தகைய தரப்புக்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. ஆகவே மக்கள் சிந்திக்க வேண்டும். என்றார். (து-20)

# சக்கரநாற்காலி கையளிப்பு

வவுனியா செட்டிகுளம் தட்டான்குளம் பிரதேசத்தில் வசிக்கும் சந்தானம் லட்சுமி என்ற மூதாட்டிக்கு சக்கரநாற்காலி வழங்கப்பட்டது.வி 3 பவுண்டேசன் ஊடாக அண்மையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் வவனியா மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் செ.ஶ்ரீநிவாசன், குறித்த பகுதி கிராம அலுவலகர் கோகுலராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-222)

# பற்சுகாதாரச் செயலமர்வு





முல்லைத்தீவு,ஜன.27

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தில் உள்ள தரம் ஒன்று ஆசிரியர்களுக்கான பற்சுகாதாரம் தொடர்பான செயலமர்வு கடந்த புதன்கிழமை வலய கல்வித் திணைக்கள மண்டபத்தில் நடைபெற்றது.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் கனடா தமிழ் மருத்துவ நலச் சங்கத்தின் அனுசரணையில் இந்தச் செயலமர்வு இடம்பெற்றது.

இதில் துணுக்காய் வலய ஆரம்பப் பிரிவு பிரதி க்கல்விப் பணிப்பாளர் எஸ். பிரதீபன், மாங்குளம் மருத்துவமனை பல் மருத்துவர் எஸ். பவிதரன், கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் பல் மருத்துவர் ஜீவானந்தம், கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் செயலாளர் ஶ்ரீகௌரிபாலா மற்றும் நிறுவன உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஜ-222)

# ஜனாதிபதியின் கருத்தை நாங்கள் ஏற்கமாட்டோம்

## உறவுகளின் முல்லைச் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 27

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் விடுதலைப்புலிகளால் கொல்லப்பட்டனர் என்று கோத்தாபய கூறுகின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் முல்லைத்தீவு சங்கத் தலைவி மரியசுரேஷ் ஈஸ்வரி தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் அவர் கடந்த வெள்ளிக்கிழமை நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேலும் தெரிவித்ததாவது:

“ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ விடுத்த அறிக்கை ஒன்றில், காணாமல் ஆக்கப்பட்ட எவருமே தன்னிடம் இல்லை என்பதையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குகின்றேன் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அவரது கருத்தை நாங்கள் மறுக்கின்றோம். போர்க்காலத்தில் கோத்தாபய பாதுகாப்புச் செயலராக இருந்த காலகட்டத்தில்தான் எமது உறவுகளை படையினரிடம் கையளித்தோம்.

மே 18ஆம் திகதி போர் வெற்றிவிழாக் கொண்டாடித்தான் எங்கள் உறவுகளை அவர்கள் பொறுப்பேற்றார்கள். எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் விட யத்தில் விடுதலைப் புலிகள் மீது பழி சுமத்துவதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்து வெளியேறித்தான் எங்கள் பிள்ளைகளை படையினரிடம் ஒப்படைத்தோம்.

வெள்ளைக் கொடியுடன் உங்கள் பிள்ளைகளை ஒப்படையுங்கள் நாங்கள் விடுவிப்போம் என்று இன்று படைத் தளபதிகளாக இருக்கின்றவர்கள் அன்று தெரிவித்திருந்தனர். ஜனாதிபதியின் இறப்புச் சான்றிதழுக்காகவா பத்து ஆண்டுகள் காத்திருந்தோம்? படையினரிடம் கையளித்த உறவுகள் விடயத்தில் எமக்கு நீதி வேண்டும்.



தான் போர்க் குற்றத்து க்குள்ளிருந்து தப்புவதற்காக எங்களைக் குற்றவா ளிகளாக்கி இறப்புச் சான்றிதழ் வழங்குவதை நாங்கள் ஏற்கப்போவதில்லை. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு இந்த அரசுதான் பொறுப்புக் கூற வேண்டும் என்பதில் நாங்கள் தெளிவாக, உறுதியாக உள்ளோம். எங்களுக்கான நீதி இலங்கையில் கிடைக்காது. சர்வதேச குற்றவியல் நீதி மன்றில் குற்றவாளிகளை நிறுத்தி எங்கள் உறவுகளுக்கு என்ன நடந்தது? எப்போது விடுதலை என்பதைக் கூறவேண்டும். அதுவரை நாங்கள் போராட்டத்தைக் கைவிடமாட்டோம் என்றுமேலும்தெரி வித்துள்ளார். (து-246,19)

# மின் தடை

யாழ்ப்பாணம்,ஜன.27

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்வி நியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக வடக்கின் பல பகுதிகளில் மின் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாளை செவ்வாய்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை **வவுனியா மாவட்டத்தில்** மூன்று முறிப்பிலிருந்து பூஓயா வரை, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம், மதவு வைத்தகுளம் கிராமம், அவுசதப்பிட்டிய கிராமம், மகாறம்பைக்குளம் கிராமம் ஆகிய இடங்களிலும் **மன்னார் மாவட்டத்தில்** தரவன்கோட்டை, சாந்திபுரம், தள்ளாடி படை முகாம், மாந்தை உப்புத் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அனுசா செல்வராசா அறிவித்துள்ளார். (ஐ)

# விபத்தில் ஒருவர் காயம்

சாவகச்சேரி, ஜன. 27

வீதியோரம் நிறுத் தப்பட்டிருந்த உழவு இயந்திரம் திடீரென்று வீதிக்குள் நுழைந்தபோது வீதியில் மோட்டார் சைக்கிள் பயணித்ததால் இரண்டும் மோதி விபத்துக்குள்ளாகின. மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் காயமடைந்தார். இந்தச் சம்பவம் சாவகச்சேரி கச்சாய் வீதியில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. காயமடைந்த 21 வயதுடைய இளைஞன் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உழவு இயந்திரத்தை இயக்கியபோது திடீரென்று வீதிக்கு நகர்ந்துவிட்டது என்றும் அதனால் விபத்து ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (து-9)

# மெய்வன்மைப் போட்டிகள்

கிளிநொச்சி,ஜன.27

பளை இந்து ஆரம்ப வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை செவ்வாய்க் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைத் தவிசாளர் சு.சுரேன் கலந்து கொள்வார்.

****

கைதடி,ஜன.27

கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் தா.கணேசபாலேந்திரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ சரவணபவன், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணித பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.மதிதரன், கௌரவ விருந்தினர்களாக புருணைப் பொறியியலாளர் சு.சுதர்சன், தென்மராட்சிக் கல்வி வலய முகாமைத்துவ உதவியாளர் க.விக்கினேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

****

கிளிநொச்சி,ஜன.27

பளை மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலர் திருமதி. ப.ஜெயராணி, சிறப்பு விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.காந்தச்செல்வன், கௌரவ விருந்தினர்களாக திருநெல்வேலி யாழ் மருத்துவமனை உரிமையாளர் சி.குலேந்திரராஜா, பளை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஆர்.எம்.எஸ் கிரிசாந்த, பளை மத்திய கல்லூரி ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர் க.குணபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

****

கிளிநொச்சி,ஜன.27

கரியாலை நாகபடுவான் இல 02 அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் து.அருந்தவசீலன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் மு.சந்திரகுமார், சிறப்பு விருந்தினர்களாக முழங்காவில் மருத்துவமனை மருத்துவ அதிகாரி க.செல்வநாதன், முழங்காவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றுக்மல் ரத்நாயக்க, முன்னாள் அதிபர் கு.கனகலிங்கம், கௌரவ விருந்தினர்களாக பூநகரிப் பிரதேச சபை உறுப்பினர் ஞா. றதிகரன், சிறிலங்கா இன்சுரன்ஸ் சிரேஷ்ட நிதித் திட்டமிடல் ஆலோசகர் கோ.சுதர்சன், துர்க்கா மல்ரி சென்ரர் உரிமையாளர் பா.பாலகுமார் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

# முடியுமானால் அர்ஜுனவை நாட்டுக்கு கொண்டு வருக!

## சவால் விடுகின்றார் ஹிருணிகா



**கொழும்பு, ஜன.27**

**ஜனாதிபதி மற்றும் பிரதமரால் மத்திய வங்கி பிணைமுறி மோசடியின் பிரதான குற்றவாளியாக சந்தேகிக்கப்படும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை நாட்டுக்குக் கொண்டு வர முடியுமா?. மஹிந்த ராஜபக்ஷவும், ரணில் விக்ரமசிங்கவும் நெருங்கிய நண்பர்கள். இரு தரப்பு திருடர்களும் ஒருபோதும் தண்டிக்கப்படமாட்டார்கள்.**

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக் கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டு மக்களுக்குத் திருடர்கள் தொடர்பாகப் பிரச்சினை கிடையாது. திருடர்கள் எந்த பக்கம் இருக்கின்றார்களை என்பதைக் கொண்டு விமர்சனங்கள் எழுப்பப்படும். இன்று மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் எனது தனிப்பட்ட விடயங்களை மையப்படுத்தி பிரதான ஊடகங்களால் மறைக்கப்பட்டு வருகின்றன. இவை சாதாரண மக்களுக்கு இழைக்கும் பெரும் துரோகமாகும். பிரதான ஊடகங்கள் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுக்காமல் எனது தனிப்பட்ட விடயங்களுக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்து பல உண்மைகளை மக்கள் மத்தியில் இருந்து தொடர்ந்து மறைத்து வருகின்றன. இன்னும் சில ஊடகங்களின் செயற்பாடுகள் வெறுக்கத்தக்கனவாகவே காணப்படுகின்றன.

ஆட்சிக்கு வந்தவுடன் பிணைமுறி மோசடிக் குற்றவாளிகளை ஒரு மாத காலத்துக்குள் தண்டிக்கப்படுவார்கள் என்று தேர்தல் பரப்புரைகளை மேற்கொண்டவர்கள்தற்போது பிணைமுறி மோசடி தொடர்பான தடயவியல் அறிக்கையைக் கண்டு அஞ்சுகின்றார்கள்.

2001ஆம் ஆண்டில் இருந்து முறிகள் விநியோகத்தில் மோசடி இடம் பெற்றுள்ளது என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிணைமுறி கொடுக்கல் வாங்கல் மோசடியாளர்கள் இரு தரப்பிலும் உள்ளார்கள். இரு தரப்பினரும் தண்டிக்கப்பட வேண்டும். அதில் ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் மாத்திரம் விதிவிலக்கல்ல.

தற்போது திருடர்கள் இரு தரப்பிலும் அஞ்சுவது காணக்கூடியதாக உள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க ஆகிய இருவரும் தற்போதும் நெருங்கிய நண்பர்கள்.

அரசியல்வாதிகள் வெளியில் எதிரிகளாக செயற்படுவதாக காட்டிக் கொண்டு நெருங்கிய நண்பர்களாக சுகபோகமாகவும் வாழ்கின்றார்கள். சாதாரண மக்கள் மாத்திரம் அரசியல் காரணிகளைக் கொண்டு பிளவுப்பட்டுள்ளார்கள்.

பிணைமுறி மாத்திரமல்ல, எந்த மோசடியுடன் தொடர்புடையவர்களும் தண்டிக்கப்படமாட்டார்கள்-என்றார். (எ)

# விலங்கு விசர் நோய் தடுப்பூசி ஏற்றல்

யாழ்ப்பாணம், ஜன.27

யாழ்ப்பாணமாநகரசபை எல்லைக்குள் அமைந்து குருநகர் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது. இதன்படி வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி கீழ்வரும் இடங்களில் நாளை செவ்வாய்க்கிழமை ஏற்றப்படவுள்ளது. காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரை தண்ணீர்த் தாங்கி 4ஆம், 5ஆம்குறுக்குத் தெருவிலும், முற்பகல்11மணி தொடக்கம் பிற்பகல் 1.30 மணிவரைசென்.ஜேம்ஸ் ஆண்கள்பாடசாலைமுன்பாகவும், பிற்பகல் 2.30 மணிதொடக்கம்மாலை4 மணிவரை 4ஆம் 5ஆம் குறுக்குத்தெருக்களிலும் நடைபெறவுள்ளன. எனவே ஒவ்வொருவரும் தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியை ஏற்றிக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. உரிமக் கட்டணமாக 30 ரூபா அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# மதுபானசாலைக்கு எதிர்ப்பு இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்






கொட்டக்கலை,ஜன.27

மலையகத்தில் சட்ட விரோதமாக இயங்கும் மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து "சட்ட விரோதமான மது விற்பனையால் பறிபோகும் அப்பாவி உயிர்கள்" எனும் தொனிப்பொருளில் மலையக இளைஞர்களால் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்ப்பு வாசகங்கள் எழுதிய பாதாகைகளை ஏந்திய வண்ணம் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். கொட்டகலை ரயில்வே கடவை முன்பாக ஆரம்பிக்கப்பட்ட கவனவீர்ப்பு ஊர்வலம் கொட்டகலைப் பிரதேச சபை வரை சென்றது.

மலையகத்தில் சட்ட விரோதமாக இயங்கும் மதுபானசாலையால், தமது பொருளாதாரம் மற்றும் மாணவர்களின் எதிர்காலம் பாதிக்கப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

சட்ட விரோதமாக இயங்கும் மதுபானசாலைகளை ஒழிக்குமாறு கோரிக்கை அடங்கிய மனு பத்தனை பொலிஸ் நிலையம், கொட்டகலைப் பிரதேச சபை, மனித உரிமை ஆணைக்குழு ஆகிவற்றுக்குக் கையளிக்கப்பட்டன. (க)

# வீதி மின் விளக்குகள் பொருத்தக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

நவாலி தெற்கு கொத்துக்கட்டி வீதி தொடக்கம் அராலி பிரதான வீதியை தொடுக்கும் வரையிலான அபிவிருத்தி திணைக்களத்துக்குரியவீதி, இரவில்இருளில்மூழ்கியுள்ளது. இரவில் பயணிப்பது ஆபத்தாகவுள்ளது.

வீதிவளைவில்சீரமைக்கப்படாதுஆபத்தானவகையில் கேணி உள்ளது. கொத்துக்கட்டி மயானப் பகுதியை அண்மித்து இனந்தெரியாதோர் இரவில் கழிவுகளைக் கொட்டுகின்றனர். எனவே இந்தப் பகுதியில் வீதி மின் விளக்குகளைப் பொருத்த மானிப்பாய் பிரதேச சபை நடவடிக்கைஎடுக்கவேண்டும்என்றுஇந்தப்பகுதிமக்கள் கோருகின்றனர். (த-50)

## கரம்பைக்குறிச்சி அ.த.க.வின் இல்ல விளையாட்டு நிகழ்வு

கொடிகாமம்,ஜன.27

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் க.இளங்கோவன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி இராசநாயகம், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்வி அலுவலக கணித பாட ஆசிரிய ஆலோசகர் க.ஶ்ரீகணேசன், கௌரவ விருந்தினர்களாக பளை மத்திய கல்லூரி ஆசிரியர் நா.கேதீஸ்வரன், ஜே.342 கரம்பைக்குறிச்சி கிராம அலுவலர் மோ.பிரகாஸ், தென்மராட்சிக் கல்வி வலய செயற்பட்டு மகிழ்வோம் இணைப்பாளர் திருமதி இ. மயில்வாகனசிங்கம், சமாதான

நீதிவானும் ஆங்கில ஆசிரியருமான கே.நவரத்தினசாமி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நிஜன், கரம்பைக் குறிச்சி ஞான வைரவர் ஆலய பூசகர் வே.ரஞ்சன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கரம்பைக்குறிச்சி ஞான வைரவர் ஆலய முன்றிலில் இருந்து விருந்தினர்கள் மேலைத்தேய வாத்திய இசையுடன் மைதானத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

நீர் நிரப்புதல், பலூன் பாதுகாத்தல், சமநிலையில் புத்தகம் கொண்டு செல்லல், வேகமாகத் தடைகளைத் தாண்டல், அஞ்சல் போன்ற விளையாட்டு நிகழ்வுகளும் நடைபெற்றன.

தேசிய மட்டத்தில் வெண்கலம் வெள்ளி ஆகிய பதக்கங்களை பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

(ஐ-159)

# பல்கலைச் சுற்றாடலிலுள்ள பாடசாலைகளுக்கு ஆபத்து

## மூத்த விரிவுரையாளர் கவலை

கொடிகாமம்,ஜன. 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சுற்றியுள்ள பாடசாலைகள் மூடப்படவேண்டிய அபாய நிலையில் உள்ளன. பாடசாலை கட்டடங்களையும் வேறு இடத்துக்கு வழங்குவதற்கு சிந்திக்கிறார்கள் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக கல்வியியற்றுறை மூத்த விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலக்சுமி இராசநாயகம் தெரிவித்தார்.

கரம்பைக்குறிச்சி அ.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நேற்றுமுன்தினம் வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

நிகழ்வில்பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

பாடசாலையின் ஆணிவேர் பெற்றோர்கள். பெற்றோர்கள் இல்லாவிட்டால் இந்தப் பாடசாலை இல்லை. நல்ல மாணவர்கள் கிடைக்கா விட்டால் நல்ல பாடசாலை இல்லை. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தைச் சுற்றியிருக்கின்ற பாடசாலைகள் மூடப்படும் அபாயத்தில் இருக்கின்றன. பாடசாலைக் கட்டடங்களையும் வேறு இடத்துக்கு வழங்குவதற்கு சிந்திக்கிறார்கள் அந்தப் பாடசாலைகளில் பிள்ளைகள் இல்லை. ஐந்து அல்லது பத்து பிள்ளைகள் கற்கின்றனர் எனவே பாடசாலைகளை மூடிவிடுவது தொடர்பாகச் சிந்தி க்கிறார்கள்

அன்பான பெற்றோர்களே சரியான முறையில் உங்கள் பிள்ளைகளை வழிநடத்த வேண்டும் செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் பதக்கங்களை பெற்றுக் கொடுப்பது மட்டும் உங்களுடைய பிள்ளைகளின் செயற்பாடுகள் போதுமானது அல்ல, அதற்கு அப்பால் உங்களுடைய பிள்ளைகளை சரியான முறையில் தமிழ் சமூகத்திலே நலிந்து போயிருக்கின்ற கல்விச் செயற்பாடுகளை மேன்மேலும் மெருகூட்டி எதிர் காலத்தில் சிறந்த ஒரு நல்ல குடிமகனாக நல்ல பிரஜைகளாக வளர்ப்பது பெற்றோர்களின் கைகளில் தான் இருக்கிறது. பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியை விட மேலான ஒழுக்கம் தொடர்பான சகல செயல்பாடுகளிலும் பெற்றோர்கள் முன்னுதாரணமாக இருக்க வேண்டும். பெற்றோர்கள் இல்லையென்றால் பிள்ளைகளைத் தனியாக பாடசாலைகளில் ஆசிரியர்களால், கவனிக்க முடியாது. ஒரு பிள்ளையினுடைய முதலாவது ஆசிரியராக இருப்பவர்கள் பெற்றோர்கள். இரண்டாவது ஆசிரியராக இருப்பவர்கள் ஆசிரியர்கள். வீட்டிலே பெற்றோர்கள் கண்டிப்பது போலத்தான் ஆசிரியர்கள் பாடசாலையில் கண்டிக்கிறார்கள். பெற்றோர்கள் உங்கள் பிள்ளைகளின் மத்தியில் இருக்கின்ற பிரச்சினைகளை நீங்கள் இனங்காண வேண்டும் என்றார்.

(ஐ-159)

# சிங்களமொழி கற்கை மாணவர்களின் பொங்கல் விழா வட்டுக்கோட்டையில்

## தமிழர் கலாசாரத்துடன் சிறப்புற நடந்தது

யாழ்ப்பாணம், ஜன.27

தமிழர்களுடைய பண்பாட்டு விழுமியங்களில் ஒன்றான பொங்கல் விழா, சிங்களக் கற்கை நெறியைப் பயின்ற மாணவர்களால் வட்டுக்கோட்டையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின், சரவணபவன் அறக்கட்டளையும், சூரியா பவுண்டேசனும் இணைந்து நடத்திய சிங்களக் கற்கை நெறியை முழுமை செய்த மாணவர்கள் இந்தப் பொங்கல் விழாவுக்கான திட்டமி டல்களை முன்னெடு த்திருந்தனர்.



பொங்கல் விழா நேற்றுக் காலை வட்டுக்கோட்டையில் உள்ள உதய வாழ்வு அலுவலகத்தில் இடம்பெற்றது. வட்டுக்கோட்டை தபால் அலுவலர் நா.ஜீவநாதன் தலைமையில் இடம்பெற்ற இந்தப் பொங்கல் விழாவில் இணைப் பிரதம விருந்தி னர்களாக நாடாளுமன்ற உறுப்பினரும் உதயன் குழுமத் தலைவருமான ஈ.சரவணபவன், மற்றும் உதய வாழ்வு நிர்வாகி திருமதி யசோதை சரவணபவன் ஆகியோர் கலந்து கொண்டு பொங்கல் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர். சிறப்பு விருந்தினர்களாக வலி.மேற்குப் பிரதேசபையின் தவிசாளர் த.நடனேந்திரன், இரண்டாம் மொழிக் கற்கை நெறி ஆசிரியர் தே.பிரேம்ராஜ், வலி.தென்மேற்குப் பிரதேச் சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், காரைநகர் பிரதே சபையின் தவிசாளர் வி.கேதீஸ்வரன் ஆகியோரும் இவர்களுடன் வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர்கள், வலி.தென்மேற்குப் பிரதேசபை உறுப்பினர்கள் கௌரவ விருந் தி னர்களாக விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தமிழர்கள் பொங்கல் நிகழ்வைக் கொண்டாட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இந்து நாகரிகத் துறையின் மூத்த விரிவுரையாளர் நாச்சியார் உரையாற்றும் போது, பொங்கல் விழாவின் சிறப்பியல்புகள் தொடர்பான கருத்துக்களை வழங்கியிருந்தார். பண்பாடுகளைப் பேணும் மனிதர்களே சிறந்த மனிதர்கள் என்று தெரிவித்தார்.

இரண்டாம் மொழிக் கற்கை நெறி ஆசிரியர் தே.பிரேம்ராஜ் உரையாற்றியபோது, தமிழர்களிடம் பழங்காலக் கலாசாரமாகக் காணப்பட்ட பொட்டுக் கலாசாரம், கூடி வாழுதல் கலாசாரங்கள் தற்போது அறவே இல்லாது போகின்ற நிலை உருவாக்கியுள்ளது. அவற்றை நாம் பாதுகாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார்.

பொங்கல் விழாவில், தமிழர்களுடைய வாழ்வியலை பிரதிபலிக்கும் பாரம்பரிய விளையாட்டு நிகழ்வுகளும் சிறப்பாக இடம்பெற்றது. (ப)





# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க ஜே.வி.பி. ஒத்துழைப்பு

**கொழும்பு, ஜன.27**

**நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான முழுமையான ஆதரவை மக்கள் விடுதலை முன்னணி வழங்கும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.**

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமை தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான 20 ஆவது அரசமைப்பு திருத்த நடவடிக்கைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கு மக்கள் அதிகாரத்தை வழங்கியிருந்தனர்.

சிறிலங்கா சுதந்திர கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை நீக்குவதற்கு நாடாளுமன்றத்தில் வாக்களிக்காத சந்தர்ப்பத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் வாக்குகளால் மாத்திரம் அதனை ஒருபோதும் நிறைவேற்ற முடியாது.

இந்த விடயத்தில் மக்களுக்கு உடன்பாடு இல்லை. மக்கள் விடுதலை முன்னணியும் அதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எதிர்ப்பு வெளியிபாது. நிறைவேற்றுஅதிகாரமுறையை நீக்குவதற்குச் சில சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியால் தீர்மானங்கள்



மேற்கொள்ளப்பட்டால் அதற்கு எமது கட்சி ஆதரவு வழங்கும். - என்றார். (எ)

# சர்ச்சைக்கு மத்தியில் கூடுகின்றது ஐ.தே.க.

கொழும்பு, ஜன.27

தலைமைத்துவம் மற்றும் பிரதமர் வேட்பாளர் உள்ளிட்ட பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியில் இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு கூடவுள்ளது. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் கூடவுள்ள மத்திய செயற்குழுவில் பல்வேறு விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு வாக்கெடுப்பின்றி தீர்வை வழங்க வேண்டும் என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்றத்தின் பின் வரிசை உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை தொடர்பிலும் நாளைய மத்திய குழுவில் ஆராயப்படவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மீண்டும் பிரதித் தலைவராக நியமிப்பதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்திருக்கிறார்.

பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச, உப தலைவர் ரவி கருணாநாயக்க, தேசிய அமைப்பாளர் நவீன் திஸாநாயக்க, பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம் ஆகியோரை உள்ளடக்கிய ஆலோசனை சபையின் அனுமதியுடனேயே ரணில் விக்கிரமசிங்க செயற்குழு உறுப்பினர்களை நியமித்திருக்கிறார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதான பதவிகள் தொடர்பிலான தெரிவுகள் தற்போது நிறைவு செய்யப்பட்டுள்ளன. இந்த நிலையிலேயே கடந்த ஜனாதிபதித் தேர்தல் நிறைவடைந்ததன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மீண்டும் பிரதித் தலைவராக நியமிப்பதற்கும் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த தீர்மானத்தை எடுத்துள்ளார்.

அதேவேளை, முரண்பாடுகள் இன்றி தலைமைத்துவம் தொடர்பான பிரச்சினைக்கான தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி முன்னெடுத்து வருகின்றது என்று முன்னாள் சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். (எ)

# கூட்டம்

பளை,ஜன.27

பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இந்திராபுரம் கிராமத்துக்கான கிராம அபிவிருத்திச் சங்கப் புனரமைப்புக் கூட்டம் நாளை செவ்வாய்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்திராபுரத்தில் நடைபெறும்.

கடந்த 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்திராபுரம் கிராம அபிவிருத்திச் சங்கம் 2000 ஆம் ஆண்டு வரை செயற்பட்டு இடம்பெயர்வால் இயங்கவில்லை. கிராமத்தில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்டு பெருமளவு குடும்பங்கள் தற்போது மீள்குடியமர்ந்துள்ளதால் செயல்படாமல் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கம் உள்ளிட்ட சங்கங்களை மீளப் புனரமைக்க வேண்டியுள்ளது. மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து முதலில் கிராம அபிவிருத்திச் சங்க புனரமைப்புக் கூட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

# இறுவட்டு எதையும் ரஞ்சன் தரவில்லை

## தொடர்பாடல் திணைக்களம் தெரிவிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க இதுவரை குரல் பதிவுகள் அடங்கியஎந்தவொரு இறுவெட்டையும்நாடாளுமன்றில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சமர்ப்பித்திருக்கவில்லை என்று நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தன்னிடமிருக்கும் குரல் பதிவுகளை சபையில் சமர்ப்பிப்பதாகக் கூறிய பின்னர், ரஞ்சன் ராமநாயக்க இறுவெட்டுக்கள் சிலவற்றுடன் சென்று நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்கவிடம் அவற்றைக் கையளிக்க வேண்டும் எனக் கூறியுள்ளார்.

இதற்கமைய இறுவெட்டுக்களைக் கையளிக்கப்படவேண்டியதிணைக்களத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினரை, செயலாளர் நாயகம் ஆற்றுப்படுத்தியுள்ளார்.

ஆற்றுப்படுத்தப்பட்ட கடிதத்துடன் ரஞ்சன் சம்பந்தப்பட்ட திணைக்களத்தை நோக்கிச் சென்றுள்ளபோதும், இறுவெட்டைக் கையளிக்காது சென்றுவிட்டார். இறுவட்டை மீளவும் ஆராயவேண்டியிருப்பதால் அதனை கையளிக்காது மீண்டும் எடுத்துச் செல்வதாக ரஞ்சன் ராமநாயக்க அந்தத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கூறியுள்ளார்.

குரல் பதிவுகள் அடங்கிய இறுவெட்டை சபையில் ரஞ்சன் சமர்ப்பித்துள்ளார் என்ற செய்திகளில் உண்மையில்லை. ரஞ்சன் ராமநாயக்க இறுவெட்டுக்கள் எதையும் சபையில் சமர்ப்பிக்கவில்லை என்ற சபாநாயகர் கரு ஜயசூரியவும் நாடாளுமன்றில் கூறியுள்ளார். (து)







நாச்சிக்குடா அற்புதக் குழந்தை இயேசு ஆலய வருடாந்தத் திருவிழா நேற்று நடைபெற்றது. திருவிழாத்திருப்பலியை அருட்பணி யேசுபாலன் அமதி தலைமை தாங்கி ஒப்புக் கொடுத்தார். அவருடன் பங்குத்தந்தை அருட்பணி சுமன் அடிகளாரும்இணைந்திருந்தார். திருப்பலி நிறைவில் அற்புதக் குழந்தை இயேசுவின் திருச்சொருப பவனியும் ஆசீர்வாதம் நடைபெற்றன. (க-222)



# கற்றல் உபகரணம் கையளிப்பு

வவுனியா,ஜன.27

வவுனியா மாவட்ட செவிப்புலனற்றோர் சங்க உறுப்பினர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

வீ 3 பவுண்டேசன் அமைப்பின் ஊடாக இராசரட்ணம் இராகுலனால் மாவட்ட சமுகசேவை அலுவலகத்தில் வைத்து இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

வவுனியா மாவட்ட செவிப்புலனற்றோர் சங்கத் தலைவர் நிசாந்தன் மற்றும் அகில இலங்கை செவிப்புலனற்றோர் சங்கத் தலைவர் கணநாதன் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் இந்த உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-222)

# காணாமல் ஆக்கப்பட்டோருக்காக ஜனவரி 30 ஆம் திகதி கவனவீர்ப்பு

வவுனியா,ஜன.27

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர் எதிர்வரும் 30 ஆம் திகதி மாபெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளனர்.



இது தொடர்பாக வவுனியாவில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் சங்கத்தினர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்வரும் 30 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரி, வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு முன்பாக போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம்.

போராட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொது மக்கள், தனியார் நிறுவனங்கள், அரச,அரச சார்பற்ற நிறுவனங்கள், வர்த்தகர்கள், பஸ் உரிமையாளர்கள்,

முச்சக்கரவண்டி உரிமையாளர்கள், சமூக ஆர்வலர்கள் என அனைவரும் கட்சி பேதமின்றி அணிதிரண்டு ஆதரவையும், பங்களிப்பையும் நல்குமாறு கேட்டு நிற்கின்றோம்.

போரின் போது இடம்பெற்ற விடயங்களை நாம் கோரவில்லை. போர் முடிவடைந்த பின்னர் ஓமந்தையிலும், வட்டுவாகலிலும் இராணுவத்திடமே எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். வவுனியா,மன்னாரில் அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் எமது உறவுகள் காணாமல் போகச் செய்யப்பட்டுள்ளனர். இவர்களைப் புலிகள் பிடித்துச் சென்றதாகக் கூறுகின்றமை எப்படி சாத்தியமாகும். எனவே எமக்குப் பொறுப்புக் கூற வேண்டிய ஜனாதிபதி அப்பட்டமான பொய்யைச் சொல்கிறார்.

நாம் எந்த அரசியல்வாதிகளுக்குப் பின்னாலோ, கட்சிகளுக்குப் பின்னால் இருந்தோ செயற்படவில்லை. நாம் எமது நீதிக்கான போராட்டத்தைத் தன்னிச்சையான முறையிலேயே ஆரம்பித்துள்ளோம். நாங்கள் நிவாரணத்தை தேடியோ, இறப்புச் சான்றிதழைக் கேட்டோ போராட்டத்தை ஆரம்பிக்கவில்லை. இன்று எமது போராட்டங்கள் இடம்பெற்றுவரும் நிலையில் மூன்றாவது ஜனாதிபதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர்கள் அனைவரும் கால அவகாசம் கோருகின்றனரே தவிர, மக்களுக்கான தீர்வை வழங்க முன்வரவில்லை. எம்மை ஏமாற்றுவதே அவர்களது நோக்கமாக இருக்கிறது.

தமிழ் அரசியல் வாதிகள் எமது விடயத்தில் அக்கறையாகச் செயற்படவில்லை. நான்கரை வருடம் அரசுக்கு ஆதரவை வழங்கினார்களே தவிர எமக்கு எதுவும் செய்யவில்லை. எமக்காக எந்த கஸ்ரத்தையும் அவர்கள் அனுபவிக்கவில்லை. அவர்களால் எந்தவிதமான பலனும் இனிமேல் இல்லை. எமது உறவுகள் தொலைந்து விட்டார்கள் இறுதியில் உறவுகளைத் தேடி அலைந்தவர்களும் இறந்து போகப் போகின்றார்கள். - என்றனர். (க-110)

## யாழ்.சிவபூமி அருங்காட்சியகம் பாரம்பரியத்தைப் பறைசாற்றும்

*வடக்கு ஆளுநர் பெருமிதம்*

யாழ்ப்பாணம்,ஜன.27



யாழ்ப்பாணத்தின் பாரம்பரியங்களை அடையாளப்படுத்துவதற்குரிய இடம் கிடைத்துள் ளது.

இங்குள்ள பல ஆவணப் பொருள்கள் வரலாறுகளை நினைவுபடுத்தும் என்று வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்தார்.

சிவபூமி யாழ்ப்பாணம் அரும்பொருள் காட்சியகம் நாவற்குழியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப் பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது:

இப்படியொரு அருங்காட்சியகம் மட்டக்களப்பில் உள்ளது. அங்கு யாழ்ப்பாண மண்ணை அடையாளப்படுத்துகின்ற அருமையான பொருள்கள் உள்ளன. ஆனால் எங்களுடைய மாகாணத்தின் மண்ணினுடைய பெருமைகள் வேறு எங்கோ இருக்கின்ற அருங்காட்சியகத்திலே வைக்கப்பட்டிருப்பது வேதனையாக இருந்தது. தற்போது அரும்பொருள் காட்சியகம் இங்கு திறக்கப்பட்டுள்ளமை மனதை ஆற்றுப்படுத்தியுள்ளது. மன்னர்களுடைய சிலை பற்றி நாங்களும் வரலாற்று நூலில் படித்திருக்கிறோம். கண்ணால் பார்க்கும் சந்தர்ப்பம் இங்கு தான் கிடைத்துள்ளது. ஒரு தனிமனிதன் முயற்சியினாலும், நிதி சேகரிப்பினாலும், பொருள் சேகரிப்பினாலும் வரலாறுகள் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. - என்றார். (க-159,131)

## நல்லவற்றைச் செய்ய அரசுடன் ஒட்டுவோம்

*பிரபா கணேசன் கூறுகிறார்*

வவுனியா, ஜன. 27



எமது மக்களுக்கு எதிரான விடயங்களை இந்த அரசு மேற்கொண்டால் எதிர்ப்பதற்குப் பின்னிற்கமாட்டோம். நல்லவிடயங்களுக்கு அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்று முன்னாள் பிரதி அமைச்சர் பிரபா கணேசன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த அரசு பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் கொண்டு வருமேயானால் அதைச் சிறுபான்மை மக்களுக்கு எதிரான ஒரு விடயமாகத்தான் பார்க்கமுடியும்.

நாம் அரசுடன் இருப்பது, எமது மக்களுக்கான அபிவிருத்திகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்காகவே தவிர, எமது மக்களைச் சிறுமைப் படுத்துவதற்கல்ல.

பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டுவரப்பட்டால் அதற்கு ஆதரவு வழங்க மாட்டோம்.

எந்த அரசாக இருந்தாலும் சிங்கள பௌத்த பேரினவாதத்தை ஏற்படுத்துவார்களேயானால் நாட்டைச் சரியான பாதையில் முன்கொண்டு செல்ல முடியாது. எனவே அரசின் நல்ல விடயங்களுக்கு நாங்கள் ஆதரவு தெரிவித்து அதன் மூலமாக எமது மக்களுக்குத் தேவையான அபிவிருத்திகளையும், உரிமைகளையும் பெற்றுக்கொள்வோம். - என்றார். (110)



## இந்திய குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்.ஜன.27

இந்தியாவின் குடியரசு தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்திய துணைத்தூதரகத்தில் நேற்றுக் காலை 9 மணியளவில் நடைபெற்ற குடியரசு தின நிகழ்வில், இந்திய தேசியக் கொடியை, இந்திய துணைத்தூதுவர் சங்கர் பாலசந்திரன் ஏற்றிவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, இந்திய தேசிய கீதம் இசைக்கப்பட்டதுடன், இந்தியக் குடியரசுத் தலைவரின் குடியரசு தின உரையை, இந்தியத் துணைத் தூதுவர் வாசித்தார்.

இதனைத் தொடர்ந்து, விருந்துபசார நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில், இந்தியத் குடிமக்கள் மற்றும், இந்தியத்துணைத்தூதரகஅதிகாரிகள்ளனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ-106)



## செயற்பட்டு மகிழ்வோம்

கிளிநொச்சி,ஜன.27

உமையாள்புரம் அ.த.க பாடசாலையின் வருடாந்த செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி சத்யா மகிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கிளிநொச்சி கல்வி வலய ஆரம்பக் கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பொ. விஜநாதன், கௌரவ விருந்தினர்களாக ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர் ச.விவேகானந்தன், ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் திருமதி தவமணி விவேகானந்தன், ஓய்வு பெற்ற முகாமைத்துவ உதவியாளர் திருமதி லங்காதேவி மனோகரன், முன்னாள் செயற்றிட்ட முகாமையாளர் செ.மாட்டீன் ஆகியோர் கலந்து கொள்வர். (க-159)

# பொதுத் தேர்தலில் ஐ.தே.கவுக்கு சமாதி


## அபாய சங்கு ஊதுகிறது விமலின் கட்சி!



**கொழும்பு, ஜன.27**
**வடக்கிலுள்ள தமிழ்ப் பிரிவினைவாத வாக்குகளும், கிழக்கிலுள்ள முஸ்லிம் அடிப்படைவாத வாக்குகளும் கிடைத்திருக்காவிட்டால் சஜித் பிரேமதாச 29 இலட்சம் வாக்குகளால் மண் கவ்வியிருப்பார். சஜித்தை ஏற்பதற்கு இலங்கையிலுள்ள பெரும்பான்மை மக்கள் தயாரில்லை.**

இவ்வாறு தேசிய சுதந்திர முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த சமரவீர தெரிவித்தார்.
கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ள தாவது:
ஐக்கிய தேசியக்கட்சியைப்போல், தாய்நாட்டுக்குத் தீங்கு விளைவித்த வேறெந்த கட்சியும் இலங்கையில் கிடையாது. அதற்கான கர்மவினை அந்தக் கட்சிக்கு இன்று தண்டனை வழங்கியுள்ளது.
ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை இந்த நாட்டுமக்கள் அடியாடுநிராகரித்துள்ளனர். இனி அவருக்கு அரசியல் பயணம் இல்லை. தலைமைப் பதவிக்கும் வரமுடியாது. செல்லாக் காசாகிவிட்டார் என்றே கூற வேண்டும்.
ரணில் விக்கிரமசிங்கவின் ஆசியுடன் தலைமைப் பதவிக்கு வந்துவிடலாம் என்ற கோஷத்துடன் சஜித் வந்தார். என்ன நடந்தது? வடக்கு, கிழக்கு மக்களின் வாக்குகள் கிடைத்திருக்காவிட்டால் படு மோசமான தோல்வி ஏற்பட்டிருக்கும் என வஜீர அபேவர்தன கூறுகிறார்.
ஆக வடக்கு மாகாணத்தில் தமிழ் பிரிவினைவாத வாக்குகளும், கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் அடிப்படைவாத வாக்குகளும் கிடைத்திருக்காவிட்டால் 29 இலட்சம் வாக்குகளால் சஜித் மண் கவ்வியிருப்பார்.
தாய்நாட்டுக்குத்துரோகமிழைக்கும், கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களை சீரழிக்கும் அரசு இருந்தால் மட்டுமே இந்த நாட்டுக்கு எதிர்க்கட்சி தேவைப்படும். ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் தலைமையிலான இந்த அரசு தாய்நாடு மீது அதிக பற்று வைத்துள்ளது இந்த நாட்டுக்கு எதிர்க்கட்சிக்கான தேவை இல்லை- என்றார். (ஏ-44)





## லண்டனில் நடைபெற்ற கலை மாலை நிகழ்வு

முல்லைத்தீவு,ஜன.27
முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பழைய மாணவர் சங்கத்தின் ஐக்கிய ராஜ்ய கிளையின் 15 ஆவது ஆண்டு நிறைவை கொண்டாடும் முகமாக கலை மாலை நிகழ்வு நடைபெற்றது.
இந்த நிகழ்வு லண்டன் தலைநகரில் நேற்றுமுன்தினம் முற்பகல் 10 மணியளவில் நடைபெற்றது
நிகழ்வில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்
இதன்போது தமிழர் கலை கலாசாரத்தை பறைசாற்றும் பல கலை நிகழ்வுகளும், பண்டார வன்னியன் நாடகமும் நடைபெற்றன.
இந்தக் கலை மாலை நிகழ்வு புதுக்குடியிருப்பு பழைய மாணவர் சங்கத்தின் லண்டன் ஐக்கிய ராஜ்ய கிளையால் ஏற்பாடு செய்யப்பட்டது. (ஐ-213)





## யாழ்.விஷன் கிருஸ்ணாவின் 9ஆவது ஆண்டுவிழா நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன.27
யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் உள்ள யாழ் விஷன் கிருஸ்ணா அறநெறிப் பாடசாலையின் 9ஆவது ஆண்டு விழா நேற்றுக் காலை சிறப்பாக இடம்பெற்றது.
அறநெறிப் பாடசாலை வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தில் பூசை வழிபாடுகளை மேற்கொண்டு நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டன. சின்மையா மிசன் யாக்ரத் சைத்தன்ய சுவாமிகள், நல்லை ஆதீனக் குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆகியோர் கலந்து கொண்டு ஆசியுரைகளை வழங்கியிருந்தனர்.
யாழ் விஷன் பொறுப்பாளர் கந்தையா சுசீந்திரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் கலந்துகொண்டார். அவருடன் திருமதி யசோதை சரவணபவனும் கலந்துகொண்டு நிகழ்வை சிறப்பித்தார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் இ.சர்வேஸ்வரா, செந்தமிழ் சொல் அருவி ச.லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர்நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் ரி.தியாகமூர்த்தி கௌரவ விருந்தினராக கலந்துகொண்டார்.
முன்பள்ளி மாணவர்களின் கலை நிகழ்வுகள் விழாவில் சிறப்பிடம் பெற்றிருந்தன.
தேவார பாமாலைத் தொகுப்பு எனும் நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.
மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. அறநெறிப்பாடசாலை மாணவர்கள், அவர்களின் பெற்றோர்கள், ஆசிரியர்கள் எனப் பலர் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ப)

## கஞ்சாவுடன் 4 பேர் கைது

வவுனியா,ஜன.27
கேரளா கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். வவுனியா புதிய பேருந்து நிலையத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இரவு 8 மணியளவில் இவர்கள் சிறப்பு அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
வவுனியாபுதிய பேருந்து நிலையத்தில் கேரளா கஞ்சா பரிமாற்றம் இடம்பெறுவதாக சிறப்பு அதிரடிப்படையினருக்கு இரகசியத் தகவல் கிடைத்தது. இதனையடுத்து பேருந்து நிலையத்தில் சந்தேகத்திற்கிடமான முறையில் நின்ற நான்கு இளைஞர்களை சோதனைக்குட்படுத்தினர்.
இதன் போது கேரளா கஞ்சாவை வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் வவுனியா கோவிற்குளம் மற்றும் ஈரட்டைபெரியகுளம் பகுதிகளைச் சேர்ந்த நான்கு பேரை கைது செய்து வவுனியா பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். இவர்களிமிருந்து 100 கிராம் கேரளா கஞ்சாவைக் கைப்பற்றியதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ-18,110)

## இயங்காத சிற்றுண்டிச்சாலை: விடுதி நோயாளர்கள் சிரமம்!

சாவகச்சேரி,ஜன. 27
சாவகச்சேரி மருத்துவமனையில் உள்ள சிற்றுண்டிச்சாலை ஞாயிற்றுக்கிழமைகளில் பகலில் மூடப்பட்டு இருப்பதால் நோயாளர்கள் காலை மதிய உணவு மற்றும் தேநீர் வகைகளைப் பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.
சிற்றுண்டிச்சாலை மூடப்பட்டு இருப்பதால் விடுதிகளில் தங்கியுள்ள நோயாளர்கள் வெளியே சென்று உணவு வகைகள், சுடுதண்ணீர் ஆகியவற்றைப் பெற அடுத்தவரின் உதவியை நாடவேண்டிய நிலை காணப்படுகிறது.
இது தொடர்பாக. சிற்றுண்டிச்சாலை நடத்துபவரிடம் கேட்டபோது மருத்துவமனையில் உள்ள நோயாளர்கள், மருத்துவர்கள், தாதிகள் மற்றும் அலுவலர்கள் பணியாளர்கள் சிற்றுண்டிச்சாலையில் உணவு மற்றும் தேநீரை அருந்துகின்றனர். ஞாயிற்றுக்கிழமைகளில், மத நிகழ்வுக்காகச் செல்வதால், சிற்றுண்டிச் சாலையை மூடுவதாக தெரிவித்தார்.
இது தொடர்பாக மருத்துவமனை நிர்வாகத்திடம் கேட்ட போது:
"சிற்றுண்டிச்சாலை இதுவரை காலமும் எம்மால் குத்தகைக்கு வழங்கப்பட்டு வந்தது. கடந்த வருடம் யாழ்ப்பாண சுகாதாரத் திணைக்களத்தால் குத்தகைக்கு வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமைகளில் சிற்றுண்டிச்சாலை மூடப்படுவதாக நோயாளர்கள் பணியாளர்கள் முறைப்பாடுகள் கிடைப்பதால் ஞாயிற்றுக்கிழமைகளில் சிற்றுண்டிச்சாலையைத் திறக்க மாற்று ஒழுங்கு மேற்கொள்ளுமாறு குத்தகையாளரைக் கேட்டுள்ளோம் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# குடிதண்ணீர் திட்டத்துக்குரிய முன்மொழிவை தர கோரிக்கை

## மலேசியக் குழுவிடம் ஆளுநர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 27

வளிமண்டல நீர்ப்பதனைப் பயன்படுத்தி சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொள்ளும் நவீன வசதியை வடக்கிலுள்ள மக்களுக்காக அறிமுகப்படுத்தும் திட்டம் தொடர்பில் மலேசியாவிலிருந்து வந்திருந்த குழுவினர் வடக்கு ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளனர்.

வடக்கிலுள்ள கைத்தொழில் பேட்டையில் அதற்கான வசதிகளைப் பெற்றுத் தர வாய்ப்புள்ளதாகவும் அதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கும்படியும் ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ் மலேசியக் குழுவினருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

மலேசியாவிலிருந்து வந்திருந்த குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸை நேற்றுமுன்தினம் சந்தித்து அபிவிருத்தி விடயங்கள் தொடர்பில் உரையாடினர்.

முதலீட்டு வாரியம் தொடர்பான சாதக பாதக தன்மைகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எந்தெந்தத் துறை சார்ந்த செயற்றிட்டங்களுக்கான முதலீடுகளுக்கு வாய்ப்புக்கள் வடக்கில் உள்ளன. பல்வேறுபட்ட வர்த்தக மற்றும் சேவைநோக்க செயற்பாடுகளில் தாம் ஆர்வமாக இருக்கின்றோம் என்றும் தெரிவித்த குழுவினர், வடக்கின் விமான நிலையத்தினுடனான பல்வேறுபட்ட வசதிகளை மேம்படுத்த யோசனைகளை முன்மொழிந்தனர்.

நிபுணத்துவம் வாய்ந்த ஆங்கில ஆசிரியர்களை வரவழைத்து சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் துறையில் குறுகியகால நவீன பயிற்சிகளால் அறிவூட்டி சர்வதேச தரத்தில் திறமையைப் பெற வேலைவாய்ப்புகளைப்பெற வழிகாட்டத் தயாராக உள்ளோம் என்றும் மலேசியக் குழுவினர் வடக்கு ஆளுநரிடம் தெரிவித்தனர் என்று ஆளுநரின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (து)

# சும்மா திரிகிறார்கள் அதனால்தான் வேலை

## பெரமுனவின் செனவிரட்ன தெரிவிக்கிறார்




வவுனியா, ஜன. 27

பாடசாலைகளில் தரம்11க்குக் கீழ் படித்தவர்கள் சும்மா திரிகிறார்கள். அதனால்தான் அவர்களுக்கு ஜனாதிபதி வேலைவாய்ப்பு வழங்கவுள்ளார்.

தேர்தல் முடிந்த பின்னர் வீட்டுத்திட்டம் மற்றும் வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும் என்று பொதுஜன பெரமுன கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான தர்மபால செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வீட்டுத் திட்டம் தொடர்பில் நாடாளுமன்றில் பேசியுள்ளார். அவர்கள் வீட்டுத்திட்டம் தொடர்பில் சம்மதம் தெரிவிக்கவில்லை. அதேபோல் வேலைவாய்ப்புக்கும் தற்போதைய அமைச்சரவை அங்கீகாரம் இல்லை. அங்கீகாரம் கிடைத்தால் வீட்டுத் திட்டம், வேலைவாய்ப்பு இரண்டையும் தேர்தலுக்கு முன்னர் நிறைவேற்றுவோம். கிடைக்காவிட்டால் இன்னும் ஒன்றரை மாதத்தில் தேர்தல் வரும். அது முடிந்தகையுடன் அவை முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும். ஜனாதிபதி கவனமாகத் தான் அரசை நடத்துகிறார். - என்றார். (து-18)

# செபஸ்தியார் ஆலயத்தில் சீரமைப்பு பணிகள்

தலைமன்னார், ஜன. 27

மன்னார் மறைமாவட்டத்தின் பேராலயமான புனித செபஸ்தியார் ஆலயத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளதால் ஆலயத்துக்குள் பக்தர்கள் செல்லவோ வழிபாடு நடத்தவோ தடைசெய்யப்பட்டு அது தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பேராலய பங்குத் தந்தை அருட்பணி ஏ.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்தார்.

பழமைவாய்ந்த மன்னார் மறைமாவட்டத்தின் பேராலயமான புனித செபஸ்தியார் ஆலயத்தின் திருப்பலி பீடம் அமைந்திருக்கும் பகுதியான 'டோம்' என அழைக்கப்படும் குவிந்த கூரை பகுதியில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு மேல் அமைந்துள்ள சிலுவை பாகம் இடிந்து விழ ஆரம்பித்துள்ளது. ஆலயத்துடன் இணைந்துள்ள உயர்ந்த மணிக்கோபுரத்தின் ஒரு பகுதியிலும் வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இது பக்தர்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தக் கூடாது என்ற நோக்கில் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது..

அனைத்து வழிபாடுகளும் ஆலயத்துக்கு அருகிலுள்ள வழிபாட்டு மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றன என்று மேலும் தெரிவித்தார். (து-60)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

அல்வாய்,ஜன.27

யாழ்ப்பாணம் அல்வாய் இ.த.க.பாடசாலை ஆரம்பக் கல்வி மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ந.இராசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் ஈ. தயாரூபன், சிறப்பு விருந்தினராக அல்வாய் கிழக்கு கிராம அலுவலகர் சி.பிரதீபன், கௌரவ விருந்தினராக அல்வாய் கிழக்கு பொருளாதார உத்தியோகத்தர் திருமதி பிறேம்குமார் கமலி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# மருத்துவ முகாம்

மருதங்கேணி,ஜன.27

இலவச மருத்துவப் பரிசோதனை முகாம் மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

யாழ்ப்பாணப் பாதுகாப்புப் படைகளின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெரல் ருவண் வணிகசூரியவின் எண்ணக்கருவிற்கு அமைவாக 55 ஆவது படைத் தலைமையகத்தின் ஒழுங்கமைப்பின் மூலமாக ஓய்வுபெற்ற சிறப்பு மருத்துவர் அனுலா விஜேவர்த்தன மற்றும் அவர் தலைமையிலான மருத்துவக் குழுவினர் மூலம் இந்த மருத்துவ முகாம் நடைபெற்றது. (ஐ)




## 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பாராட்டு விழா விண்ணப்பம் 2018/ 2019

இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனம் தேசியரீதியில் நடத்தி வந்த மேற்படி பாராட்டு விழாவினை இம்முறை மாகாணரீதியாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே வடமாகாணத்தில் 2018 ஆம் ஆண்டு 2019 ஆம் ஆண்டு சித்தியடைந்த எமது வாடிக்கையாளர்களின் பிள்ளைகளின் விவரங்களைக் கோரியுள்ளது. கீழே குறிப்பிட்ட விவரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து எதிர்வரும் 15.02.2020 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம். அல்லது அருகில் உள்ள எமது கிளையுடன் தொடர்பு கொள்ளவும்.

**விவரங்கள் :**


- மாணவர் முழுப்பெயர் (ஆங்கிலத்தில்)
- பரீட்சைப் பெறுபேற்றின் பிரதி (Copy of the Result Sheet)
- பாடசாலையின் பெயர்
- பெற்றோர் / பிள்ளையின் காப்புறுதி இலக்கம்
- தொலைபேசி இலக்கம்
- விலாசம்

15.02.2020 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கின்ற விண்ணப்பப்படிவங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

மேலதிக விவரங்களுக்கு :

021 222 2023/ 021 221 4303
077 386 3753 / 077 342 3913

விண்ணப்ப முகவரி : பிராந்திய முகாமையாளர்,
சிறிலங்கா இன்சூரன்ஸ்,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



## வவுனியா பொலிஸூக்கு புதிய பொறுப்பதிகாரி

வவுனியா.ஜன.27

வவுனியா பொலிஸ் நிலையத்தின் புதிய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரியாக பி.ஆர். மானவடு நியமிக்கப்பட்டு தனது கடமைகளை நேற்றுமுன்தினம் பொறுப்பேற்றார்.

கேகாலை மாவட்டம் ரம்புக்கணப் பகுதியைச் சேர்ந்த இவர் வவுனியாவின் 23 ஆவது தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய பிரசன்ன வெலிகள கடந்த மாதம் கொழும்பு பொலிஸ் தலைமையகத்துக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்தார். (ஐ-110, 18)

# கோத்தா - மஹிந்த இடையே பிளவை ஏற்படுத்த முடியா!

நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஜன.27

**ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவையும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வையும் பிரிக்கும் முயற்சியில் ஐக்கிய தேசியக் கட்சி தீவிரமாக இறங்கியுள்ளது. இந்த செயற்பாட்டில் அவர்களால் வெற்றியடைய முடியாது இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

அநுராதபுரத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

நாடாளுமன்றமொன்றில் பெரும்பான்மையான உறுப்பினர்களைப் பெற்றுக்கொள்ள பேரம் பேசுதலை நாம் மேற்கொண்டால், நிச்சயமாக பலமான தொரு அரசை எம்மால் உருவாக்க முடியாமல் போய்விடும்.

இறுதியில் வில்பத்துவை சுத்தம் செய்தவர்கள் செய்த அரசைப் போன்தான் அது காணப்படும். இதுதான் உண்மையாகும். பிரதமர் மஹிந்தராஜபக்ஷவுடன் இணைந்து பலமானதொரு அரசை நாம் உருவாக்க வேண்டும். அதற்கான அதிகாரம் மக்களிடம்தான் உள்ளது. அதை மேற்கொள்ள நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும். 19ஆவது திருத்தச்சட்டத்தின் ஊடாக பலமான தொரு நாடாளுமன்றம் இருந்தால் மட்டுமே, நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இல்லையென்றால் பின்நோக்கித்தான் நாம் நகரவேண்டியேற்படும்.

தற்போது ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ நல்லவர் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மோசமானவர் என்றும் கூறுகிறார்கள். ஜனாதிபதி தேர்தல் காலத்தின்போது மஹிந்த நல்லவர் கோத்தாபய மோசமானவர் என்று கூறினார்கள். அமெரிக்க கடவுச்சீட்டை வைத்திருந்தமைக்காக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷவைத் தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாக விமர்சித்தார்.

இன்று இது தொடர்பாக எல்லாம் எவரும் கருத்துத் தெரிவிப்பதில்லை. எதிர்வரும் பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என ஐக்கிய தேசியக் கட்சிக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் இவ்வாறான கதைகளைக் கூறிக்கொண்டிருக்கிறார்கள். ஜனாதிபதியாக கோத்தாபய ராஜபக்ஷ இருப்பாராயின், அந்த அரசின் பிரதமராக மஹிந்த ராஜபக்சவே இருக்க வேண்டும் எனமக்கள் தீர்மானித்துவிட்டார்கள். அதை ஐக்கிய தேசியக் கட்சியினர் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

சஜித் பிரேமதாஸவின் அப்பாவும் அந்தக் காலத்தில் இந்த செயற்பாட்டை மேற்கொண்டு தோல்வியடைந்தார். சஜித் பிரேமதாஸவாலும் ஒருபோதும் இவர்களுக்குள் பிளவை ஏற்படுத்த முடியாது -என்றார். (எ)

## கற்றல் உபகரணம் கையளிப்பு

முல்லைத்தீவு.ஜன.27

முல்லைத்தீவு வள்ளுவர்புரத்தைச் சேர்ந்த 80 மாணவர்களுக்கு சைன் பாம் நிறுவனத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வள்ளுவர்புரம் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து கடந்த வெள்ளிக்கிழமை இந்த உபகரணங்கள் மாணவர்களிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா காப்புறுதி நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட முகாமையாளர் சி. சிவகுமார் மற்றும் சிறப்பு விருந்தினராக சைன்பாம் நிறுவனத்தின் உரிமையாளர் தெ. இந்திரதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். வள்ளுவர்புரம், மாணிக்கபுரம், தேராவில் பகுதிகளைச்சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கே இவ்வாறான உதவிகள் வழங்கப்பட்டன. (ஐ-19)



## பிரதேச சபையின் உப அலுவலகம் முருங்கனில் திறப்பு

மன்னார்.ஜன.27

நானாட்டான் பிரதேச சபையின் உப அலுவலகம் முருங்கனில் இன்று திறந்து வைக்கப்படும்.

மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதி 2019 கீழ் நிர்மாணிக்கப்பட்ட நானாட்டான் பிரதேச சபையின் முருங்கன் உப அலுவலகம் இன்று முற்பகல் 11.30 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

நானாட்டான் பிரதேச சபையின் தவிசாளர் தி.பரஞ்சோதி தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ்.எம்.சாள்ஸ், சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் ஆகியோர் கலந்து கொள்வர்.

நிகழ்வில் கலந்து கொள்வதற்காக வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று நானாட்டான் பிரதேச சபைத் தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவித்தார். (க-213)



## வவு.செபஸ்ரியார் ஆலயத் திருவிழா

வவுனியா.ஜன.27

வவுனியா தெற்கிலுப்பைக்குளம் புனித செபஸ்ரியார் ஆலயத் திருவிழா திருப்பலி நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை 7 மணியளவில் ஆரம்பமாகியது.

திருப்பலியை அருட்பணி போல்நட்சத்திரம் அடிகளார் தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்ததுடன், அருட்தந்தையோடு பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளார், உதவிப் பங்குத்தந்தை அருட்பணி பசில்கிளைன் அடிகளார், அருட்சகோதரர் அருண்தாஸ் ஆகியோரும் இணைந்து திருப்பலியைச் சிறப்பித்தனர்.

திருவிழாவின் மறையுரையாக "சாட்சிய வாழ்வினால் நாமும் மறைசாட்சியராவோம்" என்னும் கருப்பொருளில் இறைமக்களுக்கு கருத்துரைகள் வழங்கப்பட்டன.

திருப்பலி நிறைவில் புனிதரின் திருச் சொரூபம் பவனியாக கிராமத்தை சுற்றிக் கொண்டுவரப்பட்டு, பின்பு ஆலய முன்றலில் பங்குத்தந்தை அருட்பணி ஜெயபாலன் அடிகளாரால் இறுதி ஜெபம் இடம்பெற்று புனிதரின் திருச்சொரூப ஆசியும் வழங்கப்பட்டது. (ஐ-222)

# நெல் கொள்வனவு செய்ய நிதி தேவை

மன். மாவட்ட செயலகம் கோரிக்கை

மன்னார். ஜன.27

பெரும்போக நெல்கொள்வனவுக்கான நிதியை விடுவிக்குமாறு மன்னார் மாட்டச்செயலகம் திறைசேரியிடம்கோரிக்கைவிடுத்துள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கால போல நெற்செய்கை இடம்பெற்று, தற்போது அதனுடைய அறுவடைகள் இடம்பெறுகின்றன. எதிர்பார்த்தளவுவிளைச்சல்கிடைத்துள்ளதாகவிவசாயிகள்பலரும்தெரிவித்திருந்தனர். அந்தநெல்லை, தனியார் நிறுவனங்கள்மற்றும்நெல்சந்தைப்படுத்தும்அதிகாரசபையினர்விவசாயிகளிடம் நேரடியாகக் கொள்வனவு செய்யமுடியும். பெரும்பாலான இடங்களில் தனியார் நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள்விவசாயிகளிடம்நெல் கொள்வனவு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்திலும், நெல் சந்தைப் படுத்தும் அதிகார சபையூடாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு மாவட்டச்செயலகம்முன்வந்து கொழும்புதிறைசேரியிடம் நிதி கோரியது. கொழும்பில்கலந்துரையாடலின் பின் மன்னார் மாவட்டத்தில் நெல் சந்தைப்படுத்தும் சபை மூலம் விவசாயிகளிடமிருந்து நெல்லை கொள்வனவுசெய்வதற்கு நூறு மில்லியன் ரூபா தேவை என்று திறைசேரிக்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-213)

# நேர்மையான தேர்தல் பற்றிய விழிப்புணர்வு

மன்னார், ஜன. 27

'நேர்மையான பொதுத் தேர்தல் 2020' எனும் கருப்பொருளில் மன்னாரில் நேற்றுமுன்தினம் காலை விழிர்ப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் 'பப்வ்ரல்' அமைப்பின் வழிநடத்தலுடன் இது நடைபெற்றது.

மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதயத்தின் இயக்குநர் அருட்தந்தை எஸ்.அன்ரன் அடிகளார், மன்னார் மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன், பவ்ரல் அமைப்பின் சுதந்திரமான நியாயமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டப் பணிப்பாளர் ச.சிறீதரன், சமூகச் செயற்பாட்டாளர் மெடோசன் ஆகியோர் இதில் கலந்துகொண்டனர்.

நாட்டில் நடைபெற்ற தேர்தல்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. 2020 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் நேர்மையான பொதுத் தேர்தலாக அமைய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டது. தேர்தலில் போட்டியிடவுள்ள ஒரு வேட்பாளர் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பாகவும், மக்கள் தெரிவு செய்ய வேண்டிய மக்கள் பிரதிநிதியிடம் இருக்க வேண்டிய தகுதிகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (த- 56)

# மத நல்லிணக்க கலந்துரையாடல்

வவுனியா, ஜன. 27

வவுனியாவில் மதங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று வவுனியா மாவட்ட சர்வமதக் குழுவின் ஏற்பாட்டில் வவுனியா சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள பலநோக்கு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இஸ்லாமிய மதமும் முஸ்லிம்களின் வழிபாடுகளும் எனும் தலைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நல்லிணக்கம் தொடர்பான மாவட்ட சர்வமதக்குழு, சிவில் பாதுகாப்புக்குழு, சமூகப்பிரதிநிதிகள், மத குருமார்கள், பிரதேசசபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். மக்களுக்கிடையே இன வன்முறைகளை ஏற்படுத்தாத வகையில் தொடர்ந்தும் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் தொடர்பாக இதன்போது கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

ஏனைய சமயங்கள் தொடர்பாகவும் எதிர்வரும் கூட்டங்களில் கலந்துரையாடப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (த-110)







# இலங்கை மூலப்பொருள்களில் பொருத்து வீடு!

-யாழ்ப்பாணம், ஜன. 27

வடக்கில் அமைக்கத் திட்டமிடப்படும் பொருத்து வீட்டின் மாதிரியில் சிறு திருத்தம் செய்வதோடு, அதன் மூலப் பொருள்களை இலங்கையிலேயே தயாரித்தால் இத்தகைய பொருத்து வீடுகளை யாழ்ப்பாண மாவட்டத்திலும் அமைக்கலாம் என்று பிரதேச செயலாளர்கள் மாவட்டச் செயலகங்களுக்கு அறிக்கையிட்டுள்ளனர்.

வடக்கு கிழக்கில் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள 19 ஆயிரம் பொருத்து வீடுகளின் மாதிரி ஏற்கனவே பதுளையில் அமைக்கப்பட்டுள்ளது.

அவற்றை ஆய்வுசெய்யும் நோக்கில் வடக்கின் 5 மாவட்டங்களின் பிரதேச செயலாளர்களும் இரு நாள் பயணமாக அங்கு சென்றிருந்தனர். அவர்களில் சிலர் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்தனர்.

பொருத்து வீட்டுக்கான மூலப் பொருள்கள் சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு சீன நிறுவனம் ஒன்றின் ஊடாகவே அமைக்கப்படுகின்றன. இதனால் ஒரு வீட்டின் பெறுமதி 12 லட்சம் ரூபா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆட்சியில் பொருத்து வீடுகளை அமைக்க அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் முயற்சித்தார்.

எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கடும் எதிர்ப்பை வெளியிட்டது. அதனால் மேற்கொண்டு பொருத்து வீடுகள் அமைப்பது கைவிடப்பட்டது. தவிர, வடக்கின் காலநிலைக்கு இத்தகைய பொருத்து வீடுகள் பொருத்தமற்றவை என்றும் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-105)

# பொங்கல் விழா

யாழ்ப்பாணம்,ஜன.27

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகமும், ஊர்காவற்றுறை பிரதேச செயலகமும், தம்பாட்டி காந்திஜி நாடக மன்றமும் இணைந்து நடத்தும் பொங்கல் விழா தம்பாட்டி பொது மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

காந்திஜி நாடக மன்ற தலைவர் க. ஜெயக்குமார் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் திருமதி மஞ்சுலாதேவி சதீஷனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண மாவட்ட கலாசார உத்தியோகத்தர் இ. கிருஸ்ணகுமாரும், கௌரவ விருந்தினராக நா.சோமசுந்தரமும் கலந்து கொள்வர். பொங்கல் விழாவுடன் கலை நிகழ்வுகளும் நடைபெறுவதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (க)

# கல்லூரி மாணவர்கள் துப்புரவுப் பணியில்

யாழ்ப்பாணம், ஜன. 27

யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியின் மூன்றாம் வருட உள்ளகப்பயிற்சி மாணவர்களும் வலி. கிழக்குப் பிரதேச சபையினரும் இணைந்து இருபாலை இராசவீதியில் நேற்று முன்தினம் துப்புரவுப் பணியில் ஈடுபட்டனர்.

கல்வியியற் கல்லூரி வாசலிலிருந்து கோப்பாய் கிருஷ்ணன் கோவில் வரையான வீதியின் இரு மருங்கிலும் உள்ள பற்றைகள், புதர்கள் வெட்டி அகற்றப்பட்டு வருகின்றன.

இதில் அவர்கள் ஈடுபட்டனர். குப்பைகளை வலி. கிழக்குப் பிரதேச சபையினர் உழவு இயந்திரங்கள் மூலமாக உடனுக்குடன் அகற்றினர் என்று கல்லூரியின் உபபீடாதிபதி திருமதி சிவபாதம் தெரிவித்தார். (த-20)



# நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துங்கள்


யாழ்ப்பாணம், ஜன. 27

காரைநகர் ஈழத்துச் சிதம்பர கோவிலுக்கு முன்பாக 'யோகர் வளாகம்' என்னும் பெயரில் அமைக்கப்பட்டுவரும் சிலைகள் அமைத்தல் தொடர்பான நடவடிக்கைகள் அனைத்தையும் உடன் நிறுத்துமாறு காரைநகர் பிரதேச சபைத் தவிசாளர் அறிவித்துள்ளார்.

ஆலயச்சூழலில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டு வரும் கட்டடங்களைத் தடுத்துநிறுத்துமாறு கோவில் நிர்வாகத்தி னர் காரைநகர் பிரதேச சபைத் தவிசாளரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தனர். இந்த நிலையில், நிறுத்துமாறு தவிசாளர் பணித்துள்ளார். தவறும் பட்சத்தில் நீதிமன்றத்தில் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். (த-250)




# 2020 புத்தாண்டு பொதுப் பலன்கள்



## சாதகங்களும் 'கவனத்துக்கு' உரியவையும்!



கணிப்பவர்
கே.பி.வித்யாதரன்




### கும்பம்

அவிட்டம் 3,4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதம்

சந்தர்ப்ப சூழ்நிலையை உணர்ந்து செயல்படும் உங்களுக்கு, இந்த ஆண்டு தொடங்கும்போது சூரியனும் புதனும் லாப வீட்டில் அமர்ந்திருப்பதால், அரசால் அனுகூலம் உண்டு. வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். வெளிநாடு செல்ல விசா கிடைக்கும். புண்ணியத் தலங்களுக்குச் சென்று வருவீர்கள். தந்தைவழிச் சொத்தும் வந்து சேரும். வேலைச்சுமை அதிகரிக்கும். கும்ப ராசிக்காரர்களுக்கு, கடந்த மூன்று வருடங்களாகத் தொழில் ரீதியாகப் பெரிதாக வருமானம் இல்லை.

இந்த மூன்று ஆண்டுகளாகப் பெரிதாக எந்த வருமானமும் இல்லை. கும்ப ராசிக்காரர்கள் மிகவும் நிதானமாக, எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்வார்கள்.

பொருளாதாரரீதியாக இந்த ஆண்டு மிகவும் சிறப்பாக இருக்கப்போகிறது. பணம் இருந்தால், இந்தக் காலத்தில் எப்பேர்ப்பட்ட பிரச்சினையையும் தீர்த்துவிடலாம். உங்களுக்குப் பணம் பல வழிகளில் வந்து சேரும்.

வயது கடந்தும் திருமணமாகாமல் இருந்தவர்களுக்கு, இந்த வருடம் திருமணம் நிச்சயமாகும். நீண்டகாலமாக புத்திரபாக்கியம் இல்லாமல் கவலைப்பட்டுவந்தவர்களுக்கு புத்திரபாக்கியம் கிடைக்கும். அதிர்ஷ்டத்தை தேடித்தேடி துரத்திக் களைத்துப் போனவர்களுக்கு, இந்த ஆண்டு அதிர்ஷ்டம் சிறப்பான முறையில் வேலை செய்யும்.

வழக்கில் வெற்றி, கடன் தொல்லைகள் நீங்குதல், எதிரிகள் உங்களின் பக்கம் வந்து சமரசம் பேசுதல் என நிறையவே நல்ல பலன்கள் காத்திருக்கின்றன. சிலர், பழைய வாகனத்தைக் கொடுத்துவிட்டு, புதிய வாகனம் வாங்குவார்கள். சொந்த வீடு வாங்கிக் குடியேறுவார்கள்.

26.12.20 வரை சனி பகவான் உங்கள் ராசியின் லாப வீட்டில் தொடர்வதால் திடீர் யோகம், பணப் புழக்கம் அதிகரிக்கும். திட்டமிட்ட காரியங்கள் தடையில்லாமல் முடியும். அதிக வட்டிக்கு வாங்கியிருந்த கடனையெல்லாம் பைசல் செய்வீர்கள். வழக்குச் சாதகமாகும். அரசாங்கத்தால் ஆதாயம் உண்டு. பல விசேஷங்களிலும் உங்களுக்கு முதல் மரியாதை கிடைக்கும். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் வெற்றியடையும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள்.

12.11.2020 வரை உங்களின் லாப ஸ்தானாதிபதியும் தனாதிபதியுமான குரு பகவான் லாப வீட்டில் நிற்பதால், பிரபலங்களின் அறிமுகம் கிடைக்கும். தொடங்கிய பணிகள் உடனே முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வருமானத்தை உயர்த்த புதுவழிகளில் முயற்சி செய்வீர்கள். திடீர்யோகம், பணவரவு உண்டு. மூத்த சகோதரர் முன் வந்து உதவுவார். மனத்தில் நேர்மறை எண்ணங்கள் உருவாகும். பெரிய பதவிகள் தேடி வரும். வீடு கட்டும் பணியைத் தொடர்வீர்கள்.

13.11.2020 முதல் வருடம் முடியும் வரை குரு பகவான் உங்களின் ராசிக்கு 12ஆம் வீட்டில் சென்று மறைவதால் ராகு உங்களின் ராசிக்கு 5ஆம் வீட்டில் நிற்பதால், பிள்ளைகளைவிட்டுப்பிடிப்பது நல்லது. பூர்வீகச் சொத்துக்காக அதிகம் செலவு செய்ய வேண்டிவரும். யாருக்கும் பணம், நகை வாங்கித் தருவதில் ஈடுபட வேண்டாம். சொந்த விஷயங்களை எவரிடமும் பகிர்ந்து கொள்வது நல்லதல்ல.

கேது உங்களின் ராசிக்கு 11ஆம் வீட்டில் நிற்பதால், பழைய சிக்கல்களை புதிய கோணத்தில் அணுகித் தீர்த்துவைப்பீர்கள்.

**நற்பலன்களே மிகுதியாக நிகழும் ஆண்டாக அமையும்**

வரவேண்டிய பணம் கைக்கு வரும். செப்ரெம்பர் மாதம் முதல் வருடம் முடியும் வரை உங்களின் ராசிக்கு 4ம் வீட்டில் ராகுவும் 10வீட்டில் கேதுவும் நுழைவதால் தாயாரின் உடல்நலனில் கவனமாக இருங்கள். 1.9.2020 முதல் 28.9.2020 வரை சுக்கிரன் 6ம் வீட்டில் மறைவதால் கணவன் மனைவிக்குள் வீண் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பெண்களுக்குப் புதிய இடத்தில் வேலை கிடைக்கும். தள்ளிப் போன திருமணம் கூடி வரும். பெற்றோரின் அரவணைப்பு அதிகரிக்கும்.

மாணவர்கள் தேர்வுக்கு முன் விடைகளை ஒருமுறைக்கு இருமுறை எழுதிப்பாருங்கள். விளையாடும்போது கவனமாக விளையாடுவது நல்லது. வியாபாரிகளுக்கு நேர்மையான பணியாளர்கள் அமைவார்கள். 2020, எதிர்காலத்தில் நன்றாக இருக்கக்கூடிய அஸ்திவார அமைப்பை இளைஞர்களுக்குஏற்படுத்தும். இருப்பினும்நற்பலன்களே மிகுதியாக நிகழும் ஆண்டாக 2020 இருக்கும்.

## நாளை 28.01.2020

செவ்வாய்க்கிழமை

**விகாரி - தை 14**

திதி: திருதியை காலை 8.02 வரை
நட்சத்திரம்– சதயம் முற்பகல் 9.12 வரை

**ராகுகாலம்- 3.36- 5.06 வரை**
**சுப நேரம்- 11.06 -12.36 வரை**
**எமகண்டம்- 9.36- 11.06 வரை**

**சதுர்த்தி விரதம்**

### தினம் ஒரு சிந்தனை

## குழந்தைகளுக்கு கதை சொல்ல யாருமில்லை!

குழந்தைகளின் உலகம் குதூகலத்தை, கொண்டாட்டத்தை, உற்சாகத்தை மறைமுகமாகவும் நேரடியாகவும் பிரதிபலிக்கக்கூடியது. துரதிர்ஷ்டவசமாக, அவர்களுடைய உலகுக்குள் நவீன விஞ்ஞானம் நுழைந்து அவர்களைத் தனிமைப்படுத்திவிட்டது.

வீடுகளில் இப்போது குழந்தைகளுக்குக் கதை சொல்ல ஆட்கள் யாருமில்லை. கதை சொல்லும் நபர்கள் தொலைக்காட்சியின் முன்பாக அமர்ந்திருக்கிறார்கள். கதை கேட்கும் சூழல் இப்போது கதை பார்க்கும் காலமாக மாறியிருக்கிறது. கதை பார்க்கும் குழந்தைகளின் உலகம் விபரீதங்கள், நிராசைகள், ஏக்கங்கள் நிரம்பியதாக மாறியிருக்கிறது. குழந்தைகளுக்கான சேனல்களில் வரும் விளம்பரங்களோ ஆபத்தான எதிர்காலத்தைக் கட்டமைக்கும் சூழலை உருவாக்கிவிடுகிறது.

குழந்தைகளின் உலகத்தில் அந்தந்தக் காலத்தில் இயற்கையாக உருவாகும் அனுபவத்தை உருவாக்கவிடாமல் இன்றைய வீடு, பல நெருக்கடிகளைத் தருகிறது. ஊடக விளம்பரங்களால் கற்பனைகளோடும் ஆசைகளோடும் வளரும் குழந்தைகள் பொய்யான இலட்சியங்களைத் தங்களது எதிர்கால வாழ்க்கையாக நினைத்து வாழ்கின்றனர். இப்படியான பகல்கனவு வாழ்வில் கதை கேட்கும் சூழலுக்குச் சாத்தியமே இல்லை.

பள்ளிக்கூடங்களில் கதை கேட்கும் சூழல் சோற்றுப் பருக்கை அளவுகூட இல்லை. மதிப்பெண்கள் என்கிற எக்ஸ்பிரஸ் அவசரம் மட்டுமே அவர்களைப் புத்தகங்களோடும் ஆசிரியர்களோடும் உறவு நிலையைப் பேணச் செய்கிறது. ஆசிரியர் அதிக மதிப்பெண்களைக் குறுக்குவழியில் வாங்கித்தரும் இயந்திரம் மட்டுமே. மதிப்பெண்களை வாங்க வேண்டும் என்பதற்காக மட்டுமே ஆசிரியர்களிடம் மாணவர்கள் நல்ல விதமாக நடந்து கொள்கிறார்கள். மரியாதை, நம்பிக்கை என்பதெல்லாம் மதிப்பெண் உலகத்தில் கிடையாது. பொறுமை, நிதானம், மன அமைதி, சகிப்புத்தன்மை, தியாகம் என்பவை எல்லாம் இப்போது அர்த்தமற்ற சொற்களாக மாறிவிட்டன.

குழந்தைகளுக்கு வீடுகளில், பள்ளிக்கூடங்களில் கதை சொல்லுதல், கதை கேட்டல் என்பது இன்றைய உலகில் மிக அபூர்வமாகவே வாய்க்கிறது. குழந்தைகளின் கதை உலகில் சிவகார்த்திகேயன், சூர்யா, அஜித், விஜய் போன்ற நாயக பிம்பங்கள் நிறைந்திருக்கின்றனர். இன்றைய தலைமுறைக்கு 50 வருட காலத்துக்கு முன்பு, மாபெரும் இலட்சிய கதை மாந்தர்களாக இருந்த 'இரும்புக் கை மாயாவி' போன்ற கதைபாத்திரங்களுக்கும்கூட ரசனை அடிப்படையில் பெரிய கருத்துவேற்றுமை ஏற்பட்டுள்ளது. காமிக்ஸ், படக்கதை குறித்த அக்கறை எல்லாம் காணாமல்போய்விட்டன.

வெட்கத்துடன் பதிவுசெய்ய வேண்டிய இன்னொரு விஷயம் உண்டு. 60 வயது நிரம்பிய மனிதர்கள்தான் சிறுவர் இதழ்களை வாசிப்பதும், வாசகர் கடிதம் எழுதுவதும், சிறுவர் பாடல் பாடுவதும், சிறுவர் கதை எழுதுவதுமாகத் தங்கள் காலத்தை நகர்த்திக்கொண்டுள்ளனர். சிறுவர் இதழ்களுக்கு 60 வயதான பெரியவர்களே வாசகர்கள். சிறுவர்களெல்லாம் கதை கேட்பதை மட்டுமல்ல, புத்தக வாசிப்பையும் புறக்கணித்து விட்டு ஓடுவது பெரும் ஏமாற்றமாக உள்ளது.

## பருத்தித்துறை...

வர் கையில் பலத்த காயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ம-22)

## ஜனாதிபதிக்கு...

சஜித் என தற்போது அறிவிப்பு விடுப்பது மக்களை ஏமாற்றுவதற்காகும் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுடன் ஒத்துழைத்து செயற்படக்கூடிய பொருத்தமான பிரதமர் சஜித் பிரேமதாசவே என்று அவரை ஜனாதிபதியாக்குவதற்குப் பாடுபட்டவர்கள் தற்போது கருத்து வெளியிட்டுவருகின்றனர். ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்து இரண்டு மாதங்களே கடந்துள்ளன. அந்தத் தேர்தலில் கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராகவே சஜித் போட்டியிட்டார்.

ஜே.ஆர். காலம் முதல் வழமையாக பொருளாதாரத்தை வைத்து பிரசாரம் செய்யும் ஐக்கிய தேசியக்கட்சி, கடந்த 4 ஆண்டுகளில் தனது ஆட்சியில் உரிய திட்டங்களை முன்னெடுக்காததால் மக்கள் மத்தியில் கோத்தாபய பீதியை ஏற்படுத்துவதையே பிரசார யுக்தியாக கையாண்டனர்.

கோத்தாபய ராஜபக்ச ஆட்சிக்கு வந்தால் நாடு சீரழிந்துவிடும், வெள்ளை வேன் வரும், ஊடகவியலாளர்கள் கடத்தப்படுவார்கள் என்றெல்லாம் பரப்புரை செய்யப்பட்டது. இதன்படி கோத்தாபய ராஜபக்சவுக்கு எதிராக நாட்டிலுள்ள 55 இலட்சம் பேர் அன்னத்துக்கு புள்ளடியிட்டனர். தேர்தல் முடிவடைந்து 60, 70 நாள்களே கடந்துள்ளன.

இந்த நிலையில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு பொருத்தமான பிரதமர் சஜித் என அவரின் சகாக்கள் அறிவிப்பு விடுத்துவருகின்றனர். அப்படியானால் எதற்காக ஜனாதிபதி தேர்தலில் சஜித் போட்டியிட்டார்? ஏன் பெரும் செலவில் பிரமாண்டமாக பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன?

ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை இதுவெனில் ஜனாதிபதித் தேர்தல் முடிவடைந்த பின்னர் சஜித்தை பிரதமராக்கி இருக்கலாம். பாராளுமன்றத்தில் பெரும்பான்மை ஐக்கிய தேசியக்கட்சி வசமே இருக்கின்றது. நிலைமை இப்படியிருக்கையில் எதற்காக பிரதமர் பதவி மஹிந்தவுக்கு வழங்கப்பட்டது? மக்களை மீண்டுமொருமுறை ஏமாற்றுவதற்காகவே இப்படியான அறிவிப்புகள் விடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசியல் வரலாற்றில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறும் கட்சியே நாடாளுமன்றத் தேர்தலிலும் வெற்றி பெற்று ஆட்சியமைக்கும். 1994இல் இருந்து இப்படிதான் நடந்துவருகின்றது. எனவே, அடுத்த தேர்தலிலும் இந்த நிலை மாறாது. எனவே, பலமான எதிர்க்கட்சியை உருவாக்குவது தொடர்பில் மக்கள் சிந்திக்க வேண்டும்' என்றும் அவர் கூறினார். (ம-44)

## வடக்குப்...

வடக்கில் பணியாற்றிய 300 தமிழ்ப் பொலிசாரை ஒரேயடியாக திடீரென இடமாற்றம் செய்தமை தொடர்பில் பலரும் அதிருப்தி வெளியிட்டனர். இதையடுத்து தமது இடமாற்றத்துக்கு எதிராக பலர் மேன்முறையீடு செய்திருந்தனர். இந்த நிலையில் மேன்முறையீடு செய்த பொலிஸார் அனைவரினதும் இடமாற்றங்கள் கைவிடப்பட்டு கடந்த டிசெம்பர் 30ஆம் திகதி எந்த பொலிஸ் நிலையத்தில் இருந்தனரோ அதே பொலிஸ் நிலையங்களில் பணி புரிவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ள

னர். (ம-105)

## விசர் நாயால்...

இலக்கான இவர் இரு நாள்களின் பின்னர் கோப்பாய் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். பின்னர் அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றம் செய்யப்பட்டார். சிகிச்சை பயனில்லாமல் நேற்று அதிகாலை இவர் உயிரிழந்தார். (ம-105)

## மதகுருக்கள்...

ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர பரமாச்சாரியார் ஆகியோரின் தலைமையிலேயே குறித்த மன்றம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ் ஆயர் இல்லத்தில் நேற்று நடந்த கலந்துரையாடலில் வைத்தே குறித்த மன்றம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இந்த கூட்டத்தில் வடக்கு, கிழக்கில் உள்ள துறைசார் பேராசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், பொருளியலாளர்கள், புலமையாளர்கள், கல்வியாளர்கள், தொழில்சார் நிபுணர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் நடைபெறும் அதேவேளை, போரால் மிகமோசமாக பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டுள்ள வடக்கு கிழக்கின் பொருளாதாரம், சமூக அபிவிருத்தி மற்றும் மேம்பாடு ஆகியவற்றை சமாந்திரமாக முன்னெடுத்து செல்வதற்கு சிவில் சமூகத்தின் காத்திரமான பங்களிப்பு அவசியம் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்படுகிறது.

போர் முடிவடைந்து 10 வருடங்களுக்கு மேல் ஆகியுள்ள போதிலும் வடக்கு கிழக்கில் பொருளாதாரம், சமூக அபிவிருத்திக்கான நடவடிக்கைகள் தமிழ் மக்களின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்களை பிரதிபலிக்கும் வகையில் இன்னமும் மேற்கொள்ளப்படாத நிலையே காணப்படுகின்றது.

குறிப்பாக, இளையோர் வலுவூட்டல், வறுமை ஒழிப்பு, விவசாயம், மீன்பிடி, திறன் விருத்தி, பொருளாதார வலுவூட்டல், கல்வி, சுற்றாடல், நல்லாட்சி, சுகாதாரம், விஞ்ஞானமும் புதுமை படைத்தலும், தகவல் தொழில்நுட்பம், சட்ட உரிமைகள், தமிழர் மரபு, பல்துறை ஒருங்கிணைப்பு ஆகிய துறைகளில் துறைசார் வல்லுநர்களை அடையாளம் கண்டு வளங்களை சரியான முறையில் ஒன்று திரட்டி சரியான திசையில் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக துடிப்பும் செயற்திறனும் மிக்க சிவில் சமூக குழு ஒன்றின் தேவை இதற்கு அவசியமாக இருக்கின்றது. இந்த அவசியத்தை கவனத்தில் எடுத்தே எதிர்காலத்தில் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளை ஆராயும் பொருட்டு இன்றைய கூட்டம் நடைபெற்றிருந்தது.

அறிவு, ஆய்வு மற்றும் செயற்திட்டங்களின் வினைத்திறன்மிக்க முகாமைத்துவத்தின் ஊடாகவும் மற்றும் வெளிநாடுகளில் கிடைக்கக்கூடிய வாய்ப்புக்கள் மற்றும் வளங்களை பயன்படுத்தி தமிழர்களின் செழிப்பு மற்றும் வலுவூட்டலுக்காக மன்றம் ஒன்றை ஸ்தாபித்து செயற்படுவது என்று இந்த கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. (ம)

## எப்போதும்...

தனியார் தொலைக்காட்சியில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இரா.சம்பந்தனுக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை ஏற்கவேண்டும் என்ற எண்ணத்துடன்தான் சி.வி.விக்னேஸ்வரனைக் கூட்டமைப்புக்குள் கொண்டு வந்தோம். அவரை வடக்கு மாகாண முதலமைச்சராக்கினோம். அவர் தன்னுடைய முதலமைச்சர் பதவிக்காலம் முடிவடையும் வரைக்கும் கூட்டமைப்பின் உறுப்பினராகவே இருந்தார். பதவிக்காலம் முடிந்து மறுநாள் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய கட்சியை ஆரம்பித்தார். புதிய கட்சிக்கான ஆயத்தங்களை அவர் முதலமைச்சர் பதவியில் இருக்கும்போதே செய்திருந்தார்.

அப்படியான ஒருவரான விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவம் மாறினால் கூட்டமைப்புடன்தான் மீண்டும் இணைவேன் என்று கூறுவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதவுகள் திறந்தே இருக்கின்றன. எவரும் வரலாம்; போகலாம். ஆனால், இரா.சம்பந்தனே தலைவராக இருப்பார். அவருக்கு கட்சியை வழிநடத்தக்கூடிய ஆற்றல் இருக்கும் வரைக்கும் சுகதேகியாக அவர் இருக்கும் வரைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகச் செயற்படுவார்' - என்றார். (ம-22)

# பசுக்களை இறைச்சியாக்கிய மண்டைதீவு நபர் மாட்டினார்!

யாழ்ப்பாணம், ஜன. 27

புங்குடுதீவிலுள்ள பசுக்களை இறைச்சிக்காகக் கடத்தும் மண்டைதீவைச் சேர்ந்த நபரொருவர் நேற்றுமுன்தினம் சிக்கினார்.

வேலணை பிரதேச சபை உறுப்பினர் கருணாகரன் நாவலன் மற்றும் புங்குடுதீவு ஜே/26 பிரிவு கிராமசேவகர் சிறீதரன் ஆகியோரின் முயற்சியால் மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஒரு முழு மாட்டின் இறைச்சியுடன் குறித்த நபர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு



ஊர்காவற்துறை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். புங்குடுதீவு மடத்துவெளி - வல்லன் பகுதிகளுக்கிடைப்பட்ட பற்றைக்காட்டு பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம-26)

## ஐரோ...

இதன்போது வலியுறுத்தினார்.

கொழும்பிலுள்ள கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இதன்போது கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தனுடன் கூட்டமைப்பின் பேச்சாளரும் கலந்துகொண்டார்.

இந்தச் சந்திப்பில் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பின் இறுதி அறிக்கையை ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவினர் இரா. சம்பந்தனிடம்கையளித்தனர். (ம-22)

## கணவன்...

ஐயாத்துரை சரஸ்வதி (வயது - 72) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்தவராவார். கொல்லன் கலட்டி தெல்லிப்பழையைச் சேர்ந்த இவருடைய கணவன் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று அதிகாலை இறந்துள்ளார். கணவன் இறந்ததாக மனைவிக்கு அதிகாலை உறவினர்கள் அறிவித்துள்ளனர். இதனால் அந்தச் செய்திகேட்டு மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார் மனைவி.

இவருடைய மரண விசாரணையை யாழ் வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமச்சிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-26)

## கொழும்புக்கு...

கொழும்பு தலைமை மருத்துவ அதிகாரி ருவன் விஜயமுனி தெரிவித்தார்.

அத்துடன் நெரிசலான பகுதிகளில் கூடும் அனைவரும் முகக் கவசங்களை அணியவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. கொழும்பு தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர கொரோனாவை எதிர்கொள்ளும் முறை தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அந்தஅறிக்கையில்குறிப்பிட்டுள்ளதாவது:-

கொரோனா வைரஸ் ஒருவரிடம் இருந்து இன்னொருவருக்குப் பரவும் தன்மையுடையது. இந்த நோய் மிகத் தீவிரமாகப் பல்வேறு நாடுகளுக்கும் பரவி வருகின்றது. இலங்கைக்குப் பரவாமல் தடுக்க பல்வேறு பொதுச்சுகாதாரப் பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. இதற்கான முன்நிபந்தனைகள் இலங்கை வானூர்தி நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன - என்றுள்ளது. (ம)

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1115
சீட்டிழுப்பு திகதி 2020.01.25 சனிக்கிழமை
F 05 49 59 70
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
கோடிபதி கப்ருக
சீட்டிழுப்பு வாரம்: 550 திகதி: 2020 ஜனவரி 24
வர்ணம்: பச்சை வெள்ளி
B 10 23 36 41
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 75,000,000/-
மஞ்சள், இளஞ்சிவப்பு மற்றும் பச்சை நிற டிக்கட்டுகள் முறையே ஞாயிற்றுக்கிழமை, செவ்வாய்க்கிழமை மற்றும் வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>KK என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 864
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.01.26
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,437,640/-
வெற்றி இலக்கங்கள் 37 47 54 64 T
ராசி அதிர்ஷ்டம்
திகதி 26.01.2020 வெற்றி வாரம் 2750 வர்ணம் ஊதா
துலாம்
வெற்றி இலக்கங்கள் 19 24 29 47
திங்கள் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2,719,798/=
27.01.2020ம் திகதி திங்கட் கிழமை மஞ்சள் நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

# இன்றைய நாள்

**மேடம்:** நண்பர்கள் நல்ல தகவலைக் கொண்டு வந்து சேர்க்கும் நாள். நம்பிக்கைகள் அனைத்தும் நடைபெறும். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். வியாபார விருத்தியுண்டு.

**இடபம்:** ஆதாயம்எதிர்பார்த்தபடிவந்துசேரும் நாள். அடுத்தவர் நலனில் அதிக அக்கறை எடுத்துக்கொள்வீர்கள்தொழிலில்முன்னேற்றம் உண்டுவருங்காலவாழ்வில்தேடிவரும்சொத்துப் பிரச்சினைசுமுகமாகமுடியும்

**மிதுனம்:** ஆதாயத்தைவிடவிரயம்கூடும்நாள். குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. திடீர் செலவுகளைச் சமாளிக்கப்பிறரிடம்கைமாத்துவாங்கக்கூடிய சூழ்நிலைஅமையும்

**கடகம்:** மாலை நேரத்தில் மனக்குழப்பம் ஏற்படும் நாள். மதியத்திற்கு மேல் விரயம் உண்டு. வெளிவட்டாரப் பழக்க வழக்கத்தில் விழிப்புணர்ச்சி தேவை. கொள்கைப் பிடிப்பைத் தளர்த்திக்கொள்ள நேரிடும். உறவினர் பகையுண்டு.

**சிம்மம்:** வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழிவகை செய்து கொள்ளும் நாள். பணியாளர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். வாகன மாற்றம் பற்றிய சிந் தனை மேலோங்கும்.

**கன்னி:** வழக்குகளில் திசை திருப்பம் ஏற்படும் நாள். உள்ளம் மகிழும் செய்தியொன்றை உடன்பிறப்புகள் வழியில் கேட்கலாம். இடம், பூமி வாங்க மற்றும் விற்க எடுத்த முயற்சி வெற்றிபெறும். பகையொன்று உறவாகலாம்.

**துலாம்:** சந்தோஷ நிகழ்வை நண்பரிடம் பகிர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சிப் பணி எளிதாக நிறைவேறும். புத்திரரின் அரசியல்வாதிகள் நற்செயலால் கூடுதல் புகழ் பெறுவீர்கள்.

**விருச்சிகம்:** வைராக்கியத்தோடு செயல்பட்டு வாக்குறுதியை நிறைவேற்றும் நாள். உங்கள் பொறுமைக்கு இன்று பெருமை கிடைக்கும். தொழிலில் வளர்ச்சி கூடும்.

**தனுசு:** வரவு இருமடங்காகும் நாள். புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். எதிர்காலம் பற்றிய சிந்தனைகள் மேலோங்கும். விலகிச் சென்றவர்கள் விரும்பிவந்து சேருவர்.

**மகரம்:** விரயம் ஏற்படும் நாள். வீடு மாற்றம், இடமாற்றம் பற்றிய சிந்தனை மேலோங்கும். பொருளாதார நலன் கருதி வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள்.

**கும்பம்:** மனச்சுமை குறையும் நாள். மாற்று இனத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் கூடும்.

**மீனம்:** கரைந்த சேமிப்புகளை ஈடுகட்டும் நாள். எதிர்பார்த்ததைவிட முன்னேற்றம் கூடும். கடந்த இரண்டு நாள்களாக வராமல் இருந்த பணவரவொன்று இன்று கைக்கு கிடைக்கலாம்.

# திருமண நிகழ்வில் குண்டுத் தாக்குதல்

## ஆப்கனில் 11 பேர் காயம்

காபூல், ஜன.27

ஆப்கனில் இடம்பெற்ற கைக் குண்டுத் தாக்குதலில் 20 பேர் காயமடைந்துள்ளனர் என்று அந்த நாட்டுப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆப்கனின் கிழக்கு மாகாணமான கோஸ்டில் நடந்த திருமண நிகழ்வொன்றிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது என்று மாகாண பொலிஸ் செய்தித் தொடர்பாளர் அடில் ஹைதர் நேற்றுத் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத நபர் ஒருவர் திருமண நிகழ்வில் கைக்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளார் என்றும், காயமடைந்த 20 பேரில் ஒரு குழந்தை உள்ளடங்குகின்றது என்றும் அடில் ஹைதர் குறிப்பிட்டார்.

காயமடைந்த அனைவரும் கோஸ்டில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் மூவரின் நிலை கவலைக்கிடமாகவும் உள்ளது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.



இந்தத் தாக்குதல் தொடர்பாக அந்த நாட்டுப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ)

# கொட்டுகின்றது மழை: தத்தளிக்கிறது பிரேஸில்

லண்டன், ஜன.27

தென்கிழக்கு பிரேஸிலில் கடந்த இரண்டு நாள்களாகப் பெய்து வரும் கன மழை காரணமாக நிலச்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கால் 30 பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்த சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் 17 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், மினாஸ் ஜெரைஸ் மாநிலத்தில் 2 ஆயிரத்து 600 பேர் வரை குடியிருப்புக்களிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர் என்றும் அங்கிருந்து தகவல்கள் வெளியாகியுள்ளன. சேதங்களின் முழு விவரங்கள் இன்னமும் கணக்கெடுக்கப்படாத நிலையில் சேத விவரங்கள் உயரலாம் என அஞ்சப்படுகின்றது.



பெலோ ஹொரிசோன்டே பகுதிகளில் 24 மணித்தியாளத்தில் 171.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று பிரேசிலின் வானிலை மைத்திய நிலையம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது. இது கடந்த நூறு ஆண்டுகளில் பிரேஸிலில் ஒரு நாளில் பதிவான அதி கூடிய மழைவீழ்ச்சியென குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நீளமான விமானத்தை தயாரித்தது போயிங்!

கொழும்பு, ஜன.27

உலகின் மிக நீளமான மற்றும் மிகப்பெரிய இரட்டை இயந்திரத்தைக் கொண்ட போயிங் 7779 எக்ஸ் என்ற விமானத்தின் முதல் சோதனை நடவடிக்கையானது வெற்றிகரமாக நிறைவடைந்து விட்டது என்று போயிங் நிறுவனம் தெரிவித்துள்ளது.

போயிங் 737 மெக்ஸ் ரக விமான விமானங்களின் விபத்துக்களையடுத்து எழுந்த பல்வேறு சர்ச்சைகளுக்கு மத்தியிலேயே இந்த புதிய விமானத்தை அமெரிக்காவை தளமாக கொண்டு இயங்கும் போயிங் நிறுவனத்தினர் உருவாக்கியுள்ளனர்.

வொஷிங்டன் மாநிலத்தின் எவரெட்டிலிருந்து புறப்பட்ட இந்த விமானம் கடந்த சனிக்கிழமை சியாட்டிலில் உள்ள போயிங் தளத்தை 4 மணி நேரத்திற்கு முன்னதாகவே அடைந்து தனது முதல் பயணத்தை வெற்றிகரமாக நிறைவுசெய்தது.

வடிவமைக்கப்பட்டுள்ள போயிங் 7779 எக்ஸ் விமானம் 251 நீளமும் 235 அடி மடிக்கக்கூடிய இறக்கைகளையும் உலகின் மிகப்பெரிய இரட்டை இயந்திரங்களைக் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. 10 சதவீதம் அதிக எரிபொருள் திறன் கொண்டது.



ஜப்பானின் ஆல் நிப்பான் ஏர்வேஸ், பிரிட்டன் ஏர்வேஸ், கத்தே பசுபிக் ஏர்வேஸ் மற்றும் சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் உள்ளிட்ட உலகின் முன்னணி விமான நிறுவனங்களிடமிருந்து முன்பதிவுகளை பெற்ற பின்னர் 2021 ஆம் ஆண்டு முதல் 777 9 எக்ஸ் விமானத்தை வழங்குவதற்கு போயிங் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இந்த விமானத்தின் உற்பத்தியானது எங்களுக்கு பெருமை சேர்ப்பதாக அமைந்துள்ளதாகவும் நாங்கள் யார் என்பதை அனைவருக்கும் வெளிப்படுத்தியுள்ளோம் என்றும் போயிங்கின் நிறுவனத்தின் தலைமை நிர்வாகி கூறியுள்ளார்.

(எ)




# துருக்கியில் அதிர்ந்தது நிலம்

## 29 பேர் சாவு; 1200 பேர் காயம்

அங்காரா, ஜன.27

துருக்கி தலைநகர் அங்காராவின் கிழக்கே சுமார் 550 கிலோ மீற்றர் (340 மைல்) தொலைவில் எலாசிக் மாகாணத்தின் சிவ்ரிஸ் நகரத்தில் 6.8 ரிக்டர் அளவுகோலில் பதிவாகிய நிலநடுக்கத்தில் 29 பேர் உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை துருக்கியின் நேரப்படி சுமார் 20:55 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது. ஆரம்பத்தில் 18ஆகக் காணப்பட்ட உயிரிழப்பு, தற்போது 29 ஆக உயர்ந்துள்ளது. காயமடைந்தோரின் எண்ணிக்கை ஆயி ரத்து 200 ஆக உயர்ந்துள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டுச் சுமார் 20 மணித்தியாலங்களின் பின் துருக்கியின் எலாசிக் நகரில் உள்ள கட்டட இடிபாடுகளில் இருந்து மூன்று வயதுக் குழந்தையொன்று உயிருடன் மீட்கப்பட்டுள்ளது. காயங்களுடன் மீட்கப்பட்ட அந்தக் குழந்தை சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளது என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ)




வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக குழுத் தெரிவும்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக குழுத் தெரிவும் எதிர்வரும் **09.02.2020 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் இடம்பெறவுள்ளது.** அனைத்து பழைய மாணவர் சங்க அங்கத்தவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கிறேன்.

புதிய நிர்வாகக் குழுவிற்கான நியமன பத்திரங்களை எமது சங்க இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி அ.ஜெயகுமரன்,**
செயலாளர் 26.01.2020

31 ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 10 . 05 . 1949
மறைவு 26 . 12 . 2019



திருமதி சேனாதிராஜா யோகமாணிக்கம் குரூஸ்

(27.01.2020)


சிறுவயதில் நாம் தந்தையை இழந்து நின்றபோது
பிள்ளைகள் நால்வர் எங்களின் வாழ்க்கைக்காக
நீங்கள் உங்கள் வாழ்வை தியாகம் செய்து
தனித்து நின்று அன்போடு எமை வளர்த்து
கல்வி, பாசம், செல்வம், பண்பு அனைத்தையும் எமக்கு
கிடைக்க வழி அமைத்து நல்ல நிலைக்கு ஆளாக்கி,
எமக்கு நல்ல குடும்பங்களையும் அமைத்துத் தந்து
பேரப்பிள்ளைகளின் உயர்வான நிலையையும் கண்ட
பின்னர் உங்கள் கடமை முடிந்தது என்று
எம்மிடம் விடைபெற்று இறைவனிடம் சென்றுவிட்டீர்களா அம்மா?
தாங்க முடியவில்லை அம்மா உங்கள் பிரிவால்
தினமும் உங்களை நினைத்து கண்ணீர் சிந்துகின்றோம் அம்மா!

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் மற்றும் உறவினர்கள்.

(CS/30812)
(11.17)


# 6 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்த தயார்

## ஈரான் கூறுகின்றது



பாக்தாத், ஜன.27

ஈரான் விண்வெளியில் செலுத்த ஆறு செயற்கைக் கோள்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்று ஈரானின் தகவல் மற்றும் தகவல் தொடர்பு தொழில்நுட்ப அமைச்சர் மொஹமட் ஜாவாத் அசாரி ஜஹ்ரோமி தெரிவித்துள்ளார்.

ஒரு செய்மதியை வடிவமைக்கும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் ஜாவாத் அசாரி ஜஹ்ரோமி தனது டுவிற்றர் பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஈரானிய நாள்காட்டியின் முறைப்படி மார்ச் 19 ஆம் திகதி இந்த செய்மதிகளை பூமியின் சுற்றுவட்டப் பாதையில் செலுத்தத் திட்டமிட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, 2019 ஆம் ஆண்டு இமாம் கோமெய்னில் ஈரானின் ராக்கெட் ஒன்று வெடித்ததாக மேற்கத்தேய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன. எனினும் ஈரானிய அதிகாரிகள் அதை மறுத்திருந்தனர். (எ)

# வலுவாகிறது கொரோனோ!

## சீனா எச்சரிக்கை

பீஜிங், ஜன.27



கொரோனா வைரஸ் பரவும் வேகம் வலுவடைந்து வருகின்றது. அதனால் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என்று சீனாவின் தேசிய சுகாதார ஆணையகம் நேற்றுத் தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக இதுவரை உலகளாவிய ரீதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சீனாவில் 56 பேர் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே சீனாவின் தேசிய சுகாதர ஆணையக அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கொரோனா வைரஸ் தொடர்பாக அதிகாரிகளின் அறிவு குறைவாகவே உள்ளது. வைரஸால் ஏற்படும் அபாயங்கள் குறித்து தெளிவாக தெரியவில்லை.

இதுவரை சீனாவின் முக்கிய நகரங்களில் போக்குவரத்து மற்றும் பயணத் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறப்பு நிகழ்வுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. என்றார்.

சட்டவிரோதமாக வனவிலங்குகளை விற்பனை செய்து வந்த மத்திய சீன நகரமான வுஹானில் உள்ள கடல் உணவுச் சந்தையில் கடந்த ஆண்டு பிற்பகுதியில் கொரோனா வைரஸ் தோன்றியது என்று மருத்துவ நிபுணர்கள் கண்டறிந்துள்ளனர். தற்போது சீனாவில் சந்தைகள், உணவகங்கள் மற்றும் இணையத் தளங்களூடாக வனவிலங்குகளை விற்பனை செய்வதற்கு நாடு தழுவிய ரீதியில் தடை விதித்துள்ளது. (எ)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை மனோகரன்

(வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமம்)
(ஓய்வூதியர் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, கொடிகாமம்)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
ஆறவில்லை எம் துயரம் ஐயா!
பண்பின் பிறப்பிடமாய்
பாசத்தின் வழிகாட்டியாய்
அன்பு தவழும் உம்முகத்தை
தேடுகின்றோம் இவ்வுலகில்
புன்னகை சிந்தும் உம் சிரிப்பை
இனி எப்போது காண்போம்
நீர் ஆற்றிய தொண்டுகளை
நாம் எப்படி மறப்போம்
உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு
ஒருபொழுதும் அகலாது.

தாயின் மடியில் 26.12.1955
இறைவன் அடியில் 07.02.2019
திதி:-வளர்பிறை திருதியை (27.01.2020)

மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்த பெருமகனின் ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானோடு இணைய வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி!

வெள்ளாம் போக்கட்டி,
கொடிகாமம்.
(IN/12394)(11.17)

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.



# மணியந்தோட்டம் வி.கழகம் கபடியில் தங்கப் பதக்கம்

யாழ்ப்பாணம், ஜன 27
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட வினையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக் கான கபடி போட்டியில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கம் வென்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய முன்றலில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கல்வியங்காடு சாம்பியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் மணியந்தோட்டம் விளையாட்டுக் கழக அணி 58:24 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. (எ-23)



## கால்பந்தாட்டத்தில் யங்ஸ்ரார் பதக்கம்

யாழ்ப்பாணம், ஜன.27
வவுனியா பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கம் வென்றது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை வவுனியர் நகர சபை விளையாட்டரங்கில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் யங் ஸ்ரார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செவ்வானம் விளையாட்டுக் கழக அணி மோதியது.

இரண்டு அணியினரும் ஆட்ட நேர முடிவில் எதுவித கோல்களையும் பதிவு செய்யாது போக ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்டம் வெற்றி தோல்வி தீர்மானிப்பதற்காக சமநிலை தகர்ப்பு உதை வழங்கப்பட்டது.

அதில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)



# கரப்பந்தாட்டப் போட்டியில் அராலி அண்ணா பதக்கம்

யாழ்ப்பாணம், ஜன 27
சங்கனை பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் பெண்க ளுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கம் வென்றது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விக்ரோறியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.


3 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம்பெற்றது. அதில் முதலாவது செற் ஆட்டத்தை அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி 25:16 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவது ஆட்டத்தைத் தனது அதிரடியான ஆட்டத்தின் மூலம் விக்ரோறியன் விளையாட்டுக் கழக அணி 25:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது.

வெற்றியை தீர்மானிக்கும் ஆட்டமாக 3 செற் ஆட்டம் அமைத்தது. அதில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக 25 : 19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றது. ஆட்ட நேர முடிவில் 2:1 என்ற செற் கணக்கில் அராலி அண்ணா விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. (எ-23)



# பூப்பந்தாட்ட போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன.27
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான பூப்பந்தாட்டக் குழு ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி தங்கப் பதக்கத்தையும், பாரதி விளையாட்டுக் கழக அணி வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றனர். (எ-23)



யாழ்ப்பாணம், ஜன.27
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான பூப்பந்தாட்டத் தனிநபர் போட்டியில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வீரர் எஸ் காண்டீபன் தங்கப் பதக்கம் பெற்றார்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்துவப்படுத்தி விளையாடிய எஸ்.காண்டீபன் தன்னை எதிர்த்து விளையாடிய செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்துவப்படுத்து விளையாடிய வி.அபிலசனை 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார். (எ-23)



யாழ்ப்பாணம், ஜன.27
நல்லூர் பிரதேச செயலக பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான நடப்பாண்டுக்கான விளையாட்டு போட்டி வரிசையில் ஆண்களுக்கான பூப்பந்தாட்ட இரட்டையர் ஆட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி வீரர்கள் எஸ்.காண்டீபன், என்.குகதாஸ் இணைத் தங்கப் பதக்கம் வென்றனர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம் பெற்ற இறுதியாட்டத்தில் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்துவப்படுத்து விளையாடிய எஸ்.காண்டீபன், என்.குகதாஸ் இணை, தங்களை எதிர்த்து விளையாடிய செந்தமிழ் விளையாட்டுக் கழக அணியை பிரநிதித்துவப்படுத்து விளையாடிய அபிலசன், யு. உதயராகவன் இணையை 2:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றார். (எ-23)

# ராகுல் ராஜ்ஜியம்

## நியூசிலாந்துக்கு மீண்டும் பலத்த அடி!



கே.எல்.ராகுலின் அமர்க்களமான அரைசதம், ஸ்ரேயாஸ் அய்யரின் திருப்புமுனை ஆட்டம், பந்துவீச்சாளர்களின் டெத் பவுலிங் ஆகியவற்றால் ஆக்லாந்தில் இன்று நடந்த நியூஸிலாந்துக்கு எதிரான 2ஆவது டி20 போட்டியில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாத்தில் வென்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 20 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 132 ஓட்டங்கள் சேர்த்தது. 133 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி எனும் இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 15 பந்துகள் மீதமிருக்கையில் 3 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களைச் சேர்த்து வெற்றிபெற்றது.

இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் இந்திய அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையில் இருக்கிறது. அடுத்து வரும் போட்டிகளில் நியூஸிலாந்து கட்டாயம் வெல்ல வேண்டிய நிலையில் இருக்கிறது. ஒரு போட்டியில் தோற்றாலும் நியூஸிலாந்து தொடரை இழந்துவிடும். நியூஸிலாந்தில் இதுவரை இந்திய அணி ரி20 தொடரை வென்றதில்லை என்பதால், ஒரு போட்டியில் வென்றாலே இந்திய அணி சாதனை படைக்கும்.

வெற்றிக்கு முக்கியக் காரணமாகவும், தொடர்ந்து 2ஆவது அரைசதத்தை அடித்த கே.எல்.ராகுல் ஆட்டநாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார். இந்த போட்டியில் ராகுல் அடித்த அரைசதம் ரி20 ஆட்டத்தில் அவரின் 11ஆவது அரைசதமாகும்.

இந்திய அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டம் மிகச்சிறப்பாக இருந்து வருகிறது. ரோகித் சர்மா, கோலி ஆட்டமிழந்த நிலையில் மிகவும் நிதானமாக விளையாடி அணியை வெற்றிக்கு அழைத்துச் சென்று 50 பந்துகளில் இறுதிவரை ஆட்டமிழக்காமல் 57 ஓட்டங்களைச் சேர்த்தார்.

கடந்த போட்டியில் வெற்றியை எளிதாக்கிய ஸ்ரேயாஸ் அய்யர் இந்த முறை களத்தில் நிற்பார் என எதிர்பார்க்க 44 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இந்திய அணி போன்ற அசுரத்தனமான திறனில் இருக்கும் அணியை டி20 போட்டியில் வெல்ல இதுபோன்ற சொத்தையான 132 ஓட்டங்கள் சாதாரணமானது. இதுபோன்ற ஸ்கோர்களை வைத்துக்கொண்டு நியூஸிலாந்து வீரர்கள் வெற்றியைத் தக்கவைப்பது நினைத்துக் கூட பார்க்க முடியாதது. இன்னும் கூடுதலாக 30 ஓட்டங்கள் சேர்த்திருந்தால் ஓரளவுக்கு நியூஸிலாந்துக்கு வாய்ப்பு இருந்திருக்கும். (ம)

### ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ்

## ஜோகோவிச், கிவிட்டோவா காலிறுதிக்கு முன்னேற்றம்



மெல்போர்ன், ஜன.27

கிராண்ட் சிலாம் போட்டிகளில் ஒன்றான ஆஸ்திரேலிய ஓபன் ரென்னிஸ் தொடரில் ஜோகோவிச் மற்றும் கிவிட்டோவா ஆகியோர் கால் இறுதிச் சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

இந்தத் தொடர் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. தரப்பட்டியலில் 7ஆம் நிலை வீராங்கனையும், கடந்த முறை இறுதி போட்டிக்கு தகுதி பெற்றவருமான பெட்ரா கிவிட்டோவா (செக்குடியரசு) நேற்றுக் காலை நடந்த 4ஆவது சுற்று ஆட்டத்தில் கிரீஸ் நாட்டை சேர்ந்த மரியா சகாரியை எதிர்கொண்டார்.

அதில் கிவிட்டோவா 67 (47), 63, 62 என்ற செற் கணக்கில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார். அவர் கால் இறுதியில் முதல் நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்டியுடன் (ஆஸ்திரேலியா) மோத வாய்ப்பு இருக்கிறது. அவர் 4ஆவது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த அலீசனை சந்திக்கவுள்ளார்.

தரப்பட்டியலில் 27ஆவது இடத்தில் இருக்கும் சீன வீராங்கனை வாங் 4ஆவது சுற்றில் தோல்வி அடைந்தார். தகுதி சுற்று வீராங்கனையான ஜாபேர் (துனிசியா) 76 (74), 61 என்ற நேர் செட் கணக்கில் வாங்கை தோற்கடித்தார்.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த 4ஆவது சுற்று ஆட்டம் ஒன்றில் கனடாவை சேர்ந்த தரவரிசையில் 32ஆவது இடத்தில் இருக்கும் ரோனிக், குரோசியாவை சேர்ந்த சிலிச்சை எதிர்கொண்டார்.

ரோனிக் 64, 63, 75 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கால் இறுதிக்கு முன்னேறினார். அவர் கால் இறுதியில் தரவரிசையில் 2ஆம் நிலை வீரரும், நடப்பு சாம்பியனுமான ஜோகோவிச் (செர்பியா) சந்திக்கிறார்.

ஜோகோவிச் 63, 64 என்ற நேர்செட் கணக்கில் தரவரிசையில் 14ஆவது வரிசையில் உள்ள டியாகோவை (அர்ஜெண்டினா) தோற்கடித்திருந்தார். (எ)

## மெய்வன்மைப் போட்டி



கொடிகாமம் ஜன 27

வரணி மத்திய கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வு போட்டி கடந்த வியாழக்கிழமை பாடசாலை மைதானத்தில் பாடசாலை முதல்வர் திரு.ப.செல்வவிநாயகம் தலைமையில் இடம்பெற்றது..

சோழன் இல்லம் முதலாம் இடத்தினையும் சேரன் இல்லம் இரண்டாம் இடத்தினையும் பாண்டியன் இல்லம் மூன்றாம் இடத்தினையும் பெற்றுக் கொண்டனர் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவனும் மன்னார் மாவட்ட உதவிச் செயலருமான திரு.வி.சிவராஜா , சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலய நிர்வாக அலுவலகர் திரு.வி.ரவீந்திரன் கௌரவ விருந்தினராக வரணி பிரதேச வைத்தியசாலை வைத்திய அதிகாரி டொக்டர் பி.அச்சுதன் பரிசில் வழங்குனராக திருமதி.சுதாயினி சிவராசா அயற் பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்து சிறப்பித்தனர். (231-59)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்ஜன27

யாழ்.கால்பந்தாட்ட லீக்கினால் நடத்தப்படும் எ.பி.சி பிரிவு அணிகளுக்கிடையில் நடத்தி வரும் லீக் சுற்றுக் கிண்ணத்துக்கான 2020 கால்பந்தாட்ட சுற்றுத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது. இதில் இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞான முருகன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.45 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஒலிம்பிக் வி.ை.ளயாட்டுக் கழக அணியை எதிர்த்து ஞான கலா விளையாட்டுக்கழக அணிமோதவுள்ளது. (23)

## வதிரி டைமன் இறுதிக்கு தகுதி



வலிகாமம் கால்பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டு கழகம் நடத்தும் அணிக்கு 11 பேர் பங்கு பற்றும் கால்பந்தாட்டச் சுற்றுத் தொடரில் வதிரி டைமன் விளையாட்டுக் கழக அணி இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

கழக மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் கொற்றாவத்தை றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வதிரி டைமன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

அதில் வதிரி டைமன் விளையாட்டுக் கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (எ-23)

# காலிறுதியில் கிவித்தோவா!



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர்பிரிவில்காலிறுதிக்குத்தகுதிபெற்றார் கிவித்தோவா. நேற்றுநடைபெற்றகாலிறுதிக்குத் தகுதிபெறும் ஆட்டத்தில் செக்குடியரசு வீராங்கனை கிவித்தோவாவை எதிர்த்து கிரீஸ் நாட்டைச் சேர்ந்த மரியா சகாரி மோதினார்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. 6:7, 6:3 6:2 என்ற செற் கணக்கில்வெற்றிபெற்றுகாலிறுதிக்குத்தகுதிபெற்றார் கிவித்தோவா. (ம)


## வீடு தேவை

**அலுவலக பாவனைக்கு தேவையான வீடு வாடகைக்கு தேவை.**

பிரதான வீதியில் இருந்து 50m இற்கு உட்பட்டதாகவும், நல்ல நிலையிலுள்ள வீடு

**நல்லூர், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

போன்ற பிரதேசத்துக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

தொடர்பு: **077 062 9013**

(es.30824) (13,17)

## பதவி வெற்றிடங்கள்

கொழும்பைத் தலைமையகமாகக் கொண்ட யாழ்.நகரில் இயங்கும் பிரபல காட்சியறைக்கு ( **Show Room** ) தகைமையுடைய இருபாலாரிடமும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1. Sales Promotion Officers**
**2. Accounts Clerks (Ladies Only)**

உடன் விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:-
விளம்பர இல. JF-1017
C/0 உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆள்கள் தேவை

**கோழி இறைச்சிக் கடையில்**

காலை 7 மணிமுதல் 2 மணிவரை வேலை செய்வதற்கு ஆண்/ பெண் இருபாலாரும் தேவை.
சம்பளம் நாளொன்றுக்கு 500/=

**இறைச்சிக் கடையிலும் கோழிப்பண்ணையிலும்**

இரவு பகல் வேலை செய்வதற்கு ஆண்கள் தேவை.
மாதம் 30,000/= சம்பளமும் சாப்பாடும்.

**077 2718149**

A/L 3 PASSES உடன் BIT DEGREE from Colombo University
Call & Register before 31.01.2020@ 0779785796

பல்கலைக் கழக மற்றும் உயர் கல்வி மாணவர்களும் பயிலலாம்

**BIT Semester 1,3,5 & Project Classes**

2nd Upper உட்பட இதுவரை 83 பேர் BIT Degree பெற்றுள்ளனர். 14 வருட அனுபவம்.
வகுப்புக்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில்
By: T.Tharmmendra (BIT, MCSE, MBCS)
28/23, Manaltharai lane(by lane of Palaly Rd), Kandarmadam.

Sem 1 starts on 01.02.2020 at 7.30am.
Sem 3, 5 & Project classes already started.
Only 4500 for each subject. No advance..!

## LITTLE MASTERS' MONTESOORI DAY CARE CENTRE

அதி நவீன கணினி மயமாக்கப்பட்ட ஆங்கில தமிழ்மொழி மூலமான பாலர் பாடசாலையும் குழந்தைகள் பராமரிப்பு நிலையமும்

**English-Medium & Tamil Medium**

யாழ் மக்களுக்கு முதல் முறையாக அதி நவீன வசதிகளுடன் முன்பள்ளியும் இணைந்த நிலையில் பிள்ளைகளின் பராமரிப்பு சேவைகள்

**Time:: 6.30 am - 5.00pm**

11/2 வயது முதல் பிள்ளைகள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள்.
பாலர் பாடசாலையின் வயது பிரிவுகள்

PLAYGROUP $2^{+}$ (2வயது)
MONTESOORI$3^{+}$ (3வயது)
PRESCHOOL $4^{+}$ (4வயது)



எதிர்வரும் 08.02.2020 தைப்பூசம் அன்று ஆரம்பிக்கப்படுகின்றது.

அரச, தனியார் உத்தியோகத்தர்களே! தொழில் அதிபர்களே! உங்கள் பிள்ளைகளை தாய்ப் பாசத்திற்கு நிகராக பராமரித்து அறிவுடன் ஆளுமையையும் ஊட்டி ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் தரம்-1ற்கு தேர்ச்சியுள்ளவர்களாக மாற்றித்தருகின்றோம் நாம்.


மிகக் குறைந்த அனுமதிக்கட்டணம், மாதாந்தக்கட்டணம் விரைந்து உங்கள் அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மேலும் எமது முன்பள்ளிச் செயற்பாடுகளைப் பார்வையிட Lmm Preschool எனும் Face book முகவரியை நாடுங்கள்.

முகவரி :
Little Masters' Montesoori & Day Care Center
கே.கே.எஸ்.றோட்,
யாழ்ப்பாணம்.
(இந்துக் கல்லூரிக்கு முன்பாக)
T.P: 077 747 4741

எமது கிளைகள்
- கே.கே.எஸ்.றோட், இணுவில்
- கே.கே.எஸ்.றோட், மல்லாகம்.
- கே.கே.எஸ்.றோட், தெல்லிப்பளை.
- கீரிமலை றோட், சண்டிலிப்பாய்.
- தெல்லிப்பளை றோட், பண்டத்தரிப்பு.
- தெல்லிப்பளை றோட், சித்தங்கேணி.
- பருத்தித்துறை றோட், புத்தூர்.


## மரண அறிவித்தல்



### இளையதம்பி யோகராசா

மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி யோகராசா 25.01.2020 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இளையதம்பி - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதிகளின் மருமகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், தயாபரன் (மீசாலை), தங்கராணி (கெருடாவில்), யோகராணி (கனடா), யோகேஸ்வரன் (கனடா), தவயோகராணி (நெல்லியடி), பிறேமகலா (அல்லாரை), காலஞ்சென்ற பரமேஸ்வரன், தவயோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், உதயரஜனி, ராகவன், ஜெகதீஸ்வரன், சந்திரிக்கா, ரவிச்சந்திரன், பாலச்சந்திரன், வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நிதர்சன், நிவாசன், நிசாந்தன், ஜீவிதா, நிஷாகரன், அபினாத், சகானா, கீர்த்தனா, பிரஜித், தக்சா, சச்சுன், மதுசாயினி, லதுசாயினி, கம்ஷிகா, ஆர்னிகன், மிதுலா, வர்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும், மாதவனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (28.01.2020) செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேம்பிராய் இந்துமயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:- குடும்பத்தினர்.**

(IN/12397)(11,17)

**தயாபரன் (மகன்)- 077 404 2545,**
**பா.பிறேமகலா (மகள்) - 077 668 5051, அபி (பேரன் - கனடா)**


## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை

- அதி விரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
- கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பவற்றையும் அனுப்பி கொள்ள முடியும்.
- நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.

**20 வருடகால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாம்**

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**

1, பிறவுண் வீதி, நாவலர் சந்தி, யாழ்ப்பாணம்.
**021 222 6113**




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.01.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.